விலை ரூபா 20.00



முகமாற்று அறுவைச் சிகிச்சை

பக்கம் 09



கட்டாய விடுமுறை

பக்கம் 11



கடமை இன்னும் முடிந்துவிடவில்லை

பக்கம் 14



காலியில் இங்கிலாந்து காலி

பக்கம் 27

பக்கங்கள்: 32

www.onlineuthayan.com

# உதயன்

சுடர் 27
கதிர் 125

வள்ளுவர் ஆண்டு 2043 பங்குனி 17 வெள்ளிக்கிழமை (30/03/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

# மூன்றாம் தரப்பின்றி பேசிப் பயனில்லை

## அரசின் இழுத்தடிப்பு தொடருமேயன்றி வேறெதுவும் கிடையாது என்கிறார் சுரேஷ்

யாழ்ப்பாணம், மார்ச் 30

மூன்றாம் தரப்பு ஒன்றின் மத்தியஸ்தம் அல்லது அனுசரணை இல்லாமல் இலங்கை அரசுடன் இனப் பிரச்சினைக்கான தீர்வு பற்றிய பேச்சுக்களில் ஈடுபடுவது பயன்தராது. அவ்வாறான பேச்சுக்கள் மூலம் எந்தப் பிரயோசனமும் இல்லை என்றே கூட்டமைப்பு கருதுகிறது. இதுவரை காலமும் நடைபெற்ற பேச்சுக்கள் எமக்கு இதனையே வெளிப்படுத்தியுள்ளன. எனவே மூன்றாம் தரப்பின் உதவியுடன் பேச்சுக்களைத் தொடர்வதற்கு அரசு முன் வர வேண்டும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் அதன் பேச்சாளருமான சுரேஷ்

04



## முன்னாள் போராளிகள் 384 பேர் விடுவிப்பு

கொழும்பு, மார்ச் 30

புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் போராளிகள் 384 பேர் நேற்று சமூகத்துடன் இணைக்கப்பட்டுள்ளனர்.

இதற்கான விசேட நிகழ்வு நேற்றுக் காலை வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெற்றது.

2,170 பெண்கள் உள்ளடங்கலாக 10,490 முன்னாள் புலிப் போராளிகள் ஒரு வருடகால புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டு சமூகத்துடன் இணைக்கப்பட்டுள்ளனர் எனவும், 2012 ஆம் ஆண்டின் மத்தியில் அனைத்து

04

## ஐ.தே.கவின் யாப்பில் திருத்தம்

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமைத்துவம் மற்றும் ஏனைய உயர் பதவிகளுக்கான தேர்தலை வருடா வருடம் நடத்தாதிருக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாகக் கட்சியின் தகவல்கள் தெரிவிக்கின்றன. கட்சித் தலைமையகமான சிறிகொத்தா தாக்கப்பட்டமை தொடர்பில், ஸ்ரீநாத் பெரேரா குழு தாக்கல் செய்த அறிக்கையின் அடிப்படையில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்படி, கட்சியின் தலைமைத்துவம் உள்ளிட்ட பதவிகளுக்கான தேர்தல்களை நடத்துவதற்கான யாப்பில் சீர்திருத்தம் மேற்கொள்ள விருப்பதாகக் கூறப்படுகிறது.

## விசேட விடுமுறை அரசு அறிவிப்பு

வெசாக் பூரணையை முன்னிட்டு மே மாதம் 7ஆம் திகதியை விசேட விடுமுறை தினமாக அரசு பிரகடனம் செய்துள்ளது. மே மாதம் 7ஆம் திகதி மேலதிக விடுமுறை தினமாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளதென அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

## தமிழ் இளையோர் மாநாடு லண்டனில்

உலகெங்கும் வாழும் தமிழ் இளையோர்கள் பலர் கல்வி சார்ந்த துறைகளிலும், விளையாட்டு, கலை மற்றும் பண்பாட்டில் அதிகூடிய செயற்திறனுடன் அறிஞர்களாக சிறந்து விளங்குகின்றார்கள். இவர்களை ஒன்றிணைக்க உலகளாவிய தமிழ் இளையோர் அவை தனது இரண்டாவது மாநாட்டை ஏப்ரல் 7ஆம், 8ஆம் திகதிகளில் லண்டன் நகரில் நடத்தவுள்ளது. தமிழ் இளையோருக்காக பணிசெய்பவர்களை இந்த மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. பங்கேற்க விரும்பும் அமைப்புகள் www.gtyl.org என்னும் முகவரியில் மேலதிக தகவல்களைப் பெறமுடியும்.

## மாணவிகள் மீது துஷ்பிரயோகம் அதிபர் கைது

பாலியல் துஷ்பிரயோகச் சம்பவம் தொடர்பில் மாரவில பிரதேச பாடசாலை அதிபர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளார். சிறுவர் பாதுகாப்பு திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தகவலுக்கு அமைய சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர் நேற்றுப் பகல் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். பாடசாலை அதிபரால் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டதாக கூறப்படும் 10 வயதான ஐந்து மாணவிகள் மேலதிக பரிசோதனைக்காக மாரவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

## இணையத்தளங்களுக்கு அரசு அனுமதி

புதிதாக 13 இணையத்தளங்களுக்கு நேற்று ஊடக அமைச்சு அங்கீகாரம் வழங்கியதுடன் அவற்றின் ஆறு இணையத்தளங்களுக்கான அனுமதிப் பத்திரங்களை அமைச்சரவைப் பேச்சாளரும் தகவல் ஊடகத்துறை பதில் அமைச்சருமான லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன கையளித்தார். தகவல் திணைக்களத்தில் நேற்றுக் காலை இந்த நிகழ்வு இடம்பெற்றது.

## ஐ.நா. தீர்மானம் குறித்து அரசின் முடிவு விரைவில்

### அமைச்சர் பீரிஸின் கருத்து அரசுடையதல்ல என்கிறார் யாப்பா

கொழும்பு, மார்ச் 30

ஜெனிவாத் தீர்மானம் தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் வெளியிட்டுள்ள கருத்துகள் அரசின் கருத்தல்ல. ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம் குறித்து நாம் இன்னும் எந்தவொரு முடிவையும் எடுக்கவில்லை. அதுகுறித்தான தமது நிலைப்பாடு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் என்று இலங்கை அரசு நேற்று திட்டவட்டமாக அறிவித்தது.

அதேவேளை, இலங்கையில் இந்தியாவுக்கு முதலீட்டு வாய்ப்புகளை வழங்கக்கூடாது எனத் தனது பங்காளிக் கட்சியான ஜாதிக ஹெல உறுமய வெளியிட் டுள்ள கருத்துக்கும் இலங்கை அரசு மழுப்பல் போக்கில் பதிலளித்துள்ளது. ஹெல உறுமயவின் கருத்து

04

## பரிந்துரைகளை செயற்படுத்தினால் தெரிவுக்குழுவுக்கு ஐ.தே.க. வரும்

### செயற்குழுவில் விசேட தீர்மானம்

கொழும்பு, மார்ச் 30

இலங்கைக்கு எதிரான ஜெனிவா பிரேரணை நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து இனியும் தாமதிக்காது உடனடியாக நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை அரசு நடைமுறைப்படுத்த வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையை அரசியல் தீர்வுத் திட்டத்தைத் தயாரிப்பதற்கான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் ஆராய்வதற்கு அரசு இணக்கம் தெரிவித்தால் மாத்திரமே அத்தெரிவுக்குழுவுக்கு ஐ.தே.கவின் பிரதிநிதிகள் நியமிக்கப்படுவர் என்றும் இதன்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை 4 மணிக்கு ஐ.தே.கவின் தலைமையகமான சிறிகொத்

04

## அமெரிக்காவின் இரட்டை வேடம்

கொழும்பு, மார்ச் 30

மனித உரிமைகள் விவகாரத்தில் அமெரிக்கா இரட்டைக் கொள்கையைக் கடைப்பிடிக்கின்றது எனக் கடும் விசனத்தை வெளியிட்டுள்ள இலங்கை அரசு, இஸ்ரேலுக்குள் கண்காணிப்புக்குழுவை அனுப்புவதற்கு எதிர்ப்பை வெளியிடும் அமெரிக்கா, எமது விவகாரத்திற்கு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை விரும்புவது ஏன் என்றும் கேள்வி எழுப்பியுள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் மாநாடு நேற்றுக்காலை அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட பதில் அமைச்சரவைப் பேச்சாளரும், பதில் ஊடகத்துறை அமைச்சருமான லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன இஸ்ரேல் மனித உரிமை

04

## பளை வரை வந்தது 'லக்ஸபான' மின்சாரம்

யாழ்ப்பாணம், மார்ச் 30

20 வருட இடைவெளியின் பின்னர் மீண்டும் லக்ஸபான மின்சாரம் நேற்று முதல் பளைப் பகுதிக்கு வழங்கப்பட்டுள்ளது. நாட்டில் ஏற்பட்ட போர்ச் சூழல் காரணமாக 91ஆம் ஆண்டுக்குப் பின்னர் லக்ஸபான மின்விநியோகம் கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்களுக்கு இடைநிறுத்தப்பட்டிருந்தது.

லக்ஸபான மின் விநியோகத்துக்கென நிறுவப்பட்டிருந்த மின் தூண்களும் பல இடங்களில் அகற்றப்பட்டிருந்தன. இந்த நிலையில் போர் முடிவுக்கு வந்த பின்னர் மீண்டும் லக்ஸபான மின் விநியோகத்தை வட பகுதி முழுவதும் வழங்குவதற்கான நடவடிக்கைகள் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டன. இதன் அடிப்படையில் கிளிநொச்சி வரை லக்ஸபான மின் விநியோகம் வழங்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் நேற்று மாலை 3 மணி முதல் பளைப்பகுதிக்கும் லக்ஸபான மின்

04

## ராணுவ நீதிமன்றம் ராஜதந்திரிகளையும் விசாரிக்கும்

கொழும்பு, மார்ச் 30

இலங்கை இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜகத் ஜயசூரியவினால் நியமிக்கப்பட்டிருக்கும் இராணுவ நீதிமன்றம் தேவை ஏற்பட்டால் இராஜதந்திரப் பதவிகளில் இருக்கும் படை அதிகாரிகளைக் கூட அழைத்து விசாரிக்கும் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவன் வணிகசூரிய தெரிவித்தார்.

இலங்கை அரசினால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்

04

## சமாதான ஒப்பந்தம் நீடித்திருந்தால் பிரபாகரன் தமிழீழத்தின் ஜனாதிபதி

### ரணில் விஸா எடுத்தே சென்றிருக்கவேண்டும் என்கிறார் விமல்

கொழும்பு, மார்ச் 30

ரணில் கைச்சாத்திட்ட போர் நிறுத்த ஒப்பந்தம் இன்றுவரை நீடித்திருந்தால், தமிழீழத்தின் ஜனாதிபதி ஆசனத்தில் பிரபாகரன் அமர்ந்திருப்பார் எனக் கூறிய அமைச்சர் விமல் வீரவன்ஸ, பிரபாகரனைப் பார்ப்பதற்கு ரணில் வீஸா எடுத்துத்தான் சென்றிருக்க வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

தமிழீழ இராச்சியம் நிறுவப்பட்டிருந்தால் எண்ணெய் மற்றும் இயற்கை வாயு வளங்கள் எமக்குச் சொந்தமில்லாமல் போயிருக்கும். இன்று முழு நாடும் இரண்டாகப் பிளவுபட்டு, தேச எல்லைகளுக்காக செத்துமடிந்து, சைப்பிரஸைப் போல் நடுவில் மனித நடமாட்டமற்ற பகுதி போன்ற நிலை ஏற்பட்டிருக்கும் என்றும் கூறியுள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே

04

## பாடசாலை வகுப்பறைக்குள் மறைந்திருந்த 'ஷெல்'

### கிளாலியில் பரபரப்பு

பளை, மார்ச் 30

பாடசாலை ஒன்றின் வகுப்பறைக்குள் வெடிக்காத நிலையில் ஷெல் இருந்ததால் மாணவர்களும், பாடசாலை ஆசிரியர்களும், பெற்றோர்களும் அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளனர்.

கிளாலி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையிலேயே நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:

குறித்த பாடசாலையின் வகுப்பறைக்குள் கதிரை ஒன்றை வைத்து அமரும்போது,

04

# மூன்று மாதங்களில் மட்டும் 35 பேரைக் காணவில்லை

**அரசுக்கு எதிரானவர்கள் மீதான அரசியல் பழிவாங்கல் நடவடிக்கையாக இடம்பெறும் இத்தகைய கடத்தல் சம்பவங்களின் பின்னணியில் அரசே செயற்படுகிறது.**

கொழும்பு,மார்ச் 30

2009ஆம் ஆண்டு உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்துள்ள போதும் காணாமல் போதல் சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதாக சுதந்திரத்திற்கான களம்' எனும் இலங்கையின் மனித உரிமைக் குழு தெரிவித்துள்ளது.

காணாமல் போதல் சம்பவங்களை முடிவுக்குக் கொண்டுவருவதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசு பரப்புரை செய்துவருகின்ற போதும், இறுதி மூன்று மாதங்களில் மட்டும் 35 பேர் காணாமல் போயுள்ளதாக 'சுதந்திரத்திற்கான களம்' அமைப்பின் பேச்சாளர் பிறிட்டோ பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். அரசு இதுவிடயத்தில் உரிய முறையில் கவனத்தில் எடுப்பதாகத் தெரியவில்லை என அவர் விசனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசுக்கு எதிரானவர்கள் மீதான அரசியல் பழிவாங்கல் நடவடிக்கையாக இத்தகைய கடத்தல் சம்பவங்களின் பின்னணியில் அரசே செயற்படுகிறது. அண்மையில் ஒரு நகரசபைத் தலைவரைப் படையினர் கடத்த முயன்றமை வெளிப்படையாகக் கண்டறியப்பட்டுள்ளது.

தேசிய நல்லிணக்கம் தொடர்பான அரசின் அணுகுமுறை நேர்மையானதாக இல்லை. தமிழ்க் கிராமங்களின் பெயர்களைச் சிங்களத்திற்கு மாற்றுகின்றனர். தமிழர் பிரதேசங்களில் முன்னரைவிடப் பாரிய அளவில் இராணுவத்தின் பிரசன்னம் உள்ளது. கருத்துச் சுதந்திரம் மறுக்கப்பட்டுள்ள நிலை தமிழ் மக்களைப் பெரிதும் கவலையடையச் செய்துள்ளது.

காணாமல் போன மற்றும் கொல்லப்பட்டவர்களுக்காகத் துயர்பகிரும், அவர்களை நினைவுகூரும் உரிமைகூட அவர்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது.

நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறு ஐ.நா மனித உரிமைகள் சபையில் கடந்த வாரம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இறுதிக்கட்டப் போரின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்களை உரிய முறையில் விசாரிக்குமாறும் அந்தத் தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

வெளியுலகத்தின் அழுத்தமின்றி இலங்கை நடவடிக்கை எடுக்குமென்பது சந்தேகத்திற்குரியது. ஆணைக்குழு அறிக்கைகளின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தாத நடைமுறை வரலாறுகள் நிறைய உண்டு -என்றார். (த)

## ஜெனிவா மாநாடு விவாதம் தேவை

கொழும்பு,மார்ச் 30

ஜெனிவா மனித உரிமைகள் சபை அமர்வுகளில், இலங்கை மீதான தீர்மானம் நிறைவேற்றப்பட்டமை தொடர்பில் விவாதம் நடத்தப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியல்ல இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

மனித உரிமைகள் சபை அமர்வுகளில் கலந்து கொண்ட அமைச்சர்களான ஜீ.எல். பீரிஸ் மற்றும் மஹிந்த சமரசிங்கவுடன் விவாதம் நடத்த விரும்புவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரச தொலைக்காட்சி ஒன்றிலோ அல்லது தனியார் தொலைக்காட்சி ஒன்றிலோ விவாதம் நடத்தத் தயார் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார். இது தொடர்பில் லக்ஸ்மன்கிரியல்ல எழுத்து மூலமான கோரிக்கை ஒன்றையும் விடுத்துள்ளார். (த)

## சிறிகொத்த அறிக்கை பக்கச்சார்பானது

சிறிகொத்த தாக்குதல் சம்பவம் தொடர்பான அறிக்கை ஒரு பக்கச்சார்பானது என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச தரப்பினர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இலங்கைக்கு எதிராக சனல்-4 ஊடகம் வெளியிட்ட காணொலியைப் போன்று அது ஒரு பக்கச்சார்பானது என அவர் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி சட்டத்தரணி ஸ்ரீநாத் பெரேரா தலைமையிலான குழுவினர், சிறிகொத்த தாக்குதல் சம்பவம் குறித்த விசாரணைகளை நடத்தி அறிக்கை சமர்ப்பித்துள்ளனர். இந்த அறிக்கை ஒரு தலைப்பட்சமானது என சஜித் தரப்பினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை, சஜித் பிரேமதாச ஆர்ப்பாட்டக்காரர்களை ஊக்குவிக்கும் வகையில் செயற்பட்டதாக அந்த அறிக்கையில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. எனினும், இந்தக் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை என சஜித் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளாத சிலருக்கு எதிராகப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் சஜித் தரப்பினர் குறிப்பிட்டுள்ளனர். (த)



கைத்தொழில்,வணிகத் துறை அமைச்சர் றிசாத் பதியுதீனுக்கும்,பலஸ்தீன சுற்றுலா மற்றும் நீரியல்வளத் துறை அமைச்சர் டாக்டர் கவுலுட் பிரான்ஸிஸ் டெப்பஸ் அபூ தய்யாவுக்குமிடையில் நேற்று இடம் பெற்ற சந்திப்பின் போது எடுக்கப்பட்ட படம்.

## 3,908 மாணவர்களுக்கு 9 பாடங்களிலும் 'ஏ'

கொழும்பு,மார்ச் 30

கடந்த வருடம் இடம்பெற்ற ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் பாடசாலைப் பரீட்சார்த்திகளில் 3 ஆயிரத்து 908 பேர் 9 பாடங்களில் 'ஏ' தர சித்தியைப் பெற்றுள்ளனர். இதேவேளை 12 ஆயிரத்து 795 பேர் 9 பாடங்களிலும் சித்தியடையத் தவறியுள்ளதாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள புள்ளி விவர அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இந்த முறை சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகளில் 60.8 வீதமானோர் உயர்கல்வியைத் தொடர்வதற்குத் தகுதி பெற்றுள்ளனர். இது கடந்த 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 0.3 சதவீதம் அதிகமாகும்.

சாதாரண தரப் பரீட்சைக்கு 4 லட்சத்து 43 ஆயிரத்து 298 பேர் தோற்றினர். இவர்களில் 2 லட்சத்து 70 ஆயிரத்து 332 பேர் பாடசாலைப் பரீட்சார்த்திகள். இவர்கள் தொடர்பான புள்ளி விவரங்களையே பரீட்சைத் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

9 பாடங்களிலும் 'ஏ' தர சித்திபெற்ற 3 ஆயிரத்து 908 மாணவர்களில், மேல்மாகாணத்தைச் சேர்ந்தவர்களே அதிகமாக உள்ளடங்குகின்றனர். அதேபோன்று 9பாடங்களிலும் சித்தியடைய தவறிய 12 ஆயிரத்து 795 மாணவர்களில், ஊவா மாகாணத்தை சேர்ந்தவர்களே அதிகமாக உள்ளடங்குகின்றனர்.

மேலும் கணித பாடத்தினைப் பொறுத்த வரையில் கடந்த 2010ஆம் ஆண்டு 60.38 சதவீதத்தினர் சித்தியடைந்த போதும் கடந்த ஆண்டு இடம்பெற்ற சாதாரண தரப் பரீட்சையில் 55.33 சதவீதத்தினரே சித்தியடைந்துள்ளனர்.

ஆங்கில பாடத்தைப் பொறுத்த வரையில் 2010ஆம் ஆண்டு சாதாரண தரப் பரீட்சையில் 42.36 சதவீதத்தினர் சித்தியடைந்தபோதும் 2011ஆம் ஆண்டு பரீட்சையில் 44.57 சதவீதமாக அதிகரித்துள்ளது. விஞ்ஞான பாடத்தைப் பொறுத்த வரையில் 2010ஆம் ஆண்டு சாதாரண தரப் பரீட்சையில் 61.72 சதவீதத்தினர் சித்தியடைந்துள்ளனர். இது 2011 ஆம் ஆண்டு 62.40 சதவீதமாக அதிகரித்துள்ளது.

வரலாற்றுப் பாடத்தைப் பொறுத்த வரையில் 73.78 சதவீதத்தினர் 2010ஆம் ஆண்டு சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்த போதும் கடந்த ஆண்டு 66.45 சதவீதமாக குறைவடைந்துள்ளது - என்று அந்த அறிக்கையில் உள்ளது. (த-5)

## குவைத்துடன் உடன்படிக்கை

இலங்கைப் பணியாளர்களின் பாதுகாப்பு, உரிமை என்பவற்றை உறுதிப்படுத்துவது தொடர்பில் குவைத் நாட்டுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றை கைச்சாத்திட இலங்கை தீர்மானித்துள்ளது.

வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் நலன்புரி அமைச்சர் டிலான் பெரேராவினால் முன்வைக்கப்பட்ட இது தொடர்பான அமைச்சரவை பத்திரம் ஒன்றுக்கும் அனுமதி கிடைத்துள்ளது. (த)

## தெரிவுக்குழுவுக்கு வாருங்கள்

### கூட்டமைப்பை அழைக்கிறது ஹெல உறுமய

கொழும்பு,மார்ச் 30

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவினூடாகவே அரசியல் தீர்வு எட்டப்படவேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தெரிவுக்குழுவில் பங்கேற்கவேண்டும். இதற்கு இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும். இவ்வாறு ஜாதிக ஹெல உறுமய கோரியுள்ளது.

அக்கட்சியின் ஊடகப் பேச்சாளர் நிஷாந்த ஸ்ரீ வர்ண சிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:

ஜனாதிபதியால் தன்னிச்சையாக அரசியல் தீர்வை வழங்கமுடியாது. நாடாளுமன்றத்தின் ஊடாகவே அவர் இந்த விவகாரத்தைக் கையாள வேண்டும். இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதற்கான சிறந்த வழிமுறையே நாடாளுமன்றத் தெரிவுக்குழுவாகும். இதில் கூட்டமைப்பு கட்டாயம் பங்கேற்கவேண்டும். அதற்கான கடப்பாடும் கூட்டமைப்புக்கு உள்ளது.

இங்கு என்ன நடந்தாலும் கூட்டமைப்பினர் முதலில் இந்தியாவிடம்தான் கூறுகின்றனர். எனவே, தெரிவுக்குழுவில் கூட்டமைப்பைப் பங்கேற்கவைக்கும் வகையில் இந்தியா அக்கட்சிக்கு அழுத்தம் பிரயோகிக்கவேண்டும். -என்றார். (த)

## இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு புலம்பெயர் தமிழர் பெரும் தடை

### குற்றம் சாட்டுகிறது அரசு

கொழும்பு,மார்ச் 30

இனப் பிரச்சினைக்குக் காத்திரமான தீர்வினை எட்டும் முனைப்புக்களுக்கு புலம்பெயர் தமிழ் சமூகம் பெரும் தடையாக அமைந்துள்ளது என அரசின் சிரேஸ்ட பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரிவினைவாத சக்திகளுக்கு மேற்குலக நாடுகள் துணை நிற்கும் வரையில் இலங்கையில் மெய்யான நல்லிணக்கம் என்பது யதார்த்தப்படாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது சில சக்திகள் கடுமையான தாக்கத்தைச் செலுத்தி வருவதாக அவர் தெரிவித்துள்ளார். இறுதிக் கட்ட யுத்தத்தின் போது உயிரிழந்த பொதுமக்களின் எண்ணிக்கை தொடர்பில் வெளிநாடுகளில் வாழும் தமிழர் அமைப்புக்களும், சர்வதேச ஊடகங்களும் முரண்பட்ட புள்ளி விவரங்களை வெளியிட்டு வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ள அவர் ஒபாமாவுக்கான தமிழர் அமைப்பு போன்றவை சர்ஜன வாக்கெடுப்பின் மூலம் இலங்கையைப் பிளவடையச் செய்யும் முனைப்புக்களை ஆரம்பித்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

சூடானில் நடத்தப்பட்டதைப் போன்றதொரு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தி நாட்டை பிளவுபடுத்த சதித் திட்டம் தீட்டப்படுவதாகவும்,பிரிவினைவாதத்தைத் தூண்டும் தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது குறித்து வெளிநாட்டு அரசுளுடன் பேச்சு நடத்தப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (த)

## புதிய தொழிற்சங்கம்

ஜனநாயக பொது ஊழியர் சங்கம் எனும் பெயரிலான புதிய தொழிற்சங்கமொன்றை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபித்துள்ளது.

ஆரம்ப நிகழ்வு நீதி அமைச்சில் நேற்று முன்தினம் புதன் கிழமை நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையில் நடைபெற்றது. இத்தொழிற்சங்கத்தின் தலைவராக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம், செயலாளராக நீதி அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் எம்.நயீமுல்லாஹ், பொருளாளராக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.எம்.அஸ்லம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (த)

## வெளிநாடு ஓடினார் மேர்வின்



கொழும்பு,மார்ச் 3

பொதுமக்கள் தொடர்பு அமைச்சர் மேர்வின் சில்வா, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மத்திய செயற்குழுக் கூட்டத்தில் பங்கேற்காது வெளிநாட்டுப் பயணமொன்றை மேற்கொண்டுள்ளார் எனத் தெரியவருகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரி மாளிகையில் மத்திய செயற்குழுக் கூட்டம் நடைபெறவுள்ளது. இந்நிலையில், அமைச்சர் மேர்வின் சில்வா மூன்று வார கால வெளிநாட்டுப் பயணமொன்றை மேற்கொண்டுள்ளதாகவும், ஜோதிடர்களின் ஆலோசனைக்கு அமைய வெளிநாடு சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மத்திய செயற்குழுக் கூட்டத்தில் அமைச்சருக்கு எதிராக ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டால் அதிலிருந்து மீளும் நோக்கில் இந்த வெளிநாட்டுப் பயணம் அமைந்துள்ளது என கட்சியின் சிரேஸ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலமாகக் கட்சி ஒழுக்க விதிகளுக்குப் புறம்பான வகையில் அமைச்சர் கருத்துக்களை வெளியிட்டு வருவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (த)

# ‘லிப்ற்’ வசதிகள் இன்றி சிரமத்தில் சேவைகள்

## பணம் கொடுத்து ஒரு வருடமாகியும் ஏமாற்றுகிறது மின்சார சபை: போதனா வைத்தியசாலை அவலம்

**யாழ்ப்பாணம், மார்ச் 30**

**யாழ். போதனா வைத்திய சாலையில் ‘லிப்ற்’ வசதிகள் இன்மையால் பெரும் சிரமத்தின் மத்தியில் சேவைகள் தொடர்கின்றன. இதனால் நோயாளர்கள் மட்டுமன்றி நோயாளர்களைத் தூக்கிச் செல்வோரும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். யாழ்.போதனா வைத்திய சாலையின் புதிய விடுதிகள் 3, 4 மாடிகளில் அமைக்கப்பட்டுள்ளபோதும் அவற்றுக்கான லிப்ற் வசதிகள் இன்னமும் ஏற்படுத்தப்படவில்லை.**

இந்த நிலையில் தினமும் இரவு பகலாக தொண்டர்களும் வைத்தியசாலைச் சிற்றூழியர்களும் நோயாளர்களைத் தூக்கிச் சென்று வருகின்றனர்.

சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட நோயாளர்கள் உட்பட அனைத்து அவசர நோயாளர்களும் இவ்வாறே கொண்டு செல்லப்படுகின்றனர்.

சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட நோயாளர்கள் இவ்வாறு கொண்டு செல்லப்படும் போது அவர்கள் பெரும் உபாதைகளுக்கு ஆளாகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இரவு நேரங்களில் சில சமயங்களில் ஊழியர்கள் பற்றாக்குறை நிலவும் பட்சத்தில் அவசர சிகிச்சைக்கான நோயாளர்களை உடனடியாகக் கொண்டு செல்ல முடியாத நிலைமை ஏற்படுவதாகவும் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, இரவு நேரங்களில் குறிப்பிட்ட ஒரு விடுதிக்கு இரு தாதியர்கள் என்ற வீதத்தில் கடமையில் இருக்கும் நிலையில் இவர்களில் ஒருவர் அவசர நோயாளருடன் செல்லும் பட்சத்தில் விடுதியில் தனியே ஒரு தாதி மட்டுமே சேவையாற்ற வேண்டிய நிலைமையும் ஏற்பட்டுள்ளது. இதனால் அவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த வைத்தியசாலைக்கான லிப்ற் அமைப்பதற்குத் தேவையான நிதியை யாழ். போதனா வைத்தியசாலை இலங்கை மின்சார சபையிடம் கையளித்து ஒரு வருடத்தை எட்டும் நிலையிலும் இதற்கான ஆரம்ப கட்ட வேலைகள் கூட இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக யாழ். போதனா வைத்தியசாலைப் பதில் பணிப்பாளர் எஸ். ஸ்ரீ பவானந்தராஜாவிடம் கேட்டபோது:

‘‘லிப்ற் அமைப்பதற்கு என்று கடந்த வருடம் மே மாதம் யாழ். மின்சார சபையிடம் வைத்தியசாலை நிர்வாகம் 81 லட்சம் ரூபாவை வழங்கியது.

6 மாத காலப் பகுதிக்குள் லிப்ற் அமைத்துத் தருவதாகவும் அவர்கள் குறிப்பிட்டிருந்தனர்.

10 மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் இதற்கான நடவடிக்கைகள் எதுவும் செய்யப்படவில்லை.

லிப்ற் அமைப்பதற்குரிய உபகரணங்களை வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்து தருவதாகவும் தெரிவித்திருந்தனர். உபகரணங்கள் வந்து சேர்ந்துள்ளனவா அல்லது நாம் வழங்கிய பணத்துக்கு என்ன நடந்தது என்பது குறித்து இதுவரை எந்த விதமான தகவல்களும் இல்லை’’ என்று தெரிவித்தார்.

இது குறித்து இலங்கை மின்சார சபையின் பணிப்பாளருடன் தொடர்பு கொள்ள முயற்சித்த போதும் தொடர்பு முடியவில்லை. (ம-4)

## சந்தேகநபர் பிணையில் விடுவிப்பு

மீசாலையில் குடும்பப் பெண் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தில் குற்றம் சாட்டப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த, கொலை செய்யப்பட்ட பெண்ணின் கணவர் யாழ். மேல் நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

கடந்த வருடம் மார்ச் 6ஆம் திகதி குகதாஸ் சாந்தினி மீசாலையில் வீடு ஒன்றின் பின்புறம் பற்றைக்குள்ளிருந்து சடலமாக மீட்கப்பட்டிருந்தார். கனடாவிலிருந்து வந்திருந்த அவரது கணவர் உட்பட 5பேர் இவரைக் கடத்திச் சென்று கொன்றனர் என்று பொலிஸார் குற்றஞ் சாட்டி இருந்தனர்.

சாவகச்சேரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்த ஏனைய சந்தேகநபர்கள் ஏற்கனவே பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முதலாவது சந்தேகநபரும் கொலையான பெண்ணின் கணவருமான செல்லத்துரை குகதாசனை பிணையில் விடுவிக்கும்படி சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தா மன்றில் மனுச்செய்திருந்தார். அதனைப் பரிசீலித்த நீதிபதி ஜே. விஸ்வநாதன் முதலாவது சந்தேகநபரையும் நேற்றுப் பிணையில் செல்ல அனுமதி வழங்கினார். (உ-4)

## தாக்கப்பட்டார் பல்கலை மாணவர்

யாழ்ப்பாணம், மார்ச் 30

சிரேஷ்ட மாணவர்களால் தாக்கப்பட்ட நிலையில் யாழ். பல்கலைக்கழக முதலாம் யாழ். வருட மாணவர் ஒருவர் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி, முழங்காவிலைச் சேர்ந்தவரும் கலைப் பீடத்தில் கற்பவருமான தில்லைநாதன் தனராஜ் (வயது - 21) என்பரே தாக்குதலுக்கு இலக்கானார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாகத் தெரிய வருவதாவது:

நேற்றுமுன்தினம் புதன் கிழமை கலைப்பிரிவில் கற்கும் குறித்த முதலாம் வருட மாணவர் விரிவுரைகள் முடிந்து வெளியே வந்துள்ளார். அப்போது காத்திருந்த சிரேஷ்ட மாணவர்கள் மூவர் இவரைச் சரமாரியாகத் தாக்கியதாகக் கூறப்படுகின்றது.

இதனால் காது கேட்கும் திறன் பாதிப்படைந்த நிலையில் குறித்த மாணவர் அன்றைய தினம் மாலை யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். (ங-15)

## கோமகன் சொன்ன கதை

‘‘கடந்த ஜனவரி 24ஆம் திகதி செவ்வாய்க்கிழமை புதிய மகசின் சிறையில் ஏற்பட்ட சம்பவத்தில் மயிரிழையில் உயிர்தப்பினேன். அன்று இடம்பெற்ற சம்பவத்தால் ஜனவரி மாதப் பொதுக்கூட்டத்தில் என்னால் கலந்து கொள்ள முடியாமல் போய் விட்டது’’ என்று நேற்று பொலிஸ் பாதுகாப்புடன் யாழ்.மாநகர சபைக்கூட்டத்துக்கு சமூகமளித்த மாநகர சபை உறுப்பினர் மு.கோம கன் கூறினார்.

யாழ்.மாநகர சபையின் மூன்றாவது மாதாந்தப் பொதுக் கூட்டத்தில் கோமகன் கூறியதாவது:

இந்தத் தாக்குதலில் வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய சிங்களக் கைதிகள் எம்மை வன்செயலில் ஈடுபடுமாறு வற்புறுத்தினர். இதனால் தமிழ் அரசியல் கைதிகள் களுத்துறைக்கு மாற்றப்பட்டனர். இதன் போது எமது நீதிமன்ற ஆவணங்கள், சிறைச்சாலை நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்ட தேசிய அடையாள அட்டைகள், பணம் என்பன தீயில் எரிந்து போயின. எமது மாநகர சபை உறுப்பினருக்கான அடையாள அட்டையும் எரிந்து போனது.

சிறைச்சாலையில் இத்தகைய சம்பவங்கள் அடிக்கடி நிகழ்கின்றன. இதனால் தமிழ் அரசியல் கைதிகள் ஒரு பாதுகாப்பற்ற சூழலில் உயிரைக் கையில் பிடித்த வண்ணமே சிறையில் உள்ளார்கள். - என்றார். (உ-7)

# அரசியல் கைதிகளை விடுவிக்க வலியுறுத்தி மாநகரசபை தீர்மானம்

யாழ்ப்பாணம், மார்ச் 30

தமிழ் அரசியல் கைதிகள் விசாரணை செய்யப்பட வேண்டும் அல்லது விடுதலை செய்யப்பட வேண்டும். குறிப்பாக கடந்த பத்தொன்பது மாதங்களாக விசாரணை எதுவுமின்றி சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுச் சிறையில் வைக்கப்பட்டுள்ள யாழ். மாநகரசபை உறுப்பினர் மு.கோமகனை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஜனாதிபதி, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆகியோரைக் கோரும் தீர்மானம் நேற்று வியாழக் கிழமை நடைபெற்ற யாழ். மாநகர சபையின் இந்த மாதத்துக்கான கூட்டத்தில் மீண்டும் நிறைவேற்றப் பட்டது.

யாழ். மாநகர சபையின் மார்ச் மாத பொதுக் கூட்டம் நேற்று வியாழக்கிழமை யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. பலத்த பாதுகாப்புடன் கூட்டத்துக்கு அழைத்து வரப்பட்டிருந்த உறுப்பினர் கோமகன் சிறையில் தனக்கு ஏற்பட்ட அனுபவங்களைக் கூறி தமிழ்க் கைதிகளை விடுவிக்கக் கோரும் பிரேரணையைச் சமர்ப்பித்தார்.

> அனைத்து உறுப்பினர்களும் பிரேரணைக்கு ஒருமனதாகத் தமது ஆதரவை வழங்கியதுடன் ஏற்கனவே சபையில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதையும் சுட்டிக்காட்டினர்.

பிரேரணை தொடர்பாக ஆளுநர், எதிரணி உறுப்பினர்கள் தமது கருத்துக்களைத் தெரிவித்தனர். அனைத்து உறுப்பினர்களும் பிரேரணைக்கு ஏக மனதாகத் தமது ஆதரவை வழங்கியதுடன் ஏற்கனவே சபையில் இத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதையும் சுட்டிக்காட்டினர். அது தொடர்பாக எந்த ஒரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் கண்டனம் தெரிவித்தனர்.

நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை உடன் செயற்படுத்த ஜனாதிபதியையும் ஏனைய அதிகாரிகளையும் கோரியதுடன் நடவடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்தில் அடுத்து வரும் கூட்டங்களை சபை ஒட்டு மொத்தமாகப் புறக்கணிக்க வேண்டும், பட்டினி கிடக்க வேண்டும் என அடுத்த மாதம் இடம்பெறவுள்ள கூட்டத்தில் தீர்மானிக்க வேண்டும் எனவும் கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. (உ-7)

# எரிபொருள்களின் விலை உயர்வால் குடாநாட்டு சுற்றுலாத்துறை வீழ்ச்சி

## வெறிச்சோடும் ஹோட்டல்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 30

எரிபொருள் விலையேற்றத்தின் பின்பு யாழ். குடாநாட்டில் சுற்றுலாத்துறை வீழ்ச்சியடைந்து செல்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:-

கடந்த பெப்ரவரி மாதம் எரிபொருள் விலை அதிகரிப்பைத் தொடர்ந்து குடாநாட்டுக்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சியேற்பட்டுள்ளது.

யாழ்.குடாநாட்டுக்கு வெளிநாட்டு பயணிகளைக் காட்டிலும் தென் பகுதியிருந்தே அதிக எண்ணிக்கையான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்தனர்.வார இறுதி நாள்களில் 3 ஆயிரம் முதல் 4 ஆயிரம் வரையில் சுற்றுலாப் பயணிகள் யாழ். மாவட்டத்துக்கு வருகை தந்தனர்.

இந்த நிலைமையால் இங்குள்ள பெரும்பலான ஹோட்டல்களில் 90 வீதமான அறைகள் தினமும் நிரம்பியிருந்தன.தற்போதுஎரிபொருள் விலை அதிகரிப்பைத் தொடர்ந்து இந்த நிலைமை தலைகீழாக மாற்றமடைந்துள்ளது. நகரின் முக்கியமான ஹோட்டல்களிலும் எரிபொருள் விலையேற்றத்துக்கு முன்னர் இருந்த நிலைமை தற்போது 40 வீதத்தால் குறைவடைந்துள்ளது.

பெரும்பாலான சுற்றுலாப் பயணிகள் தற்போது ஹோட்டல்களிலும் பார்க்க விருந்தினர் வீடுகளில் தங்குகின்றனர். விருந்தினர் விடுதிகளில் கட்டணங்கள் குறைவாக இருப்பதனாலேயே அவற்றைநாடுகின்றனர்.

மேலும் பெரிய பஸ்களில் வந்து விகாரையிலும் பொது இடங்களிலும் தங்கும் சுற்றுலாப் பயணிகள் பெரும்பாலும் தற்போது யாழ்ப்பாணத்துக்கு வருவதில்லை எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது. (ம-5)

# நிகழ்வுகள்

**மகளிர் தினம்**

வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் சர்வதேச மகளிர் தின விழா காலை 9.30 மணிக்கு நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பிரதேச செயலர் இரா.வரதீஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கலந்து கொள்வார். (ம-14-253)

**செயலமர்வு**

தென்மராட்சிக் கல்வி வலயத்தின் பிள்ளைநேயப் பாடசாலைகளின் செயற்றிட்டம் தொடர்பான செயலமர்வு காலை 8.30 மணிக்கு வரணி ஆசிரிய வள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

**கௌரவிப்பு**

மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் கொழும்புக் கிளையின் ஏற்பாட்டில் பாடசாலை மட்டத்தில் க.பொ.த. சாதாரண தரத்தில் 9 ‘ஏ’ சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு காலை நடைபெறவுள்ளது. பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெறும் இந்தநிகழ்வில் பழைய மாணவர் சங்கத்தின் கொழும்புக் கிளைச் செயலாளர் திருமதி இந்திராணி பாஸ்கரன் கலந்துகொள்வார். (ம-253)

**பேச்சுப் போட்டி**

யாழ்.வண்ணை சன சமூக நிலையம் நடத்தும் சிவன் பாலர் பாடசாலை மாணவர்களுக்கான பேச்சுப் போட்டி ஆசிரியர் செல்வி அகல்யா தலைமையில் நடைபெறும். (ம-14)

**குருபூசை தினம்**

யாழ்.நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனஸ்தாபகர் ஸ்ரீலஸ்ரீ சுவாமி நாததேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகளின் 31 ஆவது குரு பூசை தினம் நல்லை ஆதீன குருமூர்த்த ஆலயத்தில் நடைபெறவுள்ளது. (ம-14)

**திருப்பாடுகளின் காட்சி**

சாவகச்சேரி புனித லிகோரியார் ஆலயத்தின் கல்வாரிக்களம் திருப்பாடுகளின் காட்சி நிகழ்வு இரவு 7 மணிக்கு ஆலய வளாகத்தில் நடைபெறவுள்ளது. (ம-135)

**பொதுக்கூட்டம்**

வடமராட்சி சிகை ஒப்பனையாளர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் காலை 9.30 மணிக்குச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சங்கத் தலைவர் கே.வேணுகுமார் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி தெற்கு, மேற்குப் பிரதேச செயலாளர் இரா.வரதீஸ்வரன் கலந்து கொள்வார். (ம-8)

**கௌரவிப்பு**

சுழிபுரம் பத்திரகாளி அம்மன் ஆலய நிர்வாகத்தினர் சைவப் புலவர் ஆ.கனகரத்தினத்துக்கு ‘சிவநெறி வித்தியா திலகம் என்னும் சிறப்புப் பட்டத்தை வழங்கி கௌரவித்தனர்.

‘சத்தியின் மகிமை’ என்னும் தலைப்பில் தொடர் சொற்பொழிவை மேற்படி ஆலயத்தில் தொடர்ந்து ஒருவாரம் ஆற்றியமைக்காக இந்தப் பட்டம் வழங்கப்பட்டது. (எ-28)

# முற்போக்கு சோஷலிசக் கட்சி உதயம்

கொழும்பு, மார்ச் 30

ஜே வி பியில் இருந்து விலகிச் சென்ற கிளர்ச்சிக் குழு, முற்போக்கு சோஷலிசக் கட்சி என்ற பெயரில் புதிய கட்சி ஒன்றை ஆரம்பித்துள்ளது. கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே குறித்த கட்சியின் பெயர் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

முற்போக்கு சோஷலிசக் கட்சியின் பொது மாநாடு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 9ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

ஜே வி பியின் கிளர்ச்சிக்குழு புதிய கட்சிக்காக பல்வேறு பெயர்களை பரிசீலித்திருந்தது. இறுதியில் முற்போக்கு சோஷலிசக் கட்சி என்ற பெயரை தெரிவு செய்து அறிவித்துள்ளது.

# பாடசாலை வகுப்பறைக்குள் மறைந்திருந்த 'ஷெல்'

01↘ ஓரிடத்தில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது. அந்த இடத்தில் கல் இருக்கலாம் என்று நினைத்து மாணவர்கள் நிலத்தைக் கையால் தோண்டியுள்ளனர். ஆனால் அங்கு ஷெல் போன்ற ஒரு மர்மப்பொருள் காணப்பட்டதால் பயந்துபோன மாணவர்கள் அது குறித்து வகுப்பாசிரியர் ஊடாக அதிபருக்கு அறிவித்தனர்.

அதிபர் அருகில் உள்ள இராணுவ முகாமுக்கு இது குறித்துத் தெரிவித்தார். படையினர் அவ்விடத்தைத் தோண்டியபோது வெடிக்காத நிலையில் ஷெல் இருப்பதைக் கண்டு அதனை மீட்டுச் சென்றனர்.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பாடசாலையின் வகுப்பறை நிரந்தரமாக அமைக்கப்பட்ட போதிலும் நிலத்திற்கான வேலைகள் இடம்பெறாததால் மணலில் இருந்தே மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

இதேவேளை ஒரு மாதத்துக்கு முன்னரும் இந்தப் பாடசாலை வளாகத்தில் காணப்படும் மரம் ஒன்றின் கீழ் புதையுண்ட நிலையில் வெடிக்காத ஷெல் ஒன்று மாணவர்களால் மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடயம் தொடர்பாக பாடசாலையின் அதிபருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது ''பாடசாலை வளாகப் பகுதி வெடி பொருள்கள் அகற்றும் நிறுவனத்தினரால் முழுமையாகப் பரிசீலிக்கப்பட்ட பின்னரே பாடசாலை இயங்க அனுமதிக்கப்பட்டது. பாடசாலை வளாகத்தில் காணப்பட்ட பள்ளங்கள், வாகனங்களில் தருவிக்கப்பட்ட மணல் கொண்டு மூடப்பட்டன.

இவ்வாறு கொண்டு வரப்பட்ட மணலுக்குள்ளேயே இந்த வெடிபொருள்கள் வந்திருக்க வேண்டும்'' - என்றார். (ஙு-9)

# பரிந்துரைகளை செயற்படுத்தினால் தெரிவுக்குழுவுக்கு ஐ.தே.க. வரும்

01↘ தாவில் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில்இச்செயற்குழுகூடியது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றில் வெளியிட்ட அறிக்கையின் சுருக்கத்தை நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல அங்கு வாசித்தார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பாக ஆராய்ந்து அதன் சாதக, பாதகங்களைக் கண்டறிவதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் மைக்கல் பெரேராவின் தலைமையில் அமைக்கப்பட்ட குழு அதன் ஆய்வுகளை அங்கு வெளியிட்டது.

இதனைத் தொடர்ந்து அங்கு உரையாற்றிய ரணில் விக்கிரமசிங்க, ''நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் நாட்டுக்குத் தேவையான பல நன்மைகள் உள்ளன. அரசியல் தீர்வு உடனடியாக முன்வைக்கப்பட வேண்டியதன் அவசியமும், சுயாதீன ஆணைக்குழுக்களை மீள இயங்கவைப்பதன் அவசியமும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இவ்வாறானதொரு நிலையில் மேற்படி அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதற்காக இந்த நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை உடன் நடைமுறைப்படுத்தப்படவேண்டும்" - என்று அவர் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து ஆணைக்குழுவின் அறிக்கையை அரசு உடன் நடைமுறைப்படுத்தவேண்டும் என்ற பிரேரணை அங்கு நிறைவேற்றப்பட்டது. அதற்காக ஐக்கிய தேசியக் கட்சி, அரசுக்கு முழுமையான ஆதரவை வழங்கும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

அத்தோடு, அரசியல் தீர்வைக் காண்பதற்கான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் ஆணைக்குழுவின் அறிக்கையை ஆராய்வதற்கு அரசு இணங்கினால் மாத்திரமே தெரிவுக்குழுவுக்கான கட்சியின் பிரதிநிதிகள் நியமிக்கப்படுவர் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

# மூன்றாம் தரப்பின்றி பேசிப் பயனில்லை

01↘ பிரேமச்சந்திரன். ஜெனிவாவில் இலங்கை மீதான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில் இனப் பிரச்சினைக்கான தீர்வை எட்டுவது தொடர்பான முன்னெடுப்புக்களை மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் அரசுக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் அரசு கூட்டமைப்புடனான பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க வேண்டியுள்ளது.

இது தொடர்பாகக் கேட்டபோதே சுரேஷ் பிரேமச்சந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கை மீது ஐ.நா. மனித உரிமைக் கூட்டத் தொடரில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாலேயே இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுக்கள் தாமதமடைவதாகக் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தவை வருமாறு:

அரசுக்கும் எமக்கும் இடையில் இடம்பெற்றுவந்த பேச்சுக்களை அரசுதான் நிறுத்தி வைத்துள்ளது. இந்தப் பேச்சை முன்னெடுக்கின்ற நடவடிக்கைகள் அனைத்தும் அரசின் கைகளிலேயே தங்கியுள்ளன.

அரசு தாம் விரும்பிய நேரத்தில் விரும்பியவாறு அமைக்கும் குழுக்களில் எங்களை இணையச் சொல்வது தவறானது. ஏற்கனவே எங்களுக்கும், அரசுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுகள் ஒழுங்காக நடந்திருந்தால் இந்தப் பிரச்சினைகள் ஏற்பட்டிருக்காது.

எல்லாவற்றையும் விட பேச்சு மூலம் தீர்வு காணும் மனநிலை அரசுக்கு ஏற்பட வேண்டும். பேச்சுக்களைத் தொடரும் எண்ணமும் ஏற்பட வேண்டும். ஆயினும் இந்த அரசுக்கு பேச்சு மூலம் தீர்வு காணும் மனநிலை இல்லை. தொடர்ந்து எம்மை ஏமாற்றும் நடவடிக்கைகளையே மேற்கொண்டு வருகின்றது. தற்போதும் அதே நடவடிக்கையைத்தான் அது பின்பற்றுகின்றது.

அரசு உண்மையிலேயே இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்று விரும்பினால் மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும். இந்தப் பேச்சு உண்மையானதாக - தீர்வை நோக்கிச் செல்வதாக இருக்க வேண்டும்.

எந்தப் பேச்சுக்கும் மூன்றாம் தரப்பு ஒன்றின் மத்தியஸ்தம் அவசியம். இதனையே கடந்த ஒரு வருட கால பேச்சுவார்த்தை எடுத்துக் காட்டுகின்றது. அரசு உண்மையாகவே இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணவிரும்பினால் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தொடர்பான இணக்கப்பாட்டுக்கு வர வேண்டும். அப்படி அமைந்தால் தான் பேச்சு ஒரு சரியான தடத்தில் செல்லும் - என்றார். (த-5)

## முன்னாள் போராளிகள் 384 பேர் விடுதலை

01↘ முன்னாள் போராளிகளும்விடுவிக்கப்படுவர் எனவும் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் தினேஸ் ஹெட்டியாராச்சி குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை விடுவிக்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்கு புதிய கடன் திட்டமும் நேற்று அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டது.

புதிய கடன்திட்டத்தின் படி ஆகக்கூடிய 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வரை கடனாகப் பெற்றுக்கொள்ள முடியும். இவர்களுக்கு 4 சதவீத வட்டியே அறவிடப்படும்.

முதல் வருடத்தில் வட்டி மாத்திரமே அறிவிடப் படுவதுடன்எதிர்வரும் பத்து ஆண்டுகளுக்குள் இவர்கள் கடனைத் திருப்பிச் செலுத்த முடியும்.

## ராணுவ நீதிமன்றம் ராஜதந்திரிகளையும் விசாரிக்கும்

01↘ துரைகளுக்கு அமைய இராணுவத்தினுள் விசாரணைகளை மேற்கொள்ளப் படைத்துறைத் தளபதியினால் நியமிக்கப்பட்ட இராணுவ நீதிமன்றம் தொடர்பாகக் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இறுதிக் கட்ட போரின் போது படையினர் குற்றமிழைத்ததற்கான சான்றுகள் இருக்கும் பட்சத்தில் சம்பந்தப்பட்டவர்கள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று நல்லிணக்க ஆணைக்குழு பரிந்துரை செய்திருந்தது. இது உட்பட படையினர் தொடர்பாக ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்ட அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகளுக்கு அமைவாகவே இராணுவத் தளபதியினால் நீதிமன்றமொன்று நியமிக்கப்பட்டது. இந்த நீதிமன்றத்தின் நடவடிக்கைகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இராணுவ நீதிமன்ற விசாரணை தனிப்பட்ட நபர்களுக்கு எதிரான விசாரணை அல்ல. நல்லிணக்க ஆணைக்குழு ஏற்கனவே விரிவான விசாரணைகளையும் ஆராய்வுகளையும் மேற்கொண்டே அதன் பரிந்துரைகளை முன்வைத்துள்ளது. இந்த நிலையில் ஏற்கனவே சாட்சியமளித்தவர்கள் மீண்டும் விசாரிக்கப்பட வேண்டும் என்று இல்லை. எவ்வாறிருப்பினும் தேவையேற்படும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட எவரையும் அழைத்து விசாரிக்கும் அதிகாரம் இந்த நீதிமன்றத்துக்கு இருக்கிறது. -என்றார். (த)

# அமெரிக்காவின் இரட்டை வேடம்

01↘ விவகாரம் குறித்தான பிரேரணை தொடர்பிலும் கருத்து வெளியிட்டார்.

இது தொடர்பாக அவர் கூறியவை வருமாறு:-

இலங்கை மனித உரிமைகள் விடயத்திலும், இஸ்ரேல் மனித உரிமைகள் விடயத்திலும் அமெரிக்கா இரட்டைக் கொள்கையைக் கடைப்பிடிக்கின்றது. மனித உரிமைகள் கண்காணிப்புக்குழுவை நாட்டுக்குள் அனுமதிக்க மாட்டோம் என இஸ்ரேல் கூறியுள்ளது. அந்நாட்டின் இந்த நிலைப்பாட்டை அமெரிக்கா ஆதரித்துள்ளது.

அப்படியாயின், எமது நாட்டுக்குள் விசாரணைக் குழுவை அனுப்புவதற்கு முயற்சிப்பது ஏன்? இலங்கைக்குள் கண்காணிப்புக்குழுவை அனுமதிக்கமாட்டோம் என்ற நிலைப்பாட்டில் அரசு உறுதியாகவுள்ளது. அமெரிக்காவின் இந்தச் செயற்பாட்டிலிருந்தே அதன் பக்கச்சார்பான நடவடிக்கை தெளிவாகத் தென்படுகின்றது - என்றார்.

அதேவேளை, ''ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இருந்து இஸ்ரேல் விலகியுள்ளது. அவ்வாறானதொரு முடிவை இலங்கையும் எடுக்குமா எனக் கேட்டபோது, ''அது விடயம் தொடர்பில் அரசு இன்னும் தீர்மானிக்கவில்லை'' எனப் பதிலளித்தார் பதில் அமைச்சரவைப் பேச்சாளர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன.

# பளை வரை வந்தது லக்ஸபான மின்சாரம்

01↘ விநியோகம் கிட்டியது. வெகு விரைவில் - எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு முன்னர் - கொடிகாமம் பகுதி வரை லக்ஸபான மின்விநியோகம் வழங்கப்படவுள்ளது என்று மின்சார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை குடாநாட்டின் ஏனைய பகுதிகளில் லக்ஸபான மின்விநியோகத்துக்கான மின் தூண்களை நிறுவுதல், கிளிநொச்சியிலிருந்து சுன்னாகம் வரையான மின் பரிமாற்ற நிலையங்களை ஏற்படுத்துதல் போன்ற பணிகள் இடம்பெறவுள்ளன. இதனால் ஏறக்குறைய இன்னும் ஒரு வருடத்துக்குப் பின்னரே குடாநாடு முழுவதும் லக்ஸபான மின்சாரத்தை வழங்குவது சாத்தியமாகும். தென்மராட்சிப் பகுதிக்கு லக்ஸபான மின்சாரத்தை வழங்குவதன் மூலம் யாழ்ப்பாணத்தில் ஏனைய பகுதிகளில் மேற்கொள்ளப்படும் மின்வெட்டு நேரத்தை குறைக்க முடியும் என்றும் அந்த அதிகாரி உதயனுக்குத் தெரிவித்தார். (ஙு-9)

# ஐ.நா. தீர்மானம் குறித்து அரசின் முடிவு விரைவில்

01↘ அரசின் கருத்தல்ல எனச் சமாளித்தது. அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் மாநாடு நேற்றுக்காலை அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது. இதன் போது ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே பதில் அமைச்சரவைப் பேச்சாளரும், பதில் ஊடகத்துறை அமைச்சருமான லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் பதவிவிலகல் விவகாரம் குறித்து கேட்கப்பட்ட கேள்விக்கு ''அமைச்சர் தனது அமைச்சுப் பதயில் இருந்து விலகியுள்ளாரா என்பது குறித்து எனக்கு எதுவும் தெரியாது. ஆனால், அவர் நேற்று இடம்பெற்ற (நேற்று முன்தினம்) அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை. அமைச்சர் தொண்டமான் சுகவீனமுற்றுள்ளார் என நான் அறிகின்றேன்'' என்று பதிலளித்தார் பதில் அமைச்சரவைப் பேச்சாளர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் இலங்கை விவகாரம் தொடர்பில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் குறித்து வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் வெளியிட்டுள்ள கருத்துகள் தொடர்பில் கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளித்த அமைச்சர், ''வெளிவிவகார அமைச்சர் பீரிஸின் கருத்துகள் அரசின் கருத்தல்ல. ஜெனிவாத் தீர்மானம் தொடர்பில் அரசு இன்னும் உத்தியோகபூர்வமாக எந்தவொரு முடிவையும் எடுக்கவில்லை. அது தொடர்பில் நாம் உத்தியோகபூர்வமாக அறிவிப்போம். வெளிவிவகார அமைச்சர் என்ற வகையில் பீரிஸ் அவரின் தனிப்பட்ட கருத்துகளையே வெளியிட்டுள்ளார். அவை அரசின் கருத்தாகா - என்றார்.

இதன்போது அரசின் உத்தியோகபூர்வ நிலைப்பாடு எப்பொழுது அறிவிக்கப்படும் எனக் கேட்டதற்கு, ''அறிவிக்கப்படும்'' என்று பதிலளித்தார் பதில் அமைச்சரவைப் பேச்சாளர். (த-சி)

# சமாதான ஒப்பந்தம் நீடித்திருந்தால் பிரபாகரன் தமிழீழத்தின் ஜனாதிபதி

01↘ அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் கூறியவை வருமாறு:-

நாட்டைப் பாதுகாக்க வேண்டிய கடப்பாடுடைய ஜனாதிபதி, பாதுகாப்புச் செயலாளர் மற்றும் இராணுவத்தினர் பொறுப்புடன் செயற்பட்டு நாட்டை மீட்டெடுத்தனர். இவ்வாறானதொரு சவாலை வென்றெடுத்து நாடு நன்மையடைந்த பின்னர் அவர்களை விரட்டியடிக்கும் வகையிலான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கு முன்னர் நாட்டை நிர்வகித்த தலைவர்கள் எவரும் செய்யாத வேலையை மஹிந்த ராஜபக்ஷ செய்து முடித்துள்ளார். அந்தத் தலைவர்களின் காலத்தில் இராணுவத்தினர் யுத்தம் செய்யவில்லை. யுத்தம் செய்ய வேண்டுமா, இல்லையா என இலங்கையில் இருந்த வெளிநாட்டுத் தூதரகங்களே தீர்மானித்தன.

இராணுவம் எதிரிகளைத் தாக்கிக்கொண்டு முன்னோக்கிச் செல்கையில், தூதரக அதிகாரி ஒருவர் யுத்தத்தை நிறுத்துமாறு கூற நாட்டின் தலைவர்களும் இராணுவத்தினரைத் திருப்பி அழைத்தனர். இவ்வாறுதான் யுத்தம் செய்தனர்.

மஹிந்த ராஜபக்ஷவிற்கு யுத்தத்தை நிறுத்துமாறு கூறி பல்வேறு சவால்களும், வெளிநாட்டு இராஜதந்திர அழுத்தங்களும் இருந்தன. இந்த அழுத்தங்கள் அனைத்திற்கும் முகம் கொடுத்தே அவர் யுத்தத்தில் வெற்றிகண்டார். இதன் மூலம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாட்டின் தற்காலிகத் தலைவர் அல்லர் என்பது தெளிவாகின்றது. - என்றார் அவர். (த)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# சிரியாவில் சீரடையும் நிலைமை

சிரியாவில், கடந்த பதினைந்து மாதங்களாக நடைபெறும் உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான ஆரம்ப சமிக்ஞைகள் குறித்து ஒளிக்கீற்றுகள் தென்படத் தொடங்கியுள்ளன.

அந்நாட்டு ஜனாதிபதி பஷர் அல்-அசாத் பதவி விலக வேண்டும், அவரது தலைமையிலான பஹாத் கட்சி அரசு கலைக்கப்பட வேண்டும், கோரிக்கைகளை முன்வைத்துக் கிளர்ச்சியாளர்கள் நடத்தும் ஆயுதப் போராட்டத்தில் சுமார் 11,000 பேர் மரணமாகினர் என்றும், அவர்களில் சுமார் 3,600 பேர் கிளர்ச்சியாளர்கள் என்றும், இரண்டு நாள்களுக்கு முந்திய புள்ளி விவரங்கள் தெரிவித்தன.

சிரிய விவகாரத்தைத் தீர்க்கும் பொருட்டு, - அமைதியை நிலைநாட்டும் முகமாக - ஐக்கிய நாடுகள் சபையும் அரபு லீக்கும் இணைந்து நியமித்த சிறப்புப் பிரதிநிதி ஐ.நா. சபையின் முன்னாள் செயலாளர் நாயகம் கொபி அனான் முன்வைத்த ஆறு அம்சத் திட்டப் பரிந்துரையை ஏற்க சிரிய அதிபர் பஷர் அல்-அசாத் இணங்கியுள்ளார் என்பது பிந்திய தகவல்.

முதலில் கொபி அனான், சிரியா சென்று ஜனாதிபதி அசாத்துடன் பேச்சுவார்த்தை நடத்திய போதிலும், அவரது ஆறு அம்ச சமாதானத் திட்டத்தை ஏற்றுக்கொள்ள சிரிய ஜனாதிபதி மறுத்துவிட்டார். எனினும் சலிக்காது, தமது சார்பில் ஐவர் கொண்ட குழுவை அனுப்பி ஜனாதிபதி அசாத்துடன் பேசவைத்தார் அனான்.

சிரியாவில் உடனடியாகப் போர் நிறுத்தம் நடைமுறைக்கு வரவேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கான மனிதாபிமான உதவிகள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதே ஆறு அமசத் திட்டத்தின் மூலக்கருக்களாகும்.

இந்த ஆக்கபூர்வமான ஏற்பாட்டை, நிலைப்பாட்டை ரஷ்யாவும் சீனாவும் ஆதரித்துள்ளன. சிரிய விவகாரத்தில் அந்நிய நாடுகளின் தலையீடு இருக்கக்கூடாது என்று இதுவரை தெரிவித்து வந்த இந்த இரு நாடுகளும் கொபி அனானின் முயற்சிக்கு ஒத்துழைப்பு நல்கியுள்ளமை ஒரு திருப்பம் என்று கொள்ளலாம்.

முன்னதாக, சிரியாவில் போர்நிறுத்தம் ஒன்றைக் கொண்டு வர ரஷ்யா முயன்றபோதிலும், கிளர்ச்சியாளர்கள் தமது ஆயுதப் போராட்டத்தைக் கைவிடும் வரையிலும் போரை நிறுத்த முடியாது என்று ஜனாதிபதி அசாத் தெரிவித்து வந்தார்.

சிரியாவில் அதிகரித்து வந்த உள்நாட்டுக் குழப்பங்கள், அரசு-கிளர்ச்சியாளர்கள் மோதல்கள், எந்தளவுக்கு மோசமுறுமோ என்று உலகநாடுகள் பலவும், மிகக் குறிப்பாக அண்டை நாடுகள் அச்சமுற்றிருந்த இவ்வேளையில், கொபி அனானின் முயற்சியால் நிலைமை சீரடைவதற்கான அறிகுறிகள் ஒரு வகையமைந்த முன்னேற்றமாகும்.

சிரிய விவகாரம் விரைவில் அமைதியான முறையில், பொருத்தமான வழியில் தீர்வுக்கு வருமென்று சீனப்பிரதமர் வென்ஜியாபோ தெரிவித்திருப்பதும் ஒரு நல்ல சகுனம் எனலாம். கொபி அனானின் ஆறு அம்சத் திட்டத்தை ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக் குழுவும் ஏற்றிருப்பது ஆக்கபூர்வமான போக்கைக் காட்டுகிறது.

மத்திய கிழக்கில் உருவெடுத்துள்ள அரபு வசந்தத்தின் ஓரங்கமாகச் சிரியாவில் ஆரம்பித்த உள்நாட்டுக் குழப்பங்கள் முடிவுக்குக் கொண்டுவரப்படின், அரபு நாடுகளுக்கு மட்டுமன்றி அனைத்துலக விளைக்கும்.

இவற்றுக்கு இடையில், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையுடனான உறவுகளைத் துண்டித்துவிட்டதாகவும், தமது நாட்டுக்கோ அல்லது மேற்குக் கரைக்கோ ஐ.நா. விசாரணைக்குழு வருவதைத் தாம் அனுமதிக்கப் போவதில்லை என்றும் இஸ்ரேலியப் பிரதமர் பென்ஜமின் நெத்தன்யாகு அதிரடியாக அறிவித்திருக்கிறார். அனைத்துலக விவகாரங்களில் சூடான ஒன்றாக உருவெடுத்திருக்கிறது இது.

அதுவும், ஐ.நா. மனித உரிமைகள் பேரவை பக்கச் சார்புடன் செயலாற்றுவதாக சிரியா தெரிவித்த குற்றச்சாட்டு வெளியான ஐந்து நாள்களில் இஸ்ரேலும் அதே குற்றச்சாட்டை வெளியிட்டிருக்கிறது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில், இஸ்ரேல் ஓர் உறுப்பு நாடன்று. எனினும் தூதுவர் மட்டத்தில், பேரவையுடன் தொடர்பு வைத்திருந்தது.

அமெரிக்காவின் உதவியுடன் அரபுநாடுகளுக்கு இஸ்ரேல் தொடர்ந்து சவால் விட்டுக்கொண்டுதான் இருக்கிறது. இஸ்ரேலின் பலமும் குறையவில்லை. 1967இல் நடைபெற்ற ஆறு நாள் யுத்தத்தில் கைப்பற்றிய பகுதிகளில் பேச்சு மூலம் விட்டுக்கொடுத்த பகுதிகள் தவிர்ந்த ஏனைய பகுதிகளை அது இப்போதும் தனது கட்டுப்பாட்டிலேயே வைத்துள்ளது.

நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் நடைபெற்ற பேச்சில் பலஸ்தீன அரசு ஒன்றை அமைப்பதற்காக இஸ்ரேல் விட்டுக்கொடுத்த மேற்குக்கரை, கிழக்கு ஜெரூசலேம், காஸா ஆகியனவே தொடர்ந்து பிரச்சினையாக இருந்துவருகின்றன.

மேற்குக் கரையில் அமைக்கப்பட்டுள்ள யூதக்குடியிருப்புகள் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு, ஐ.நா. குழு ஒன்றை அங்கு அனுப்பும் தீர்மானம் கடந்த திங்கட்கிழமை 36 வாக்குகளால் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்டது. அதனை அமெரிக்கா மட்டுமே எதிர்த்து வாக்களித்தது.

இதுவே, இஸ்ரேல் ஆத்திரமடையவும் மனித உரிமைகள் பேரவையுடனான தொடர்புகளைத் துண்டிக்கவும் காரணமாக அமைந்தது எனலாம்.

மத்திய கிழக்குச் சமாதானத்துக்குப் பேச்சுகள் தொடர்ந்து நடைபெறுவதற்கு மேற்குக்கரையிலும், கிழக்கு ஜெரூசலேமிலும் உள்ள யூதக் குடியிருப்புகளே பிரதான தடையாக இருக்கின்றன.

யூதக் குடியிருப்புகள் இஸ்ரேலின் பாதுகாப்புக்கு மிகவும் அவசியமானவை என்று இஸ்ரேல் கூறுகிறது. மத்திய கிழக்கில் நிரந்தர சமாதானத்துக்கு இது எந்த வகையிலும் உதவாது. அத்துடன் ஐ.நாவின் ஓர் அங்கமான மனித உரிமைகள் பேரவையுடனான உறவுகளை இஸ்ரேல் துண்டித்திருப்பதும் நாடுகளுக்கு இடையேயான உறவை மலினப்படுத்துவதற்கான ஒரு முன்மாதியாகிவிடும். மொத்தத்தில் பேரவையின் தீர்மானங்களை உதாசீனம் செய்யும், செய்ய முயலும் இலங்கை போன்ற நாடுகளுக்கு, இஸ்ரேலின் நடவடிக்கை ஒரு தவறான முன்னுதாரணமாக அமையும்.

# பார்வையற்ற மாணவி சாதனை 9 பாடங்களிலும் 'ஏ' தரச் சித்தி

கொழும்பு, மார்ச் 30

அண்மையில் வெளியிடப்பட்ட க.பொ.த. சாதாரண தரப்பரீட்சை முடிவுகளில் பார்வையற்ற மாணவி ஒருவர் 9 பாடங்களிலும் 'ஏ' தரச் சித்தி பெற்றுச் சாதனை படைத்துள்ளார்.

ஹெல்லகென என்ற இடத்தைச் சேர்ந்த நிர்மி கந்தவரளாகொட என்ற மாணவியே இந்தச் சாதனையைப் படைத்துள்ளார்.

ஹொரணையிலுள்ள தக்ஷிலா கல்லூரியின் சார்பில் அவர் பரீட்சைக்குத் தோற்றினார். பார்வையற்றவர்களுக்கான ''பிறேல்'' முறை மூலமாக அவர் பரீட்சை எழுதியுள்ளார்.

தன்னுடைய அடைவு குறித்து மட்டற்ற மகிழ்ச்சியை வெளிப்படுத்திய நிர்மி, தான் ஓர் ஆசிரியையாக வரும் வரை கல்வியைத் தொடரப் போவதாகவும் தெரிவித்துள்ளார்.

குழந்தையாக இருந்த போது என்னால் பார்க்கமுடியாமல் போனது. ஏதோ ஒரு நோய்த்தொற்று காரணமாக எனது பார்வை படிப்படியாக குறைந்து கொண்டுபோனது. பின்னர் நான் 'பிறைல்' முறைமூலம் புத்தகங்களைப் படிக்கக் கற்றுக்கொண்டேன்.

தக்ஷிலா கல்லூரியில் தன்து ஆரம்பக் கல்வியைக் கற்ற நிர்மி 2005 ஆம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையில் 145 புள்ளிகள் பெற்றுச் சித்தியடைந்தார்.

நான் பார்வையை இழந்திருந்த போதும் பாடசாலையில் சாதாரண தரம்வரை ஏனைய மாணவர்களுடன் சேர்ந்து கற்பதற்கு அனுமதிக்கப்பட்டேன்.

என்னுடைய ஆசிரியர்கள் எனக்குப் பெரிதும் உதவினார்கள். நான் புத்தகங்களை வாசிப்பதற்கு என்னுடைய தாத்தா உதவினார். பெற்றோருக்கு நான் ஒரே ஒரு பிள்ளை. எனது தாய் ஹொரணவில் உள்ள பிரஜாபதி பெண்கள் பாடசாலை யில் ஆசிரியையாக உள்ளார். தந்தை தனியார் நிறுவனமொன்றில் பணிபுரிகிறார்.- என்று தெரி வித்துள்ளார்.

(ம)

புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள்

# ஆறு மாத காலப் பகுதிக்குள் முழுமையாக விடுவிக்கப்படுவர்

புனர்வாழ்வுப் பயிற்சிக்கு உட்படுத்தப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்கள் இன்னமும் ஆறுமாத காலத்துக்குள் விடுவிக்கப்படுவார்கள் என்று சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

**யுத்தம் முடிவுக்கு வந்து மூன்று ஆண்டுகள் எட்டுகின்ற நிலையில் தற்போதும் ஆயிரம் வரையிலான முன்னாள் போராளிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.**

புனர்வாழ்வுப் பயிற்சியளிக்கப்பட்ட ஆயிரத்துக்கும் குறைவான எண்ணிக்கையுடைய முன்னாள் போராளிகளே தற்போது விடுவிக்கப்படாமல் உள்ளனர். இவர்கள் இன்னமும் ஆறு மாதங்களுக்குள் விடுவிக்கப்பட்டு அவர்களது பாதுகாவலர்களிடம் ஒப்படைக்கப்படுவார்கள்.

வன்னியில் இடம்பெற்ற இறுதிப் போரின் போது இராணுவத்திடம் அகப்பட்டுக் கொண்டவர்களில் 11 ஆயிரத்து 699 முன்னாள் போராளிகள் புனர்வாழ்வுப் பயிற்சிக்கு உட்படுத்தப்பட்டனர்.

புனர்வாழ்வுப் பயிற்சி பெற்றவர்கள் படிப்படியாக விடுவிக்கப்பட்டு வந்தனர். யுத்தம் முடிவுக்கு வந்து மூன்று ஆண்டுகள் எட்டுகின்ற நிலையில் தற்போதும் ஆயிரம் வரையிலானவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். நீதிமன்ற முடிவுகள் மற்றும் சட்டச் சிக்கல்கள் காரணமாகவே முன்னாள் போராளிகளை உடனடியாக விடுவிக்க முடியாத நிலைமை ஏற்பட்டது.

இதேவேளை இன்று வெள்ளிக்கிழமை கொழும்பில் வைத்து 385 முன்னாள் போராளிகளை விடுவிக்கவுள்ளோம் என அமைச்சின் அந்த உயர் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

(ம-3)

# "விகடகவியின் கவிதைகள்" நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், மார்ச் 30

ஓய்வுநிலை மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசு எழுதிய ''விகடகவியின் கவிதைகள்'' நூல் அரங்கேற்றம், நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். நாச்சிமார்கோயில் முன்பாகவுள்ள சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற உள்ளது.

தென்மராட்சிப் பிராந்திய கல்விப் பணிப்பாளர் ஆ.ஸ்ரீஸ்கந்த மூர்த்தி தலைமையில் நடைபெறும் விழாவில், அருளுரைகளை நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகளும், பேரருட் திரு. டாக்டர் எஸ்.ஜெபநேசன் அடிகளாரும் ஆற்றுவர்.

வெளியீட்டுரையை பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவும் ஆசியுரையை கலாநிதி ஆறு.திருமுருகனும் வழங்குவர்.

நயப்புரையை பேராசிரியர் தி.வேல்நம்பியும் வியப்புரையை அளவெட்டி மகாஜன சபைத் தலைவர் வை.சுப்பிரமணியமும் வழங்குவர்.

ஏற்புரையை நூலாசிரியர் மு.திருநாவுக்கரசு வழங்குவார். தொடர்ந்து கலைநிகழ்வுகளும் இடம்பெறும்.

(அ-7)

# மக்கள் பங்கேற்பு அபிவிருத்தி திட்டம் குறித்த கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மார்ச் 30

வடமாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச சபைத் தலைவர்கள், உறுப்பினர்களுக்கு மக்கள் பங்கேற்பு அபிவிருத்தித் திட்டம் தயாரித்தல் தொடர்பான கலந்துரையாடல் இன்று கரவெட்டி தென்மேற்குப் பிதேச சபையிலும், வலிகாமம், மானிப்பாய் தென்மேற்குப் பிரதேச சபையிலும் நடத்தப்படவுள்ளது என்று யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தெரிவித்தார்.

உள்ளூராட்சி திணைக்களங்களின் கீழ் இயங்கும் பிரதேச சபைகளில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் உறுப்பினர்கள் ஆகியோர் மக்களுடன்தொடர்புபட்டவர்கள். பிரச்சனைகளின் தீர்வுகளை முன்வைக்கும் பொறுப்புடையவர்கள்.

இவற்றில் பிரச்சினைகளுக்குரிய தீர்வுத் திட்டங்களை எவ்வாறு கொண்டு செல்லுதல், ஆலோசனை வழங்குதல், எவ்வாறான வேலைத் திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்குதல் போன்ற விடயங்கள் குறித்துக் கலந்துரையாடப்படவுள்ளது.

வடமாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் தொழில்நுட்பப் பிரிவால் செயற்படுத்தப்படும் இக்கலந்துரையாடலில் பிரதேச சபைத் தலைவர்கள் கலந்து கொள்வதன் மூலம் தமது பிரதேசங்களை வளப்படுத்த முடியும்.

கடந்த மாதம் சாவகச்சேரிப் பிரதேச சபையில் ஆரம்பிக்கப்பட்ட மக்கள் அபிவிருத்தித் திட்டம் தயாரித்தல் செயற்பாடு தொடர்ந்து இந்த வருடம் முழுவதும் பிரதேச சபைகளில் செயற்படுத்தி சமூக மட்டத்தை உயர்வடையச் செய்ய வழி வகுக்கும் - என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ம-13)

# விருது வழங்கலும் நூல் வெளியீடும்

யாழ்ப்பாணம்,மார்ச் 30

யாழ்.இலக்கிய வட்டத்தால் கவிதை நூல் வெளியீடும், சிறந்த கவிதை நூலுக்கான விருது வழங்கல் நிகழ்வும் நாவலர் கலாசார மண்டபத்தில் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளன.

வே.ஐ. வரதராஜனின் ''என் கடன்'' கவிதை நூல் வெளியீடும், மூதறிஞர் கவிஞர் வே. ஐயாத்துரை ஞாபகார்த்த 2009 ஆம் 2010 ஆம் ஆண்டுகளுக்குரிய சிறந்த கவிதை நூலுக்கான விருது வழங்கலும் இடம்பெறவுள்ளன.

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஓய்வு நிலை விரிவுரையாளர் கலாநிதி செ.திருநாவுக்கரசு தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.

நூல் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் கலாநிதி த.கலாமணி நிகழ்த்துவார். வர்த்தகர் செ.செல்வநாதன் நூல் முதற் பிரதியைப் பெற்றுக்கொள்வார். மதிப்பீட்டுரையை பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஓய்வு நிலை விரிவுரையாளர் கவிஞர் சோ.பத்மநாதன் நிகழ்த்துவார். விருது வழங்கும் நிகழ்வில் எழுத்தாளர் திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் விருது உரை நிகழ்த்துவார்.

2009 ஆம் ஆண்டு தெரிவாகிய சிறந்த கவிதை நூலாக ''குரல் வழிக் கவிதைகள்'' தெரிவு செய்யப்பட்டு அதற்கான விருது அல் அஸமத்துக்கும் ''சுவட்டெச்சம்'' நூலுக்குரிய விருது சோ.பத்மநாதனுக்கும் வழங்கப்படவுள்ளன. யாழ்.இலக்கிய வட்டத்தலைவர் கலாநிதி க.குணராசா விருதுகளை வழங்கிக் கௌரவிப்பார்.

(ம-4)

# கிரவல் மண்ணுக்காக அழிக்கப்படும் காடுகள்

அக்கராயன்,மார்ச் 30

துணுக்காயின் சில பகுதிகளில் கிரவல் மண் அகழ்வுக்காகக் காடழிக்கும் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

அக்கராயனில் இருந்து துணுக்காய் செல்லும் வீதியில் ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் காடழித்து கிரவல் மண் அள்ளும் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

**அக்கராயனில் இருந்து துணுக்காய் செல்லும் வீதியில் ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் காட்டை அழிந்து கிரவல் மண் அள்ளும் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன**

இதேவேளை துணுக்காயின் அமதிபுரம் கிராமத்தின் அருகில் திருமுறிகண்டி - வன்னேரிக்குளம் வீதியில் தொடர்ச்சியாக கிரவல் மண் எடுக்கப்பட்டமையால் பெருமளவு காடுகள் அழிந்து காணப்படுகின்றன.

கிரவல் மண் அகழ்வுக்கு துணுக்காய் பிரதேசசபை, பிரதேச செயலகம் என்பவற்றால் அனுமதி வழங்கப்பட்டுள்ளன. அந்த அனுமதிகள் சூழல், காடழி வுகள் பற்றிய மதிப்பீடுகளை கொண்டிருக்கவில்லை என்பது பெருங்குறையாக உள்ளன.

சமீப காலமாக வன்னிப் பகுதியில் விறகுத் தேவைக்காகவும் வீட்டுக் கட்டடத் தேவைக்காகவும் காட்டு மரங்கள் அழிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கனரக வாகனங்களில் காட்டு மரங்கள் தறிக்கப்பட்டு வெளி மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்வதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

இந்த நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துமாறு பல முறை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்டபோதும் இது வரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

எனவே துணுக்காய் பிரதேச செயலகம் காடழிவுகள் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கேட்டுள்ளனர்.

(எ-18)

## பஸ்சேவை ஆரம்பிக்கப்பட்டதால் ஆர்வத்துடன் மாணவர் பாடசாலைக்கு

முல்லைத்தீவு,மார்ச் 30

மாணவர்களுக்கென உள்ளூர் பஸ்சேவையொன்று இடம் பெறுவதால் ஒட்டுசுட்டான் பிரதேசத்தைச் சேர்ந்த மாணவர்கள் ஆர்வத்துடன் பாடசாலை செல்வதாகக் கூறப்படுகின்றது.

உள்ளூர் பஸ் சேவைகள், இல்லாததால் கற்சிலைமடு, கெருடமடு, வசந்தபுரம், முத்து ஐயன்கட்டு ஆகிய இடங்களைச் சேர்ந்த மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வதில் சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர். சில மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வதில் ஆர்வமில்லாது வீடுகளிலும் தங்கிநின்றனர்.

இந்த நிலையில் ஒட்டுசுட்டானைச் சேர்ந்த நாகலிங்கம் விஜயகுமார் என்பவர் மாணவர்களுக்கான பஸ் சேவையொன்றை மேற்கொண்டு வருகின்றார். இதில் இவருக்கு அதிக வருவாய் கிட்டாத போதிலும் இந்த பஸ்சேவையை ஒழுங்காக மேற்கொண்டு வருகின்றார். இதனால் மாணவர்கள் உரிய நேரத்தில் பாடசாலைக்குச் செல்வதோடு பாடசாலை முடிந்ததும் வீடுகளுக்குச் செல்ல முடிகின்றது.

முன்னர் இந்த மாணவர்க்ள் உரிய நேரத்தில் பாடசாலைக்குச் செல்ல முடியாதிருந்ததுடன் பாடசாலை முடிந்ததும் 4 தொடக்கம் 5மணிவரை காத்திருந்து வீடு செல்ல வேண்டிய அவல நிலையிலும் இருந்தனர்.

## 'ஆட்டக்காரி'க்கு இல்லை காப்புறுதி

அக்கராயன்,மார்ச் 30

ஆட்டக்காரி நெல் இனத்துக்குக் காப்புறுதி இல்லையெனக் கிளிநொச்சி மேலதிக அரச அதிபர் செ.ஸ்ரீநிவாசன் தெரிவித்துள்ளார்.

வன்னேரிக்குளம் சிறுபோக நெற்செய்கைக் கூட்டத்துக்குத் தலைமை வகித்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

விவசாயத் திணைக்களத்தால் பரிந்துரை வழங்கப்படும் நெல்லினங்களையே விவசாயிகள் பயிரிட வேண்டும். பரிந்துரை இல்லாத நெல்லினங்களை விவசாயிகள் பயிரிட்டு அவற்றுக்கு அழிவுகள் ஏற்படுமாயின் அவற்றுக்கு நட்டஈடு எதுவும் வழங்கப்பட மாட்டாது.

இந்த மாவட்டம் ஒரு விவசாய மாவட்டமாக இருப்பதால் விவசாயிகள் விவசாயத்தில் அக்கறையுடன் ஈடுபட வேண்டும். அத்துடன் தமது பூரண ஒத்துழைப்பை வழங்குவதுடன் பயிர் உற்பத்திகளிலும் தன்னிறைவு காண வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-18)



தற்போது இடம் பெற்று வரும் தவக்கால நிகழ்வின் ஒரு பகுதியாக வவுனியா பெரிய கோமரசன் குளம் கல்வாரி தேவாலயத்தில் இடம் பெற்ற சிறப்பு வழிபாட்டில் அடியவர்கள் திருவிருந்தில் பங்கு பற்றுகின்றனர். (க-421)

## கற்சிலைமடு மக்களுக்கு நுளம்பு வலை விநியோகம்

முல்லைத்தீவு,மார்ச் 30

முல்லைத்தீவு மாவட்டம் கற்சிலை மடுவில் நுளம்பு வலைகள் வழங்கப்பட்டன. ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது. இதனால் இங்கு வாழுகின்ற மீளக்குடியமர்ந்த மக்கள் பெரும் சுகாதாரச் சீர்கேடுகளை எதிர்கொண்டு வருகின்றனர். இது தொடர்பான செய்திகளும் வெளிவந்துள்ளன.

இந்த நிலையில் சுகாதாரப் பகுதியினர் கற்சிலைமடுக் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மக்களுக்கு ஆரம்ப சுகாதார நிலையம் ஊடாகக் கடந்த 20 ஆம் திகதி நுளம்பு வலைகளை விநியோகித்துள்ளனர்.

வைத்திய வசதிகள் குறைவான ஒட்டுசுட்டான் பிரதேச மக்களுக்கு இந்த நுளம்பு வலைகள் பெரும் உதவியாக இருக்குமென்பதில் ஐயமில்லை.

இதே வேளை முல்லைத்தீவின் ஏனைய நுளம்பு வலைகள் விநியோகிக்கப்படாத பகுதிகளுக்கும் சுகாதாரப் பகுதியினர் இவற்றை விநியோகிக்க வேண்டுமென்பதே இங்குள்ள அனைவரதும் வேண்டுகோளாக உள்ளது.

(க-500)

## ஊற்றுப்புலம் பகுதியில் திருமணப் பதிவுகள்

கிளிநொச்சி ஊற்றுப்புலம் பகுதியில் பதிவுத் திருமணம் செய்யாமல் இருந்தவர்களுக்கு சோஆ நிறுவனத்தின் அனுசரணையுடன் திருமணப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

மிகவும் பின் தங்கிய மக்கள் அதிகம் வாழும் ஊற்றுப்புலம் கிராமத்தில் அதிகளவு குடும்பங்கள் தமக்குரிய சட்ட ஆவணங்கள் இன்றியே வாழ்ந்து வருகின்றன. இந்த நிலையில் திருமணப் பதிவுச் சான்றிதழ்கள் இல்லாது இருந்த சுமார் 20இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இனங் காணப்பட்டு அவர்களுக்கு திருமணப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த நிகழ்வு கடந்த செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணியளவில் ஊற்றுப்புலம் பொதுநோக்கு மண்டபத்தில் கிராம அலுவலர் குணசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இதில் சோஆ நிறுவனப் பிரதிநிதிகள், கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகத்தினர், மாதர் கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகத்தினர் கரைச்சிப் பிரதேச பிறப்பு, இறப்பு விவாகப் பதிவாளர்கள் எனப்பலர் கலந்து கொண்டிருந்தனர். ஏற்கனவே சமயாசார முறைப்படி திருமணம் செய்து கொண்ட 14 தம்பதிகளுக்கு திருமணப்பதிவுகள் மேற்கொள்ளப்பட்டன. இது போன்ற நிகழ்வு மிகவும் பின் தங்கிய இந்தப் பகுதியில் நடத்தப்பட்டதையிட்டு பலரும் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

(க-6)

## பொலிஸாரும் இராணுவத்தினரும் கட்டடத்தை விட்டு வெளியேறுவார்களா?

அக்கராயன், மார்ச் 30

கிளிநொச்சியின் முழங்காவில் கமநல சேவை நிலையம் மற்றும் பூநகரி சிறீ விக்னேஸ்வர வித்தியாலயம் என்பவற்றில் இருந்து இராணுவத்தினரும், பொலிஸாரும் வெளியேறாத நிலை காணப்படுவதால் அப் பகுதி மக்கள் பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

பூநகரி பிரதேச செயலகத்தில் இறுதியாக நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முழங்காவில் கமநல சேவை நிலையத்திலிருந்து ஒரு மாதத்தில் பொலி ஸாரும், பூநகரி சிறி விக்கினேஸ்வரா வித்தியாலயத்திலிருந்து இராணுவத் தினரும் ஒரு மாதத்தில் வெளியேறுவோம் என தெரிவிக்கப்பட்ட நிலையில் இரு பிரிவினரும் இரு மாதங்களாகியும் வெளியேறவில்லை.

முழங்காவில் கமநல சேவை நிலையத்தில் தொடர்ந்து பொலிஸார் நிலைகொண்டிருப்பதால் விவசாயச் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

பூநகரி சிறிவிக்கி னேஸ்வரா வித்தியாலயத்தில் இராணுவத்தினர் நிலை கொண்டிருப்பதால் 4 கி.மீ தூரம் மாணவர்கள் நடந்து மாற்றுப் பாடசாலையான பூநகரி மகா வித்தியாலயத்துக்கு செல்கின்றனர்.

இரு கட்டடங்களில் இருந்தும் எப்போது பொலிஸாரும்,இராணுவத்தினரும்வெளியேறு வார்கள் என்று அந்தப் பகுதி மாணவர்களும், விவசாயிகளும், எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர். (எ-18)

## முன்பள்ளிக்கு கட்டடம் தேவை

கிளிநொச்சி, மார்ச் 30

கிளிநொச்சி முரசு மோட்டையில் இயங்கிவரும் முன்பள்ளி கட்டடம் வசதிகள் இன்றி தனியார் வீடொன்றில் இயங்கிவருகின்றது.

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்துக்கு உட்பட்ட முரசுமோட்டை கிராம அலுவலர் பிரிவில் உள்ள முன்பள்ளியில் தற்போது 35 வரையான சிறார்கள் கல்வி கற்று வருகின்றனர்.

இந்த நிலையில் முன்பள்ளிக் கட்டட வசதிகள் இன்றி தனியார் வீடொன்றில் நீண்ட காலமாக இயங்கி வருவதால் நிரந்தரக் கட்டடம் ஒன்றினைப் பெற்றுத் தருமாறு முன்பள்ளிச் சிறார்களின் பெற்றோர்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ-6)

## சீராக அமைக்கப்படாத வீதி

துணுக்காய் அமதிபுரம் கிராமத்தின் நடுவே சீரான வகையில் வீதி அமைக்கப்படவில்லையெனக் கிராமமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

துணுக்காய்ப் பிரதேச சபையினால் இந்த வீதி புனரமைக்கப்பட்டதாகவும், ஆனால் வீதி வேலைகள் ஒழுங்காக நடைபெறாமையால் கற்கள் வீதியின் இரு மருங்கிலும் குவிந்திருப்பதுடன், வீதியும் குன்றும் குழியுமாக மாறி உள்ளதாகவும் திட்டமிடல்கள் இன்றி வீதிகள் அமைக்கப்படும் போது இத்தகைய நிலை ஏற்படுவதுடன் அதற்குச் செலவழித்த நிதியும் வீண்விரயம் ஆவதாகவும் கூறப்படுகின்றது.

துணுக்காய் பிரதேசசபையினர் இந்த வீதியை மீளவும் புனரமைக்க வேண்டுமென மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-18)

## வவுனியா பாடசாலையில் சிறந்த பெறுபேறு

வவுனியா தெற்குக் கல்வி வலயத்தில் உள்ள பின்தங்கிய கிராமத்தைச் சேர்ந்த சிதம்பரபுரம் நாகராசா வித்தியாலய பாடசாலை ஒன்றின் மாணவர்கள் க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் நல்ல பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர். பரீட்சைக்குத் தோற்றியவர்களுள் 75 வீதமானோர் உயர்தரத்தில் கற்பதற்கான தகுதியைப் பெற்றுள்ளனர். இதனைப் பாடசாலை அதி பர் சி.வரதராஜன் தெரிவித் தார்.

மு.பகீரதன் 5 ஏ பெற்றுள்ளார். (க-421)

## துணுக்காய் ஆசிரியருக்கு இன்று முதல் பஸ் சேவை

துணுக்காய் வலயப் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான போக்குவரத்துச் சேவை இன்று முதல் இடம்பெறும் என துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி லூட் மாலினி அறிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை முதல் சேவையில் ஈடுபடுவதாக அறிவிக்கப்பட்டிருந்த இந்தப் பேருந்து சேவை தவிர்க்க முடியாத காரணத்தால் சேவையில் ஈடுபடுத்தப்படவில்லை. எனினும் இன்று முதல் இந்தப் பேருந்து சேவை ஆரம்பிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள் ளது.

துணுக்காய் அ.த.க. பாடசாலை முன்றிலிருந்தும் ஒட்டுசுட்டான் முத்தையன்கட்டு இடதுகரை அ.த.க.பாடசாலை முன்றிலிருந்தும் பிற்பகல் 1.45 மணிக்கு யாழ்ப்பாணம் நோக்கி சேவையில் ஈடுபடும்.

இதேவேளை மாங்குளம் மகாவித்தியாலயம் பனிச்சங்குளம் அ.த.க.பாட சாலை திருமுறிகண்டி இந்து வித்தியாலயம் ஆகிய பாடசாலையைச் சேர்ந்த ஆசிரியர்கள் குறித்த சேவையைப் பெற் றுக் கொள்ள முடியாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ-18)

# பொழுதுபோக்கு இடமாகும் யாழ். கோட்டைச் சுற்றாடல்

## 60 மில்லியன் ரூபா நிதி வழங்கியது அரசு

யாழ்ப்பாணம், மார்ச் 30

யாழ்ப்பாணம் கோட்டைச் சுற்றாடல் பகுதிகளை அழகுபடுத்தி பொழுதுபோக்குக்குரிய இடமாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கென யாழ். மாநகர சபைக்கு 60 மில்லியன் ரூபா நிதியை அரசு வழங்கியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கோட்டையைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள பற்றைகள் அழிக்கப்பட்டு அவ்விடத்தில் காணப்படும் குன்றுகுழிகள் நிரவப்பட்டு வருகின்றன.

இரண்டாம் கட்ட வேலைகளில் முற்ற வெளியில் புற்றரைகள் அமைக்கப்படவுள்ளன. அத்துடன் மின்சார வசதிகளை ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படுவதாக யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்தார்.

கோட்டை கடற்கரைப் பகுதி அகலப்படுத்தப்பட்டு வருகிறது என்றும் மக்கள் இந்தப் பகுதியில் அமர்ந்து காற்று வாங்கக் கூடியதாக புற்றரைகள், இருக்கைகள் அமைக்கப்படவுள்ளன என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ம-7)

## நவீன வசதிகளுடன் குறிகாட்டுவான்

யாழ்ப்பாணம், மார்ச் 30

குறிகாட்டுவான் இறங்குதுறை விரைவில் நவீன வசதிகளுடன் புனரமைக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் துறைமுகத்தை விரைவில் புனரமைப்பதற்கான முன்னேற்பாடுகள் யாவும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

தீவுப் பகுதிக்கான முக்கிய இறங்குதுறையாக விளங்கும் இந்தத் துறைமுகத்தைச் சகல வசதிகளுடன் கூடிய துறையாகப் புனர்நிர்மாணம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் கூறப்பட்டது.

இந்தத் துறைமுக புனரமைப்புக்கான கேள்விகளும் கட்டட ஒப்பந்தகாரர்களிடம் இருந்தும் கோரப்பட்டுள்ளன.

தற்போதைய குறிகாட்டுவான் இறங்கு துறைமுகம் போதிய வசதிகளைக் கொண்டதாக அமையவில்லை. இதனால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். அதனைவிட துறைமுகப் பகுதியில் தரித்து நின்று பயணிகளை ஏற்றிச் செல்லும் படகுகளும் போதிய இடவசதி இன்றி உள்ளன.

இந்த நிலையில் தீவுப் பகுதிக்கான முக்கிய துறைமுகமான இந்தக் குறிகாட்டுவான் இறங்கு துறை விரைவில் நவீன மயப்படுத்தப்படும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (ம-17-7)

## குற்ற ஒப்புதல் வாக்குமூலம் நிராகரிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 30

கடற்படையினருக்கு எதிராகத் தாக்குதலில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவரின் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் யாழ்.மேல் நீதிமன்றால் நிராகரிக்கப்பட்டது.

இந்த வழக்கு நேற்று முன்தினம் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது. முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு, இரணைப் பாலையைச் சேர்ந்த வில்லியம் மங்களதாஸ் என்பவரின் குற்ற ஒப்புதல் வாக்குமூலமே நிராகரிக்கப்பட்டுள்ளது.

நாவுறுகோயில் பகுதியை அண்மித்த பகுதியில் பயிற்சிபெற்ற கடற்படையினருக்கு எதிரான தாக்குதலில் ஈடுபட்டார் என்று அவரிடமிருந்து குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டிருந்தது. அதனையே நீதிமன்று நிராகரித்தது. வழக்குத் தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனைக்காக ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ஒ-4)



மகளிர் தினத்தை முன்னிட்டு கோண்டாவில் பொது நூலகத்தின் ஏற்பாட்டில் புதுவரவு நூல்களைக் காட்சிப்படுத்தல் கண்காட்சியும் மகளிர் அங்கத்தவர்களை இணைத்துக் கொள்ளும் நிகழ்வும் கொக்குவில் உபஅலுவலக பொறுப்பதிகாரி கி.தவராசா தலைமையில் நடைபெற்றன. இதில் சபைத் தலைவர் மேரிஜோசப் சாந்தசீலன் கண்காட்சி மண்டபத்தை நாடாவெட்டித் திறந்து வைக்கிறார். (ம-14)

## காரைநகருக்கு குடிதண்ணீர் சுன்னாகத்திலிருந்து வருகிறது

யாழ்ப்பாணம், மார்ச் 30

காரைநகர் பிரதேச மக்களுக்கு சுன்னாகத்தில் இருந்து குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

இந்தப் பகுதிக்கு பவுசர் மூலம் குடிதண்ணீர் விநியோகிக்கும் பணியை பிரதேச சபை துரிதப்படுத்தியுள்ளது.

தினமும் சுன்னாகத்தில் இருந்து குடி தண்ணீர் எடுத்துச் செல்லப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

தற்போதைய கடும் வெப்பம், வரட்சியால் காரைநகர் பிரதேசத்தில் நன்னீர் கிணறுகளின் நீர் மட்டம் வெகுவாக குறைந்தும் காணப்படுகின்றது.

இந்தக் குடிதண்ணீர் தட்டுப்பாட்டை ஈடு செய்யும் வகையில் பிரதேச சபை பவுசர் வாகனம் மூலம் குடிதண்ணீர் வழங்கும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. (ம-17)

## தாய், தந்தை, மகளை துரத்திக் கொட்டியது குளவி

### அனைவரும் வைத்தியசாலையில்

வடமராட்சி, மார்ச் 30

தேன் குளவி கடித்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் சிகிச்சைக்காகப் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுக் காலை7.30 மணியளவில் குடத்தனை மேற்கு வீரபத்திரர் கோயிலடியில் உள்ள வீடொன்றில் இந்தச் சம்பவம் நடைபெற்றது.

இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட ந.ரகுநாதன் (வயது-46) , அவரது மனைவி ஜெயலலிதா (வயது- 45), மகள் ரம்சிகா (வயது-12) ஆகிய மூவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களாவர்.

பக்கத்து வீட்டில் உள்ள மரம் ஒன்றில் கூடு கட்டி இருந்த குளவிக் கூட்டிலிருந்து வெளியேறி சமையலறையில் சமையல் செய்து கொண்டிருந்த மனைவியைத் தாக்கி சமையலறைக்குள் சென்று கொண்டிருந்த மகளையும் தாக்கியது. பின்னர் முற்றத்தில் இருந்த கணவரையும் தாக்கிச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

உடனடியாக ஒரே குடும்பத்தவரான மூவரும் அயலவர்களால் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். (ம-8)

## பசுப்பாலின் தேவை அதிகரிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 30

யாழ். குடாநாட்டில் பசுப்பாலுக்கு பெரும் கிராக்கியும் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது. திருநெல்வேலி கூட்டுறவு அபிவிருத்திச் சங்கத்தினாலும் பசுப்பாலின் தேவையை பூரணமாக நிறைவேற்ற முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாக மாவட்டக் கூட்டுறவு திணைக்களம் தெரிவித்துள்ளது.

கால்நடை உற்பத்தியாளர்களிடம் இருந்தே இந்தச் சங்கம் பசுப்பாலை கொள்வனவு செய்து நுகர்வோருக்கு விற்பனை செய்து வருகின்றன.

பெரும்பாலான பசுப்பால் விற்பனை நிலையங்களில் காலையிலேயே பால் முடிவுற்று விடுகின்றது.

சில விற்பனை நிலையங்களில் மக்கள் முண்டியத்துக் கொண்டு பசுப்பாலைப் பெற்றுச் செல்வதையும் காணக்கூடியதாக உள்ளது. குடாநாட்டில் கால்நடை வளர்ப்பு தற்போது திடீரென குறைந்து செல்வதனாலேயே இந்தப் பசுப்பாலுக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த கால்நடை உற்பத்தியை அதிகரிப்பதற்கு பசுப்பாலின் உற்பத்தியையும் பெருக்கி நுகர்வோருக்கு அவற்றை தாராளமாக விநியோகிப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பலதரப்பட்டோரும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, குடாநாட்டில் தற்போது ஆலயத் திருவிழாக்கள் இடம்பெற்றுவரும் நிலையில் இந்த நிலைமை காணப்படுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டது. (ம-17)

## வாகன விற்பனை வழக்கு சந்தேக நபர் விடுதலை

யாழ்ப்பாணம், மார்ச் 30

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நபர் யாழ். மேல் நீதிமன்றால் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டார்.

குருநாகலைச் சேர்ந்த மாரிமுத்து பாண்டியன் என்பவரே விடுதலை செய்யப்பட்டார். அரச கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து கட்டுப்பாடற்ற பகுதிக்கு வாகனங்களை விற்பனை செய்த குற்றச்சாட்டில் இவர் கைது செய்யப்பட்டார்.

இவருக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களத்தால் யாழ். மேல் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டிருந்தது. இந்த வழக்கு நீதிபதி ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது.

அதன்போதே சந்தேக நபர் மீதான குற்றத்தை நிரூபிக்க முடியாததனால் அவர் விடுதலை செய்யப்பட்டார். இவர் 2009 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (10-4)

## போதையால் போனது பொருள்

### சைக்கிள், சங்கிலி, மோதிரம் - எல்லாம் பறிபோயின

யாழ்ப்பாணம், மார்ச் 30

மது அருந்தச் சென்றவர் சங்கிலி, மோதிரம், சைக்கிள் மற்றும் மணிக்கூடு என்று அனைத்தையும் இழந்து காயத்துடன் மறுநாள் வீடு போய்ச் சேர்ந்தார். பின்னர் அவர் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் யாழ். பிரதான வீதியில் இடம்பெற்றது. சம்பவத்தில் யாழ். திருநகர், இராஜசிங்கம் வீதியைச் சேர்ந்த பூ.சின்னையா (வயது- 52) என்பவரே சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

கடந்த செவ்வாயன்று மாலை 6 மணியளவில் மது அருந்துவதற்காக வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்றவர் வீடு திரும்பும் வழியில் பிரதான வீதியில் மயங்கிக் கிடந்தார்.

பின்னர் அதிகாலை விழித்து வீடு சென்றுள்ளார். எனினும் அவர் தனது 2 பவுண் நிறையுடைய மோதிரத்தையும் சங்கிலியையும் மணிக்கூட்டையும் தனது சைக்கிளையும் இழந்துள்ளதை உணர்ந்துகொண்டார்.

வீடு சென்ற அவரை உறவினர்கள் வைத்தியசாலையில் அனுமதித்தனர். (ஒ-4)

## ஒரே திறப்புடன் பல சைக்கிள்கள்

சாவகச்சேரி, மார்ச் 30

சைக்கிள் பூட்டுகளின் தரம் குறித்து யாழ்.குடாநாட்டு மக்கள் கேள்வியெழுப்பியுள்ளனர்.

ஒரு சைக்கிள் பூட்டுக்கு வழங்கப்படும் திறப்பால் ஏனைய சைக்கிள்களின் பூட்டுக்களையும் திறக்க முடிகிறது என்றும் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் சைக்கிள் பாவனையாளர்கள் சைக்கிளில் உள்ள பூட்டுடன் இரும்புச் சங்கிலியுடனான பூட்டையும் கொண்டு செல்ல வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இரவலாக சைக்கிளை வாங்கி வருவோர் திறப்பின் மகிமையால் கொண்டு வந்த சைக்கிளை விட்டு விட்டு வேறு சைக்கிளைத் தவறுதலாக எடுத்துச் செல்லும் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் குறித்த சைக்கிள்களின் உரிமையாளர்கள் தமது சைக்கிள்களைக் காணாது தவிக்கும் சம்பவங்களும் நடந்துள்ளன.

அது மட்டுமன்றி தவறுதலாகச் சைக்கிளை எடுத்துச் சென்றவர் வீட்டுக்குச் சைக்கிளைக் கொண்டு சென்றபோது சைக்கிள் மாறுபட்ட விடயம் தெரியவரவே அதனைத் தவறுதலாக மாறி எடுத்துச் சென்றவரோ அல்லது சைக்கிளை இரவல் கொடுத்தவரோ குறித்த இடத்துக்கு வந்து மன்னிப்புக் கேட்கும் சம்பவங்களும் அதிகரித்துள்ளன.

அண்மையில் சாவகச்சேரி பொது நூலகத்தின் முன்பாகப் புதிய சைக்கிளை பூட்டிவைத்துவிட்டு பத்திரிகை படிக்கச் சென்ற ஒருவர் வீடு திரும்பும் போது அங்கு நின்ற பழைய சைக்கிளை மாறி எடுத்துச் சென்றுள்ளார்.

அநாதரவாகக் காணப்பட்ட சைக்கிள் நகர சபையில்வைக்கப்பட்டுள்ளது. இதில் வேடிக்கை என்னவென்றால் பழைய சைக்கிளை நிறுத்திவிட்டு பத்திரிகை படிக்கச் சென்றவர் தனது சைக்கிளை காணாது தவித்துள்ளார்.

இந்த நிலையில் அவர் அங்கு நின்ற புதிய சைக்கிளை தனது பழைய சைக்கிள் திறப்பால் திறந்து பார்த்துள்ளார். அது 'படக்' என்று திறந்துவிட்டது. (ம-9)

## நாகர்கோவிலில் காத்தவராயன் கூத்து

யாழ்ப்பாணம், மார்ச் 30

நாகர் கோவில் கண்ணகை அம்மன் கோயில் முன்றலில் எதிர்வரும் 2 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு காத்தவராயன் கூத்து இடம் பெறவுள்ளது.

இதற்காக விசேட போக்குவரத்து ஒழுங்குகள் மாலை 6மணிக்கும் இரவு 8 மணிக்கும் கற்கோவளத்திலிருந்து குடத்தனை, அம்மன் ஊடாக நாகர்கோவில் அம்மன் கோயில் வரை நடைபெறவுள்ளது.

ஊர்மக்களால் நடத்தப்படும் காத்தவராயன் கூத்து இடப்பெயர்வு காரணமாக கடந்த 11 வருடங்களாக நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.(ம-13)



*சமாதி சமூக அபிவிருத்தி சங்கத்தால் விவசாயிகளுக்கு உபகரணங்கள் வழங்கும் வேலைத்திட்டம் மாத்தறை மாவட்டத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் மாத்தறை மாவட்ட அதுருலிய பிரதேச செயலர் பிரிவில் கடந்தவாரம் விவசாய உபகரணங்களை சமூக அபிவிருத்தி சங்கப் பணிப்பாளர் புத்திக பத்திரன விவசாயி ஒருவரிடம் வழங்குகிறார். (ம-14*

## "கல்லறைகளும் கருத்தரிக்கும்"

கடவுள் நம்பிக்கையுள்ள மனிதனுக்கு சாவு வாழ்வின் கடைசி வார்த்தையாக இருக்கமுடியாது. சாவு மனித வாழ்வின் நியதி என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. நமது வாழ்வுக்கும் அர்த்தமுண்டு, சாவுக்கும் அர்த்த முண்டு, நாம் வாழும்போது நன்மைகள் செய்தால் சாவை நாம் தோற்கடிக்க முடியும். வரலாற்றில் மக்களுக்காக வாழ்ந்தவர்கள் சாவை வென்று சரித்திரமானவர்கள். இயேசுவின் வாழ்வும் சாவும் நமக்கு வாழ்க்கைப் பாடங்களைக் கற்றுத் தருகின்றன. ''ஆடி அடங்கும் வாழ்க்கையடா, ஆறடி நிலமே சொந்தமடா'', ''காயமே இது பொய்யடா காற்றடித்த பையடா'' என்று வாழ்வின் நிலையாமையை நமது ஆன்றோர் அழகாகச் சொல்லியுள்ளனர். கருவறையிலிருந்து கல்லறைவரை தொடரும் எமது வாழ்க்கைப்போராட்டம் நாம் நல்லதைச் செய்து வாழ்வதில்தான் தங்கியுள்ளது. இயேசுவின் சாவு எமது வாழ்வுக்கான திறவுகோலாக அமைந்தது. நாம் செய்யும் தியாகங்கள் அடுத்தவருக்கு வாழ்வு கொடுப்பதாக வளம் அளிப்பதாக அமைகின்ற போதுதான் எமது வாழ்வுக்கு அர்த்தம் உண்டு. மடிந்தால் மண்ணாய்ப் போய்விடுவோம் என்ற நிலைமாறி, மடிந்தால் மறுவாழ்வு என்பதே எமது நம்பிக்கை. நல்லவர்களாக மனித நேயத்தோடு தியாக வேள்வியில் அடுத்தவருக்காக வாழ்ந்து செல்பவர்கள் தான் வரலாற்றில் தடங்களை, பதிவுகளை விட்டுச் செல்கின்றனர். அவர்கள் கல்லறைகள் தான் வாழ்வைக் கருத்தரிக்கின்றன. ஒவ்வொரு விதையும் மண்ணில் மடிவதன் நோக்கம் புதைக் கப்படுவதற்கு அன்று; விதைக்கப்படுவதற்காகத்தான், தர்மம் என்றைக்கும் தோற்றுப் போனதாக வரலாறு இல்லை. ஞாபகங்கள் கூட நம்மோடு இருக்கமுடியாத ஒரு சூழலில் சாவைத்தாண்டி வாழ நாம் எம்மையே உடைத்து கரைத்து பகிர்ந்து வாழ்கின்றபோது கல்லறைகளுக்குள்ளும் வாழ்வு பிரசவிக்கும் என்பதே உண்மை. இதைத்தான் யேசுவின் மரணம் எமக்கு உணர்த்தி நிற்கின்றது. நாம் வாழுகின்ற இடங்களில் விதைகளாக விழுந்து மடிந்து எழுகின்றபோதே அடுத்தவருக்குப் பயன் கொடுக்கும், நிழல் கொடுக்கும் விருட்சங்களாக மாறமுடியும். இதுவே நம வாழ்வின் இருப்பிற்கான அர்த்தத்தை கொடுக்கும்.

தவக்காலச் சிந்தனை

யேசு தன்னையே கையளித்து அர்ப்பணித்து சாவின் மூலம் வாழ்வைப் பெற்றுத் தந்தார். நாமும் பிறருக்காக மடிந்து வாழ்வதே தவக்காலத்தின் நோக்கமாகும்.

அருட்கலாநிதி ஸ்ரனி அ.ம.தி, விரிவுரையாளர்
புனித வளனார் அ.ம.தி குருமடம் கொழும்புத்துறை.

## சிவத்தின் இயல்பு

நாம் உலகத்தோடு தொடர்பு வைத்துள்ளவரை இந்த உலகத்தோடு தொடர்புடைய எண்குணக் கடவுளை வணங்கவேண்டும். நாம் உலகத்தொடர்பை விட்டால் உலகத் தொடர்பில்லாத நிர்க்குணக் கடவுளை வழிபடலாம். இவ்வாறு எண்குணமாகவும் நிர்க்குணமாகவும் கூறப்படும் கடவுளுக்குத்தான் சைவசமயம் ''சிவம்'' என்று பெயர் கொடுத்திருக்கிறது. இந்த நிலைகட்குச் ''சொரூப நிலை, தடத்தநிலை'' என்றும் பெயர். இவை ஒன்றுக்கொன்று மாறுபட்டது போலத் தோன்றுவதால் இவ்விரண்டு தன்மையிலும் நிற்கும் கடவுளை வர்ணிக்கும் போதும் ஒன்றோடொன்று மாறுபட்ட சொற்கள் அடுக்கடுக்காக வரும். உதாரணமாகக் கடவுளிலக்கணம் பற்றி சிவஞானசித்தியார் கூறும் முதற் சூத்திரத்தின் கடைசிச் செய்யுள் வருமாறு:-

*''சிவன் அருஉருவும் அல்லன் சித்தினோடு அசித்தும் அல்லன்*
*பவமுதல் தொழில்கள் ஒன்றும் பண்ணிடுவானும் அல்லன்*
*தவமுதல் யோகபோகம் தரிப்பவன் அல்லன்தானே*
*இவை பெற இயைந்தும் ஒன்றும் இயைந்திடா இயல்பினானே''*

என்று சிவபெருமானை வர்ணிக்கிறது.

ஞானக்கதிர்

## புதிதாக விண்ணபித்தோருக்கு கொடுப்பனவு வழங்கப்படவில்லை

நவாலி, மார்ச் 30

பொதுசன உதவிப் பணத்தை பெற்றுக்கொள்வதற்கு பிரதேச செயலகங் களில் புதிதாக விண்ணப்பம் செய்தவர்களுக்கு அதற்கான கொடுப்பனவு உடன் வழங்கப் படவில்லை.

இந்தக் கொடுப்பனவை வழங்குவதற்கு மேலதிக நிதி பிரதேச செயலகங் களுக்கு சமூக சேவையின் திணைக்களத்தால் ஒதுக்கப் படாமையினால் சமூகசேவை உத்தியோகத்தர்கள் பெரும் திண்டாட்டத்துக்கு உள்ளாகியிருப் பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் மேற்படி கொடுப்பனவுக்கு விண்ணப்பம் செய்தோர் பெரிதும் கஷ்டப்படுவதனால் அடிக்கடி கிராம சேவையாளர்களிடமும் பிரதேச செயலகங்களுக்கும் சென்று வருகின்றனர். (வ)

# மரண அறிவித்தல்

# கந்தையா சச்சிதானந்தன் (சச்சி)

(முன்னைய உரிமையாளர், ஆனந்தன் எலெக்ரிக்கல்ஸ், சாவகச்சேரி)



நாவற்குழி கிழக்கைப் பிறப்பிடமாகவும், தற்போது கோயில் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சச்சிதானந்தன் கடந்த 27.03.2012 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-மனோன்மணி தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான முத்தையா-இரத்தினத்தின் அன்பு மருமகனும், புஸ்பராணியின் பாசமிகு கணவரும், திருநாவுக்கரசு (முன்னைய விக்னேஸ்வரா ஜுவல்லறி-சாவகச்சேரி), தில்லையம்பலம் (ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர், தென்மராட்சி வலயம்), குமாரலிங்கம் (நகைக்கடை-ஸ்கந்தபுரம்), செல்வராசா (முன்னைய விக்னேஸ்வரா உரிமையாளர்-கிளிநொச்சி), கோமதி (ஆசிரியை-யா/கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், றதி (சுவிஸ்), கௌரி (ஆசிரியை, யா/நல்லூர் ஞானோதயா வித்தியாலயம்), ரவிச்சந்திரன் (சுவிஸ்), ரவிக்குமார் (சுவிஸ்), ரவிசங்கர் (சுவிஸ்) ரவிதாஸ் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நந்தகுமார் (சுவிஸ்), யோகேந்திரன் (நகைவியாபாரம்), வாசுகி (சுவிஸ்), அமரதாரணி (சுவிஸ்), மகிழ்ந்தினி (சுவிஸ்) ஆகியோரின் அருமை மாமனும், பிரதீப், ஹரிஸ், அபினா, மோனிக்கா, மதுஷன், மயூரிக்கா, சஞ்சீவ், வாகீஷன், அபிசன், அஸ்மீ ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.03.2012) வெள்ளிக் கிழமை காலை 7.00 மணிக்கு கோயில் வீதி, நல்லூரில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப 10.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**366, கோயில் வீதி,**
**நல்லூர்.**

**தகவல்:**
**புஸ்பராணி (மனைவி),**
**பிள்ளைகள்.**

(16190) (6,7,10)

# வட கொரியாவுக்கு உணவு; அமெரிக்கா இடைநிறுத்தம்

## ஏவுகணை சோதனையை அடுத்து



வடகொரியா அடுத்த மாதம் புதிய ஏவுகணை சோதனையொன்றை நடத்தவுள்ளமையே இதற்கான காரணம்

வொஷிங்டன், மார்ச் 30

வடகொரியாவுக்கு வழங்கத் திட்டமிட்டிருந்த உணவு உதவிகளைத் இடைநிறுத்தியுள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

வடகொரியா அடுத்த மாதம் புதிய ஏவுகணைச் சோதனையொன்றை நடத்தவுள்ளமையே இதற்கான காரணம். இந்த ஏவுகணைச் சோதனையானது கடந்த மாதம் செய்து கொள்ளப்பட்ட உடன்பாட்டுக்கு முரணானதாகும் எனவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

வடகொரியாவின் ஏவுகணைச் சோதனை உடன்பாட்டுக்கு முரணானது என்பதுடன் வழங்க உத்தேசிக்கப்பட்ட உணவு உதவிகள் முறையாக விநியோகிக்கப்படும் என நம்ப முடியாதுள்ளது என்று ஆசிய பசுபிக் விவகாரங்களுக்கான உதவிப் பாதுகாப்புச் செயலர் பீற்றர் லவோய், அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் தெரிவித்துள்ளார்.

2009 ஆம் ஆண்டுக்குப் பின் அமெரிக்க உணவு உதவிகள் வடகொரியாவுக்கு வழங்கப்படவில்லை. எனினும் மீண்டும் உதவிகளை வழங்குவது குறித்து தீர்மானிப்பதற்காக வடகொரியாவின் நட்பு நாடான சீனாவுக்கு அமெரிக்கா தனது அதிகாரிகளை அனுப்பியது.

இந்தத் திட்டத்தின்படி சிறுவர்கள், கர்ப்பிணிகளுக்கான 240,000 தொன் உணவுப் பொருள்களை அமெரிக்கா வழங்க இருந்தது. ஆனால் இந்தத் திட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று இப்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

# சூடான் எல்லையில் மீண்டும் மோதல்

சூடான் மற்றும் தென் சூடான் இராணுவத்தினருக்கு இடையில், அந்நாட்டு எல்லையில் மோதல்கள் இடம்பெற்றுள்ளன. இதையடுத்து தென்சூடானுக்கு, சூடானிய அதிபர் மேற்கொள்ள இருந்த பயணம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

சூடானின் போர் விமனங்கள் எல்லைப் பகுதியில் உள்ள இரண்டு நகரங்களில் குண்டுகளை வீசின எனவும்,ஓர் இடத்தில் தரை வழித் தாக்குதலை நடத்தி இரு இராணுவ நிலைகளை அந்நாட்டுப் படை கைப்பற்றியது என்றும் தென்சூடான் அறிவித்துள்ளது.

அதேவேளை தமது எண்ணெய் நிலையம் ஒன்றின் மீது தென்சூடான் தாக்குதல் நடத்தியது என சூடான் குற்றம்சாட்டியுள்ளது.

இந்த மோதல்களில் படையினர் பலர் கொல்லப்பட்டுள்ளனர் என்று இருதரப்பும் கூறியுள்ளன.

சூடானில் இருந்து தென் சூடான் பிரிந்து சென்றதன் பின் அங்கு அடிக்கடி மோதல்கள் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

# செயற்கை மார்பகச் சிகிச்சை எச்சரிக்கை முறையாக இல்லை

## சிலிக்கன் ஆபத்து குறித்தும் மருத்துவர்கள் வாய்திறக்கவில்லை

செயற்கை மார்பக சிகிச்சையின் போது பெண்களுக்கு போதுமான அளவில் எச்சரிக்கை விடுக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இதுகுறித்து சுகாதாரத் தெரிவுக் குழு அறிக்கையில், கடந்தாண்டு டிசெம்பர் மாதம் தொழிற்சாலையில் பயன்படுத்தும் சிலிக்கன் உள்ளீடைப் பற்றி முன்னெச்சரிக்கை அறிவிப்பு 20 மாதங்களுக்கு முன்பு மருத்துவர்களால் வெளியிடப்பட்டது. ஆனால் அந்த கால அவகாசம் போதாது, முன்னதாகவே மருத்துவர்கள் இதன் ஆபத்துகள் குறித்து பொது மக்களுக்கு எச்சரிக்கை விடுத்திருக்க வேண்டும்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசு பரிசீலனையின் போது மருந்து மற்றும் சுகாதாரப் பொருள்களின் ஒழுங்காற்று அமைப்பு இந்த உள்ளீடு குறித்து இன்னும் அதிகமாக ஆராய்ந்திருக்க வேண்டும் என்றும் இந்த சுகாதாரத் தெரிவுக் குழுவின் அறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது.

ஏறத்தாழ 47,000 பெண்கள் பிரிட்டனில் இந்த உள்ளீட்டைப் பயன்படுத்துகின்றனர். இவர்களுக்கும் சிலிக்கன் கசியும் ஆபத்துகள் உள்ளது.

இவ்வாறு கசியும் சிலிக்கனால் வீக்கமும், வேறு சில பிரச்னைகளும் உருவாகின்றன.

அறுவைச் சிகிச்சைக்கு முன்னர் பெண்களிடம் அவர்களுக்குப் பொருத்தப்படும் சிலிக்கன் உள்ளீடுகள் சிதைந்து கசியும் வாய்ப்பு இருப்பதாக மருத்துவர்கள் எச்சரிக்கவில்லை என்றும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஆனால் பிரிட்டனின் அழகியல் செயற்கை அறுவை சிகிச்சைக் கழகம் தாங்கள் அனைத்திலும் முறையாக நடந்து கொண்டதாகத் தெரிவித்துள்ளது.




பிரிட்டிஷ் இளவரசர் ஹரி ஜமாய்க்காவில் அந்தப் பிராந்திய இராணுவ வீரருடன் அளவளாவினார்.

## இஸ்ரேலில் எதிர்க்கட்சி தலைவராக முன்னாள் இராணுவ அதிகாரி

ஜெருசலேம், மார்ச் 30

இஸ்ரேலின் பிரதான எதிர்க்கட்சியின் தலைவராக முன்னாள் இராணுவ அதிகாரி ஷோன் மொபாஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

எதிர்க்கட்சி வேட்பாளர் பதவிக்காக நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் மொபாஸ் தற்போதைய தலைவரைத் தோற்கடித்தார்.

ஷோன் மொபாஸ் கட்சித் தலைமைப் பதவிக்கான வாக்கெடுப்பில் 65 வீத வாக்குகளைப் பெற்றார். இதனையடுத்து எதிர்க் கட்சி வேட்பாளராகத் தெரிவாகியுள்ள மொபாஸ், பொதுத் தேர்தலில் பிரதமர் பென்ஜமின் நெடன் யாகுவை தோற்கடிக்கக் காத்திருப்பதாகக் குறிப்பிட்டார்.

## ஆள் கடத்தலில் ஈடுபட்ட அறுவர் ஆஸி,தாய்லாந்தில் கைது

சட்ட விரோத ஆள்கடத்தல் வலையமைப்புடன் தொடர்புடைய 6 பேரை ஆஸ்திரேலிய மற்றும் தாய்லாந்துப் பொலிஸார் கைது செய்துள்ளனர். பல ஆண்டுகளாக முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளைத் தொடர்ந்தே இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

இதில் ஈராக்கியர் ஒருவரும் அவரது மனைவி என சந்தேகிக்கப்படும் தாய்லாந்துப் பெண் ஒருவரும் தாய்லாந்தில் கைது செய்யப்பட்டுள்ளனர். கடவுச் சீட்டு கொள்ளையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதேபோன்று தென் கிழக்கு ஆசியாவினூடாக ஆஸ்திரேலியாவுக்கு ஆள் கடத்தும் குற்றச்சாட்டில் நால்வர் ஆஸ்திரேலியாவில் கைது செய்யப்பட்டனர். இது தொடர்பில் மலேசிய, இந்தோனேஷிய நிர்வாகங்கள் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றன.

எல்லைப் பாதுகாப்பு நடவடிக்கையின் கீழ் தாய்லாந்தில் கைது செய்யப்பட்ட இருவரிடம் இருந்து ஐக்கிய அரபு இராச்சியம், ஈரான், ஈராக் நாட்டு போலிக் கடவுச் சீட்டு தயாரிக்கும் இயந்திரம் மற்றும் கொள்ளையிடப்பட்ட 16 கடவுச் சீட்டுகள் கைப்பற்றப்பட்டன எனத் தாய்லாந்து பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

# பிரிட்டன் வன்முறைகளுக்கு வறுமை நிலையும் காரணம்

## விசாரணைக் குழு அறிக்கை

பிரிட்டனில் கடந்த வருடம் ஒகஸ்ட் மாதம் ஏற்பட்ட வன்முறைகளுக்கு அந்த நாட்டில் சமூகத்தின் கீழ் மட்டத்தில், மறைக்கப்பட்ட நிலையிலுள்ள 500,000 குடும்பங்களின் இயலாமை நிலையும் பகுதியளவில் காரணம் என்று என அந்த வன்முறை குறித்து ஆராய்ந்த சுயாதீன விசாரணைக் குழுவொன்றின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

அவர்கள் தமது வாழ்க்கையை மாற்றிக்கொள்ள முடியாமல் சமூகத்தின் கீழ் மட்டத்தில் அவதியுறுகின்றனர்.

கல்வியறிவின்மை, இளைஞர் தொழில்வாய்ப்பு குறித்த நம்பிக்கையின்மை, பொருள் முதல்வாதம், பொலிஸார் மீதான சந்தேகம், குற்றம் செய்தவர்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்கான நீதிமுறைமையின் தோல்வி என்பன இந்த வன்முறைகளுக்குக் காரணம் - என்றுள்ளது.

மார்க் டக்கன் எனும் கறுப்பின இளைஞர் ஒருவர் பொலிஸாரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் கொல்லப்பட்ட பின்னர், லண்டன், பேர்மிங்ஹாம், மன்செஸ்டர் உட்பட பிரிட்டனின் பெரு நகரங்கள் பலவற்றில் மிகப் பெரிய வன்முறைகள் ஏற்பட்டன. அதையடுத்து பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன் மற்றும் பிரதிப் பிரதமர் நிக் கிளெக் ஆகியோரினால் இந்த விசாரணைக்குழு நியமிக்கப்பட்டது.

# சவூதி துணைத்தூதர் ஏமனில் படுகொலை

ஏமனில் சவூதி அரேபியத் துணைத் தூதர் இனம்தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்டு துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.


ஏமனின் தெற்கு மாகாணமான ஏடன் துறைமுகப் பகுதியில் மன்சவுரா நகரில் சவூதி அரேபியத் துணை தூதர் அப்துல்லா அல் காலித், பணிக்காக தனது காரில் சென்று கொண் டிருந்த வேளை வாகனம் ஒன்றில் வந்த இனம்தெரியாத நபர்கள் சிலர் அவரை துப்பாக்கி முனையில் கடத்திச் சென்று சுட்டுக் கொன் றனர் என்று ஏமன் பாதுகாப்புப் படை அதிகாரி தெரிவித்துள்ளார்.

கடத்திச் சென்றவர்கள் அல்குவைதா இயக்கத்துடன் தொடர்புடைய தீவிரவாதிகளாக இருக்கலாம் எனப் பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அல் காலித்துடன் ஏமனில் சவூதி துணைத் தூதர்கள் இருவர் கொல்லப்பட்டுள்ளனர்.

# முகமாற்று அறுவைச் சிகிச்சை அமெ.மருத்துவர்கள் சாதனை

## 15 ஆண்டுகள் ஒதுங்கி இருந்தவருக்கு புதிய வாழ்க்கை



துப்பாக்கிக் குண்டு துளைத்த (37 வயது) அமெரிக்க இராணுவ வீரர் ஒருவருக்கு இதுவரை இல்லாத அளவில் மிகப் பெரிய முகமாற்று அறுவைச் சிகிச்சை செய்து மருத்துவர்கள் சாதனை புரிந்துள்ளனர்.

அமெரிக்காவில் உள்ள மேரிலண்ட் பல்கலைக்கழக மருத்துவமனையிலேயே இந்த அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

ரிச்சர்ட் லீ நோரிஸ் என்ற இந்த வீரர் பயங்கர விபத்துக்குப் பின்னர் 15 ஆண்டுகள் சமூகத்திலிருந்து ஒதுங்கியே வாழ்ந்து வந்தார்.குண்டு பாய்ந்து மிகவும் கொடூரமாக மாறிய தனது முகத்தை மறைப்பதற்காக இவர் எந்நேரமும் முகமூடி அணிந்து வந்தார்.

இந்தநிலையில் மேரிலண்ட் பல்கலைக்கழக மருத்துவ மையத்தின் அறுவைச் சிகிச்சை நிபுணர்கள் அவருக்கு இதுவரை இல்லாத அளவில் மிகப்பெரிய முகமாற்று அறுவை சிகிச்சையை மேற்கொண்டு சாதனை புரிந்துள்ளனர்.

இவரது முகத்தின் தோற்றம் மட்டுமல்லாது அவருடைய பல்வரிசை, நாக்கு, தாடை எலும்பு எல்லாமே புதிது தான்.

36 மணி நேரம் நடைபெற்ற இந்த அறுவைச் சிகிச்சை தான் இதுவரையில் நடந்த முகமாற்று அறுவைச் சிகிச்சைகளிலேயே மிகப் பெரியது. அறுவை சிகிச்சைக்குப் பின்னர் ரிச்சர்ட் லீ நோரிஸ் உடல் நலம் தேறிவருகிறார். அவரால் பல் துலக்கவும், முகச் சவரம் செய்து கொள்ளவும் முடிகிறது, அவரால் மீண்டும் வாசனைகளை நுகர முடிகிறது என்று அவரது மருத்துவர்கள் கூறுகின்றனர்.

அதுமட்டுமன்றி ஈராக்கிலும், ஆப்கானிஸ்தானிலும் இராணுவப் பணியின்போது காயமடைந்தவர்களுக்கும் விரைவில் இப்படியான முகமாற்று அறுவை சிகிச்சைகளைச் செய்ய முடியும் என அந்த நிபுணர்கள் மேலும் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

15 ஆண்டுகள் ஒதுங்கி வாழ்ந்தவருக்கு புதிய வாழ்க்கை கிடைத்துள்ளது என்று பலரும் கருத்து தெரிவித்துள்ளனர்.

# ஈரான் பேச்சுக்குத் தயார்


## அந்த நாட்டின் வெளியுறவு அமைச்சர் தெரிவிப்பு

தெஹ்ரான், மார்ச் 30

ஈரானின் அணுசக்தித் திட்டங்கள் தொடர்பாக, ஆறு நாடுகளுடனான பேச்சு அடுத்த மாதம் தொடங்கும் என்று அந்த நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் அலி அக்பர் சலேஹி தெரிவித்துள்ளார்.

ஈரான் தனது அணு ஆயுதத் தயாரிப்பு முயற்சியைக் கைவிடுவது குறித்தும் யுரேனியம் செறிவூட்டல் குறித்தும் அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ், பிரிட்டன், சீனா மற்றும் ஜேர்மன் ஆகிய ஆறு நாடுகளுடன் கடந்தாண்டில் பேச்சு நடத்தியது. துருக்கி தலைநகர் இஸ்தான்புல்லில் நடந்த பேச்சு தோல்வியில் முடிவடைந்தது.

இந்நிலையில், ஈரான் வெளியுறவு அமைச்சர் அலி அக்பர் சலேஹி நேற்றுமுன் தினம் விடுத்த அறிக்கையில், "ஆறு நாடுகளுடனான ஈரானின் பேச்சு, ஏப்ரல் 13ஆம் திகதி நடக்கும். எங்கு நடத்துவது என்பது குறீத்து ஆலோசித்து வருகிறோம். துருக்கியில் நடத்த அந்தநாடு விருப்பம் தெரிவித்துள்ளது''- என்றார்.



இதேவேளை துருக்கிப் பிரதமர் ரீசெப் தைப் எர்டோஜன் இருநாள் பயணமாக ஈரான் வர இருக்கிறார். அவர் அணு சோதனை முறைகளைப் பார்வையிடுவார் என்று தெரிவித்தார்.

இதற்கிடையே ஈரானுக்கான அணு சக்தி ஆலோசகர் சையத் ஜலில் " பேச்சு எங்கு எப்போது நடத்துவது என்பது குறித்தும் ஒப்பந்தம் கையெழுத்திடுவது குறித்தும் விரைவில் அறிவிப்பு வெளியிடப்படும் ''- என்று கூறினார்.

## பிரபஞ்ச அழகிப் போட்டி : பால்மாற்று அழகி நீக்கம்




பிரபஞ்ச அழகி போட்டிக்காக கனடா நாட்டு அழகியைத் தெரிவு செய்யும் போட்டியிலிருந்து பால் மாற்று சத்திரசிகிச்சை செய்து கொண்ட ஜென்னா டெலிகோவா என்பவர் நீக்கப்பட்டுள்ளார்.

மேற்குக் கனடிய நகரான வென்கோவரில் இருந்து போட்டியில் பங்கேற்ற 23 வயதான டெலிகோவா, போட்டிக்கான விதிகளை மீறியதால் நீக்கப்பட்டார் என்று ஏற்பாட்டுக்குழு தனது இணையத்தளத்தில் அறிவித்துள்ளது.

அத்துடன் அவரைத் தகுதி நீக்கம் செய்யுமாறு 28 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இணையத்தளம் மூலம் ஏற்பாட்டுக் குழுவுக்கு முறைப்பாடு செய்துள்ளனர். எனினும் கனடா பிரபஞ்ச அழகிப் போட்டியில் டெலிகோவா முன்னணிப் போட்டியாளராக இருந்துள்ளார்.

இவர் 65 இறுதிப் போட்டியாளர் வரிசைக்கும் தேர்வு பெற்றுள்ளார். இந்த நிலையில் கடந்த 2010ஆம் ஆண்டு டெலி கோவா பால் மாற்று சிகிச்சை செய்து உலக அழகு ராணி போட்டியில் பங்கேற்றது வெளிச்சத்துக்கு வந்ததையடுத்து சர்ச்சை கிளம்பியுள்ளது. அத்துடன் அவர்கடந்த 2010ஆம் ஆண்டு அளித்த பேட்டி ஒன்றில், தான் ஆணாகப் பிறந்ததை ஒப்புக் கொண்டுள்ளார். தனது 19 ஆவது வயதில் செய்துகொள்ளப்பட்ட சத்திரசிகிச்சை மூலம் பெண்ணாக மாறியதாகவும் பேட்டியில் கூறியுள்ளார்.

## தப்பியது ஆப்கான் தலைநகர் தற்கொலைத் தாக்குதல் முறியடிப்பு

### வெடிகுண்டுகளுடன் ஜக்கெட்டுக்கள் மீட்பு

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் பெரியளவில் நடத்தத் திட்டமிட்டிருந்த தற்கொலைத் தாக்குதல் முறியடிக்கப்பட்டது. தற்கொலைப் படைத் தாக்குதல் நடத்தும் தீவிரவாதிகள் அணிந்து கொள்ளும் வெடிகுண்டு இணைக்கப்பட்ட ஜக்கெட்டுகள் ஆப்கான் தலைநகர் காபூலில் உள்ள பாதுகாப்பு அமைச்சகத்தின் 3 அறைகளில் உளவுத் துறை அதிகாரிகளால் நேற்றுமுன்தினம் கண்டெடுக்கப்பட்டது. இதனால் பெரும் பீதி ஏற்பட்டது. இது தொடர்பாக ஆப்கன் ராணுவ வீரர்கள் உட்பட 18 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பஸ்களில் மிகப் பெரிய அளவில் தற்கொலை தாக்குதல் நடத்தி ஆயிரக்கணக்கானோரைக் கொல்லத் திட்டமிட்டிருந்தது முதல்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது. உரிய நேரத்தில் அந்த வெடிபொருள்கள் கண்டெடுக்கப்பட்டதால் பெரியளவில் நடக்க இருந்த அசம்பாவிதம் தடுக்கப்பட்டுள்ளது.

## திபெத் விடுதலை நாள் கொண்டாடியது சீனா

பீஜிங், மார்ச் 30

திபெத்திய புத்த மதத் தலைவர் தலாய்லாமாவின் பிடியில் இருந்து திபெத் விடுவிக்கப்பட்டதன்,53ஆவது ஆண்டை சீன அரசு நேற்று முன்தினம் கொண்டாடியது.

சீனாவில் தொடர்ந்த உள்நாட்டுப் போராட்டங்களுக்குப் பின் மாவோ தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சி 1949இல் நாட்டைத் தன் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தது. தொடர்ந்து 1951இல் திபெத்தையும் தன் ஆட்சியின் கீழ் கொண்டு வந்தது. அதை எதிர்த்து 1959இல், திபெத் தலைநகர் லாசாவில் பெரும் புரட்சி உருவானது. சீன ராணுவம் அதை முறியடித்தது. இதை நினைவு கூரும் வகையில் நேற்றுமுன் தினம் திபெத் விடுதலை நாள் சீனாவில் கொண்டாடப்பட்டது.

இதுகுறித்து திபெத் சுயாட்சிப் பகுதியின் தலைவர் பத்மா சோலிங் ," தலாய் லாமா மற்றும் திபெத் நாடு கடந்த அரசு, திபெத்தில் மீண்டும் நிலப் பிரபுத்துவத்தைக் கொண்டு வர முயல்கின்றனர். இந்த முயற்சிகள் என்றும் வெற்றிபெறப் போவதில்லை" என்றார்.

சீன அரசியல் அமைப்புச் சட்டத்தின் படி, 1959, மார்ச் 29ஆம் திகதி அப்போதைய திபெத் அரசு கலைக்கப்பட்டது. கடந்த 2009 இல் கொண்டு வரப்பட்ட திருத்தத்தின்படி, மார்ச் 28ஆம் திகதி, திபெத் விடுதலை நாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த நிகழ்வின் போது சீன அரசின் சர்வதேச சீன ஆய்வு நிறுவனத்தின் தலைவர் க்யூ ஷிங் திபெத் சீனாவின் பிரிக்க முடியாத பகுதி என்பதை திபெத்திய தலைவர்கள் ஏற்றுக் கொண்டால் பேச்சு தொடங்க வாய்ப்புள்ளது''- என்றார்.

## காஸ்ட்ரோவுடன் பாப்பரசர் பேச்சு

கியூபாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள பாப்பரசர் 16 ஆவது போப் பெனடிக்ட், முன்னாள் கியூபா தலைவர் பிடல் காஸ்ட்ரோவைச் சந்தித்துப் பேசினார்.

வரலாற்று ரீதியான இந்தச் சந்திப்பு வத்திக்கான் தூதரகத்தில் 30 நிமிடங்கள் வரை நீடித்தது. இச்சந்திப்பின் போது காஸ்ட்ரோ, பாப்பரசரின் பணிகள் என்ன? என கேள்வி எழுப்பினார். அதற்கு பாப்பரசர் அவரது அமைச்சகம், பயணங்கள் மற்றும் தேவாலயங்களுக்கு அவர் புரியும் சேவைகள் குறித்து விளக்கினார்.

---

31 ஆம் நாள் நினைவஞ்சலியும்

வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மலர்வு 22.09.1937

உதிர்வு 29.02.2012

**அமரர் வேலுப்பிள்ளை முருகையா** (N.V.M. சுருட்டு முதலாளி)

அல்லும் பகலும் தோட்டமும் சுருட்டுமே உங்கள்
ஆதாரமான தொழில் என உணர்ந்து கொண்டு
இரண்டையும் சமகாலத்தில் புரிந்தீரே அப்பா
ஈர்மூவரைப் பெற்று கல்விதனைப் புகட்டி
உலகில் எம்மைச் சிறப்பாய் வாழ வைத்தீரே
ஏன் ஐயா எங்குதான் போனீரோ பேசாமலே
இடையில் எம்மை தவிக்கவிட்டு
இடைவழியில் போவீர்கள் என
இமையளவும் நினைக்கவில்லையே நாம்
ஐயோ அப்பா என ஐந்துநாள் கதறினோமே
ஒன்றுமே பேசாது போய்ச்சேர்ந்து விட்டீர்களே
நெஞ்சிருக்கும் வரைக்கும் உங்கள் நினைவாய் வாழ்ந்திடுவோம்
ஓங்கார நாயகனே ஆத்மசாந்திக்காய் பிரார்த்திக்கின்றோம்.

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு 29.02.2012 புதன் அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் இறுதிக்கிரியைகளில் நேரில் வந்து கலந்து கொண்டவர்களுக்கும், தொலைபேசி, தபால் மூலம் அனுதாபச் செய்தியினைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் எமது நன்றியினைத் தெரிவிப்பதுடன் இன்று (30.03.2012) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

உங்கள் பிரிவுத்துயரில் வாடும்:-

பாப்பா தோட்ட வீதி, இனுவில் மேற்கு, இனுவில்.

குடும்பத்தினர்.

(16174) (2-6-7)

---

ஈர விழிகளுடன் ஈராண்டு நினைவுகள்



| மலர்வு | உதிர்வு |
| --- | --- |
| 05 ★ 09 ★ 1934 | 30 ★ 03 ★ 2010 |

**அமரர் முத்தையா சிவசுப்பிரமணியம்**

திதி : 07.04.2012

பாரினில் நீங்கள் வாழ்ந்த - அந்த
பசுமையான காலங்கள்
எம் மனதில் இரண்டாண்டு சென்றும்
விலகவில்லை ஐயா வாழ்கின்றோம்
உம் நினைவுடன்

74/1, சட்டநாதர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்

(C/218))(6-7-8)

குடும்பத்தினர்

---

நீங்காத நினைவலைகள்

10ஆம் ஆண்டு



தோற்றம் 27 * 01 * 1932 — மறைவு 08 * 04 * 2002

**அ. செபநாயகம்**

25ஆம் ஆண்டு



தோற்றம் 10 * 12 * 1935 — மறைவு 30 * 03 * 1987

**செ.அருளம்மா**


"வாழ்க்கைக்கு" அர்த்தம் தந்தீர்
நன் நெறிகளை கற்றுத் தந்தீர்
நீதிக்காய் குரல் கொடுத்தீர்
மக்கள் சேவைக்கே உம் வாழ்க்கையை அர்ப்பணித்தீர்.
அதனால் மக்கள் மனங்களிலும் இடம்பிடித்தீர்
முயற்சிக்கு ஓர் எடுத்துக்காட்டானீர்
உம் வழியில் நாமும் நடக்க முயற்சிப்போம்.

14/2, கோயில்வீதி, யாழ்ப்பாணம்.

பிள்ளைகள்.

(16147) (6,7,10)

## பிரமோஸ் வெற்றிகரமாக விண்ணுக்கு



ஒரிசா மாநிலம் சந்திப்பூரில் உள்ள ராணுவ ஏவு தளத்திலிருந்து நேற்றுமுன்தினம் முற்பகல் 11.22 மணி அளவில் இந்தியா-ரஷ்யா கூட்டு முயற்சியில் உருவான பிரமோஸ் ஏவுகணை வெற்றிக ரமாகப் பரிசோதிக்கப்பட்டது.

சிறப்பம்சங்கள்: 290 கிலோ மீற்றர் வேகத்தில் பயணித்த இந்த ஏவுகணையில் 200 கிலோ முதல் 300 கிலோ எடையிலான வெடி பொருளைச்செலுத்த முடியும்.

இந்த ஏவுகணை தரையிலிருந்து சென்று மற்றொரு இலக் கைத் தாக்கும் திறன் கொண்டது. இதில் எரி பொருள் இரண்டு கட்டங்களாக நிரப்பப்பட்டுள்ளது.

முதல் பகுதியில் திட எரிபொரு ளும் இரண்டாவது பகுதியில் திரவ எரிபொருளும் நிரப்பப்பட்டுள்ளன. ஏற்கனவே இந்த ஏவுகணை ராணுவம் மற்றும் இந்திய கடற்படையில் சேர்க்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

# ராணுவத் தளபதிக்கு கட்டாய விடுமுறை

## மத்திய அரசு அதிரடி



டில்லி, மார்ச்.30

தொடர்ந்து சர்ச்சை கிளப்பி வரும் இந்திய ராணுவத் தளபதி வி.கே. சிங்குக்கு கட்டாய விடுமுறை அளிக்க மத்திய அரசு திட்டமிட்டிருப்பதாக டில்லி வட்டாரங்கள் தெரிவித்தன

இந்திய நாட்டின் ராணுவ பாதுகாப்பில் போதிய தளபாடங்கள் இல்லாமல் பல வீனமாக இருப்பதாக பிரதமருக்கு ராணுவத் தளபதி வி.கே.,சிங் கடிதம் எழுதியிருக்கிறார். வயதுசர்ச்சை, 14 கோடி பேரம், தற்போது பிரதமருக்கு அனுப்பிய கடிதம் எனப் பல்வேறு சர்ச்சைகள் கிளப்பி வருவ தால்மத்தியஅரசுபெரும்குழப்பத்தில் ஆழ்த்திருக் கிறது.

இந்த விவகாரம் தொடர்பாக விளக்கம் அளிக்க வேண்டும் என்று நாடாளுமன்றத்தில் பாரதீய ஜனதாக் கட்சி தரப்பில் வெங்கையா நாயுடு கோரினார். இதற்கு பதில் அளித்த பாது காப்புத் துறை அமைச்சர் ஏ.கே., அந்தோணி,

இது தொடர்பான விவரம் எனக்குத் தெரியும். ராணுவ பாதுகாப்புத் தொடர்பான விடயத்தை வெளிப்படையாகப்பேச முடியாது. இருப்பினும் விரைவில் விளக்கம் அளிக்கப்படும் என்று தெரிவித்தார்.

ராணுவ ரீதியிலான கடிதம் ஊடகங்களுக்குத் தெரிய வந்ததையடுத்து தளபதி மீது உரிய நட வடிக்கை எடுக்க வேண்டும் என்றும், இவரை பொறுப்பில் இருந்து நீக்க வேண்டும் என்றும் சமாஜ்வாடி மற்றும் ஐக்கிய ஜனதாதள கட்சியினர் நாடாளுமன்றத்தில் கோரிக்கை வைத்தனர்.

கடந்த 12 ஆம் திகதி ராணுவத் தளபதி வி.கே.,சிங் பிரதமருக்கு கடிதம்ஒன்றை அனுப்பியுள்ளார். இந்தக் கடிதத்தில் நாட்டின் ராணுவ பாதுகாப்பு ஸ்திரத் தன்மையற்று இருப்பதாவும், எதிரிகளைச் சந்திக்க போதிய ஆயுதங்கள் இல்லாமல் சவால்களைச் சந்திக்க சிரமப்படுவதாகவும், இரவு நேரத்தில் பல்வேறு சிக்கல்கள் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

வான்வழி பாது காப்பு 97 சதம் மோசமாகவும், பாதுகாப்பற்றதாகவும், மேலும் எமது ராணுவ குறைபாட்டைகளைந்திட முயற்சிக்க வேண்டும் என்றும் , இன்னும் நவீனப்படுத்த முயற்சிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

நேர்மையானவர் என்று பெயர் பெற்றவர் ராணுவத் தளபதி. எல்லைக் காவல் படையில் ஆயுதங்கள் வாங்கியதில் முறை கேடு நடைபெற்றிருப்பதாக திரிணாமுல் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் அம்பிகா பானர்ஜி கடந்த மே மாதம் வி.கே. சிங்குக்கு கடிதம் எழுதியிருந்தார். இந்தக் கடிதத்தை உடனடியாக சி.பி.ஐக்கு அனுப்பி நடவடிக்கை எடுக்க வி.கே.சிங் உத்தரவிட்டார். இப்படிப் பல்வேறு சூழ்நிலையில் நேர்மையாகச் செயற்பட்டுள்ள வி.கே.சிங்கை டிஸ்மிஸ் செய்தால் அது மத்திய அரசுக்குப் பின்னடைவை ஏற்படுத்தும் என்பதால் அவரைப் பதவி நீக்கம் செய்வதற்குப் பதிலாக கட்டாய விடுப்பில் அனுப்ப மத்திய அரசு முடிவு செய்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் கடிதத்தை வெளியிட்டவர்கள் யார் என்பது குறித்து விசாரிக்க உளவுத் துறைக்கு உத்தரவிடப் பட்டுள்ளது. (வ)

## அபிவிருத்திக்கான ஆலோசனை....



பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென் ஆபிரிக்கா ஆகிய நாடுகளின் கூட்டமைப்பான பிரிக்ஸ் அமைப்பின் 2012 ஆண்டுக்கான உச்சி மாநாடு நேற்று புதுடில்லியில் ஆரம்பமானது. பிரேசில் ஜனாதிபதி டில்மா றூசீவ், ரஷ்ய ஜனாதிபதி டிமிட்ரி மெட்வெடேவ், பிரதமர் மன்மோகன் சிங், சீன ஜனாதிபதி ஹூ ஜின்டாவோ, தென் ஆபிரிக்க ஜனாதிபதி ஜேக்கப் ஜுமா ஆகியோர் கைகோர்த்து நின்கின்றனர்.

## ராமர் பாலம் அவகாசம் கேட்கிறது மத்திய அரசு

ராமர் பாலம் தேசிய சின்னமா இல்லையா என்று உச்ச நீதிமன்றம் நேற்று தீர்ப்பு அளிக்கும் என்று எதிர்பார்த்திருந்த நிலையில், இந்த விவகாரத்தில் முடிவு எடுக்க தங்களுக்கு மேலும் சிறிது காலஅவகாசம்அளிக்க வேண்டும் என்று மத்திய அரசு சார்பில் உச்ச நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு உச்சநீதிமன்றம் இந்த விவகாரத்தை ஒத்தி வைத்தது. ராமர் பாலத்தை தேசிய சின்னமாக மத்திய அரசு அறிவிக்க வேண்டும் என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா, பிரதமர் மன்மோகன் சிங்குக்குக் கடிதம் எழுதியிருப்பதுகுறிப்பிடத்தக்கது.(வ)

## காஷ்மீரில் துப்பாக்கிச்சூடு தீவிரவாதிகள் 5பேர் சாவு

ஜம்மு, மார்ச.30

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் பாதுகாப்புப் படையினருக்கும் லஷ்கர்-இ-தொய்பா தீவிரவாதிகளுக்கும் இடையே நடைபெற்ற மோதலில் 5 தீவிரவாதிகள் உயிரி ழந்தனர்.

குப்வாரா மாவட்டம், ஹந்த்வாரா பகுதியில் நேற்று முன்தினம் இந்த மோதல் சம்பவம் நடைபெற்றதாக பாதுகாப்புப் படை செய்தித்தொடர்பாளர் தெரிவித்தார்.


ஹந்த்வாராவில் உள்ள ராஜ்வார் மலைப்பகுதிகளில் தீவிரவாதிகள் இருப்பதாக தகவல் கிடைத்ததை யடுத்து பாதுகாப்புப் படையினர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். அப்போது தீவிரவாதிகள் பதுங்கி இருப்பதைக் கண்ட அவர்கள் தீவிரவாதிகளை சரணடையுமாறு அறிவுறுத்தியுள்ளனர்.

ஆனால் தீவிரவாதிகள் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதற்கு பதிலடி யாக பாதுகாப்புப் படையினரும் திருப்பிச் சுட்டனர். இந்த மோதலில் 5 தீவிரவாதி கள் உயிரிழந்தனர். கொல்லப் பட்ட 5 தீவிரவாதிகளும் வெளி நாட்டைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

இந்த ஆண்டில் காஷ்மீர் பள்ளத்தாக்குப் பகுதிகளில் தீவிரவாதிகள் மீது நடத்தப்பட்ட பெரிய தாக்குதல் நடவடிக்கை இது என்பது குறிப்பிடத்தக்கது.

# காங். அரசைக் கவிழ்ப்பதன் மூலமே ஈழத் தமிழருக்கு விடிவு கிடைக்கும்

## அதற்காக முழு மூச்சுடன் களத்தில் என்கிறார் சீமான்



"இந்திய காங்கிரஸ் அரசு தொடர்ந்தும் ஈழத்தமிழர்களை ஏமாற்றியே வருகின்றது. இலங்கையில் இடம் பெற்றபோரை முழுக்க முழுக்க இந்திய அரசு நடத்தியதால் போர்க்குற்றங்கள் தன்மீது விழுந்துவிடும் என்று அஞ்சி இலங்கை அரசுக்குச் சாதகமாகச் செயற்படுகின்றது. காங்கிரஸை மாற்றி வேறொரு அரசை நிறுவுவதன் மூலம் தான் ஓரளவேனும் ஈழத் தமிழருக்கு விடிவைப்பெற்றுக் கொடுக்க முடியும். அந்தப் பணியில் நாம் முழு மூச்சாக ஈடுபட்டுள்ளோம்" என்று நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான் தெரிவித்தார்.

சீமான் மேலும் தெரிவித்ததாவது:-

அறவழியிலும் ஆயுதம் ஏந்தியும் 60 வருடங்களாகப் போராடியும் தமிழர்களுக்கு உரிமைகளை வழங்காத இலங்கை அரசு, ஜெனிவாத் தீர்மானத்தின் ஊடாகவா உரிமைகளை வழங்கப் போகின்றது? தமிழருக்கு உரிமைகளை வழங்க மறுக்கும் இலங்கை அரசின் சண்டித்தனத்தைத் தட்டிக்கேட்கும் துணிச்சல் இந்திய அரசுக்கு துளியும் இல்லை. ஈழத்தமிழர்களைக் கொன்றொழித்த இலங்கை அரசிடமிருந்து தமிழர்களுக்கு ஓரளவேனும் நிவாரணம் கிடைப்பதற்கான முதற்படியாக நாம் ஜெனிவாத்தீர்மானத்தைப்பார்த்தோம்.

இதற்காக இந்தத்தீர்மானத்தை இந்திய அரசு ஆதரிக்க வேண்டும் என்று நாம் அழுத் தங்கொடுத்து போராட்டங் களை நடத்தினோம். இந்த நிலையில் இந்திய அரசு தீர்மானத்தை ஆதரித்தது. ஆனால், இலங்கை அரசுக்குச் சாதகம் ஏற்படும் வகையில் தீர்மானத்தைத் திருத்தி விட் டுத்தான் அந்தத்தீர்மானத் துக்கு ஆதரவு வழங்கியது. அதைவிட தீர்மானத்தை ஆதரிக்காமலே இருந்திருக் கலாம்.

ஈழத்தமிழர்கள் 30 வருடங்கள் அறவழிப்போராட்டமும் 30 வருடங்கள் ஆயுதப் போராட்டமும் நடத்தினர். இந்த 60 வருடப் போராட்டத்துக்கே எந்த உரிமைகளையும் தமிழர்களுக்கு வழங்காத இலங்கை அரசு இந்த ஜெனிவாத் தீர்மானத்துக்கு அஞ் சியா உரிமைகளை வழங்கி விடப்போகின்றது.

இலங்கை ஒரு ஜனநாயக நாடு என்றால் - இலங்கை அரசு ஜனநாயகத்தை மதிக்கும் அரசு என்றால் விகிதாசாரப்படி இராணுவத்தில் தமிழ் இளை ஞர், யுவதிகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். அப்படி இல்லாது முழுக்க முழுக்க சிங்களவர்களை மாத்திரம் உள் ளடக்கிய இராணுவத்தால் எப்படி தமிழர்களுக்குப் பாது காப்பு வழங்க முடியும். இலங்கை அரசின் அடி மையாக மாறியுள்ள இந்திய அரசு அந்த அடிமைத் தனத்தில் இருந்து என்றுவிடுபடுகின்றதோ அன்றுதான் ஈழத் தமிழர்களுக்கு விடுதலை - என்றார் அவர்.(வ)

## தீவிரவாதிகளின் ஊடுருவல் தடுப்பு

# தமிழகக் கரையோரம் எங்கும் 'ஒப்பரேஷன் அம்லா' ஒத்திகை



கடல் வழியாக தீவிரவாதிகள் ஊடுருவலைத் தடுக்கும் வகையில் 'ஒப்பரேஷன் அம்லா' ஒத்திகை தமிழகம் முழுவதும் கடலோரப் பகுதிகளில் நேற்றுமுன்தினம் அதிகாலை ஆரம்பமாகியது.

மும்பையில் கடந்த 2008 ஆம் ஆண்டு கடல் வழியாக ஊடுருவிய தீவிரவாதிகள் மிகப்பெரிய தாக்குதல் நடத்தினர். இதையடுத்து மீண்டும் தீவிரவாதிகளின் கடல் வழி ஊடுருவலைத் தடுக்கும் விதமாக 6 மாதங்களுக்கு ஒரு முறை நாடு முழுவதும் தீவிரவாதத்தடுப்பு ஒத்திகை கடற்கரையோரப் பகுதிகளில்நடத்தப்படுகிறது.

இந்த ஆண்டுக்கான 'ஒப்பரேஷன் அம்லா' நேற்று முன்தினம் அதிகாலை ஆரம்பமாகியது. தமிழகத்தின் நீண்ட கடற்கரையான வங்காள விரிகுடா கடல் பகுதியில் தீவிரவாதிகள் நடமாட்டத்தைத் கண்காணிக்கும் பொருட்டு இந்திய கடலோரக் காவல்படை மற்றும் பொலி ஸார் தீவிர ரோந்துப் பணியில் ஈடுபட்டனர்.

வேதாரண்யம் - கொள்ளிடம் வரை வங்கக் கடலோரத்தில் பொலிஸார் பாதுகாப்பு ஒத்திகையில் ஈடுபட்டனர். பொலிஸார் மற்றும் இந்திய கடலோரக் காவல்படையினர் மாறு வேடத்தில் மேற்படி ஒத்திகையை நடத்தினர்.

முத்துப்பேட்டை கடற்கரை பகுதியான கோபால சமுத்திரம், தில்லைவளாகம், ஜாம்புவான்னோடை, பேட்டை, கரையங்காடு உள்ளிட்ட கடற்கரை பகுதியிலும் 'ஒப்பரேஷன் அம்லா' நடைபெற்றது. முத்துப்பேட்டை பொலிஸ் அத்தியட்சகர் கோபி தலைமையில் 120 பொலிஸார் இந்தப் பாதுகாப்பு மற்றும் ஒத்திகைப் பணியில் ஈடுபட்டனர். (வ)

# மாயா... மாயா.... எல்லாம்





த.சிவநேசன் (DAE)
(3D Animation & Visual Effect)

நீலவர்ண பின்னணியோடு அந்தரத்தில் தொங்குகிறது ஓர் அதிசய உலகம். தடதடத்தபடி ஓடி வருகின்றன விநோதமான மிருகங்கள். அவற்றின் மேலே உயரமான, நீளமான வால் கொண்ட வித்தியாசமான மனிதர்கள். மிகப்பெரும் மரம் ஒன்றை வாழ்வின் ஆதாரமாகக் கொண்டு அமைதியாக இருக்கும் அவர்களின் பொழுதில் குறுக்கிடுகின்றன மனிதர்களின் இயந்திரங்கள். அவையும் பல நூற்றாண்டுகளுக்கு பிற்பட்டவை. நாம் வாழும் காலத்திலிருந்து ஆயிரம் வருடங்களுக்கு முன்நோக்கிப் பாய வைக்கிறது. இப்போதில்லாத தொழில்நுட்பங்களும் சாதனங்களும் ஆயுதங்களும், வாழ்விலேயே சந்தித்திராத உயிரினங்களுமாக இரண்டரை மணிநேரத்தில் முடிந்து போகிறது "அவதார்" திரைப்படம். படம் பார்த்த பின்னரும் இன்னமும் மீள முடியாத ஒரு மாய உலகில் பார்த்தவர்களை சஞ்சரிக்க வைக்கிறது. தனியே மனிதர்கள் மாத்திரம் பங்கேற்ற படம் அல்ல அது. அப்படியிருந்தால் இந்தளவு தூரம் அது ஆழமான பாதிப்பை ஏற்படுத்த முடியாது.

உண்மையில் அவதார் படத்தில் மனிதனை விடவும் தொழில்நுட்பமே அதிக இடங்களில் நடித்திருக்கிறது. மனிதர்களை வைத்து திரையில் கொண்டுவரமுடியாத காட்சிகளையும் பாத்திரங்களையும் சாத்தியமாக்கிக் காட்டிய அந்த மந்திரத்தின் தொழில்நுட்பத்தின் பெயர்தான் "மாயா"(Maya).

இன்றைக்கு திரையில் மட்டுமல்லாது பல்வேறுவிதமான பயன்பாட்டுக்கும் மாயா என்கிற மல்டிமீடியா தொழில்நுட்பம் இன்றியமையாத ஒன்றாகிவிட்டது. எதிர்காலத்தில் மாயா தொழில்நுட்பத்தை மட்டும் வைத்துக்கொண்டே பல்வேறு திரைப்படங்கள் தமிழிலும் வருவதற்கான சாத்தியக்கூறுகள் உண்டு. இப்போது ரஜினியின் நடிப்பில் வரவுள்ள "கோச்சடையான்" திரைப்படம் மாயா போன்ற மல்டிமீடியா தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தியே எடுக்கப்படுகிறது.

மல்டிமீடியா தொழில்நுட்பமானது பல்வேறுபட்ட துறைகளில் பயன்படுத்தப்படுகின்றது. குறிப்பாக விளம்பரங்கள்,கலை, கல்வி, பொழுதுபோக்கு, வர்த்தகம் மற்றும் அறிவியல் ஆய்வு போன்றவற்றைக் குறிப்பிடலாம். இருப்பினும் மல்டிமீடியாவானது பொழுதுபோக்கு துறையிலேயே பெரியளவில் பயன்படுத்தப்படுகின்றது. குறிப்பாக திரைப்படங்களின் உருவாக்கத்தில் கையாளப்படும் விசேடமான காட்சிவிளைவுகள் (Special effects) மற்றும் அனிமேஷன் (Animation) போன்றவற்றினை விருத்தி செய்வதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. இவ்வாறான விசேட காட்சி களையும் அனிமேஷன்களையும் மேற்கொள்ள ஏதுவாகவுள்ள மென்பொருள்களில் முன்னணியாக விளங்கும் மென்பொருளே "மாயா" ஆகும்.

"மாயா" என்ற பெயர் அண்மைக்காலமாக யாழ்ப்பாணத்தில் கணினித்துறையில் பரவலாகப் பேசப்பட்டுவரும் ஒரு சொல்லாகும். அதைவிட "மாயா" என்னும் மென்பொருளை பயன்படுத்தி செய்யப்படும் தொழிநுட்பத்தினை நாம் எல்லோரும் அதாவது தொலைக் காட்சியில் ஒளிபரப்பப்படும் Title Creation Works, logo creations Work, விளம்பரங்கள், திரைப்படங்கள் என்பவற்றில் காணலாம். கணினி வரைகலை மற்றும் அனிமேஷன் போன்றவற்றை குறைந் தது ஒரு நாளுக்கு 3 மணித்தியாலத்துக்கு மேலாகப் பார்க்கின்றோம் இரசிக்கின்றோம் ஆனால் எவ்வாறு தயாரிக்கப்பட்டு இருக்கும் என்ற அறிவையோ அல்லது அதுதொடர்பான தொழில்நுட்பத்தையோ கற்க முனைப்புக் காட்டாதவர்களாக இருந்தோம் கடந்த காலங்களில்.




கட்டுரையாளரால் "மாயா" மூலம் வடிவமைக்கப்பட்ட யாழ். மணிக்கூட்டுக் கோபுரம்

ஆனால் இன்று இளம் சமுதாயத்தினர் மத்தியில் நிலைமை மாறியுள்ளது. தேடல்கள் கொண்ட இளைஞர்களுக்குத் திறந்து கிடக்கும் தொழில்நுட்படத்தின் கதவுகள் புதிய ஒளியை நோக்கி பயணிக்க வைத்துள்ளன. குறிப்பாக முப்பரிமாண அனிமேஷன் துறையிலும் விசேட காட்சி விளைவுத் துறையிலும் ஒரு வேகமான் புதிய துறைசார்ந்த கல்வி முறை யாழ்ப்பாணத்திலும் வேரூன்றத் தொடங்கியுள்ளது. இத்தகைய தொழில்நுட்பக் கல்விகள் வெறும் ஏட்டுச் சுரைக்காயாக மாத்திரமல்லாமல் இளைஞர்களுக்கான தொழில் வாய்ப்புகளையும் அள்ளி வழங்கிவருவதால் யாழ்ப்பாணத்தின் மனோநிலையும் தொழில்நுட்பக் கல்வியின் பக்கம் திரும்பத் தொடங்கியிருக்கிறது.

வழமையாகவே உயர்தரக் கல்விக்குப் பின்னர் பல்கலை அனுமதி கிடைக்காவிட்டால் அத்தோடு வாழ்க்கையே இருண்டு விட்டதுபோல ஒரு பிரமை நீண்டநாள்களாக யாழ்ப்பாணத்தில் நிலவி வந்தது. பல்கலைக்கல்வியைத் தாண்டி இன்னும் நிறைய பிரகாசமான உலகங்கள் இருப்பது யாழ்ப்பாணத்தவர் களின் கண்களுக்கு தெரியவே இல்லை. அவர்களுக்குத் தெரிந்ததெல்லாம் "கோழி மேய்த்தாலும் கோர்ணமேந்தில் மேய்க்க வேண்டும்" என்பதுதான். ஆனால் அந்த நிலைமையை "மாயா" போன்ற கணினித் தொழில்நுட்பக் கற்கைகள் தலைகீழாக மாற்றி விட்டன. அது சரி இந்த "மாயா" புராணத்தில் வருகின்ற மாயா தொழில்நுட்பத்தின் உருவாக்கம் எப்படியிருந்தது? அதன் பயன்பாடுகள் எவை? "மாயா" மூலம் கிடைக்கும் தொழில் வாய்ப்புகள் எவை?

(காத்திருங்கள் அடுத்தவாரம்)

## மறைவாக உள்ள பொருள்களை படம் பிடிக்கும் கமரா



மறைவாக உள்ள பொருள்களை படம் எடுக்க முடியாது. காரணம் அந்தப்பொருள்களில் இருந்து பட்டுத்தெறிக்கும் ஒளிக்கதிர்கள் கமராவை வந்து அடைவதில்லை. இதனால் பொருள் கமராவுக்கு புலப்படாது. எனினும் தற்போது இக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாக MIT ஆராய்ச்சியாளர்களால் அதி நவீன கமரா ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது ஒளிக்கதிர்களை அனுப்பிபொருள்களை இனம் காணக்கூடியவாறு அமைக்கப்பட்டுள்ளது. அதாவது இக்கமராவிலிருந்து பிறப்பிக்கப்படும் ஒளிக்கதிர்கள் பொருளுக்கு இடையில் காணப்படும் வேறொரு மேற்பரப்பில் பட்டுத்தெறிப்படைவதன் மூலம் பொருளைச் சென்றடையும்.

பின் அந்தக்கதிரானது மீண்டும் குறித்த மேற்பரப்பை வந்தடைந்து கமராவை நோக்கி தெறிப்படைகின்றது. இதனால் மறைந்துள்ள பொருள்களையும் இனங்கண்டு புகைப்படம் எடுக்கக்கூடியவாறு காணப்படுகின்றது.

## எல்லாத் திசைகளிலும் பயணிக்கும் சாதனம்

பயணத்தை இலகுவாக்குவதற்கு உருவாக்கப்பட்டுள்ள சாதனங்கள் பொதுவாக முன்னோக்கியும், பின்நோக்கியும் நகரக்கூடியவாறு அமைக்கப்படும்.

ஆனால் தற்போது எல்லாத்திசைகளிலும் நகரக்கூடியவாறான இயந்திரம் உருவாக்கப்பட்டுள்ளது.

தனிநபர் ஒருவர் பயணம் செய்யக் கூடிய இந்த சாதனத்தை கொயோற்டா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கோமோறி மசாஹறாறு என்பவர் அமைத்துள்ளார்.

இச்சாதனத்தில் விசேடமாக இயங்கக் கூடிய இரண்டு வகையான சில்லுகள் பொருத்தப்பட்டுள்ளதுடன் அவையிரண்டும் வெவ்வேறு நேரங்களில் இயங்கவல்லன என்பது குறிப்பிடத் தக்கது.



## சாதாரண வீடியோக்களை 3D வீடியோக்களாக மாற்றுவதற்கு

எம்மிடம் இருக்கும் வீடியோ கோப்புகளை ஒரு போர்மட்டில் இருந்து வேறு வகையான போர்மட்டுக்கு எளிதாக மாற்றலாம்.

ஆனால் தற்போது எம்மிடம் உள்ள சாதாரண இருபரிமாண(2D) படங்களையும், வீடியோக்களையும் மிக எளிதாக முப்பரிமாண(3D) வீடியோக்களாக மாற்றலாம். இதற்கு ஒரு மென்பொருள் துணை புரிகிறது. இந்த மென்பொருள் மிக எளிதான முறையில் வீடியோக்களை 3D வீடியோக்களாக மாற்றித் தருகிறது.

எனினும் இந்த மென்பொருள் இயங்குவதற்கு ஏற்புடைய சாதனம் தேவை. உதாரணமாக 3D தொலைக்காட்சி, LG முப்பரிமாண தொலைபேசி, NDS போன்ற சாதனங்களிலேயே இந்தமுப்பரிமாணத்தன்மையை பார்வையிட முடியும். முப்பரிமாண கணினித் திரை கொண்டவர்கள் இலகுவாக youtube இல் தரவேற்றி பார்வையிட்டுக் கொள்ளலாம்.

மேலும் இதன் மூலம் உங்களுக்குத் தேவையான போர்மட்டுக்களிலும் மாற்றிக் கொள்ளலாம்.



## ஆழ்கடல் ஆபத்தின் போது உதவும் ரோபோ ஜெல்லி

ஆழ்கடலில் ஆபத்தில் சிக்குபவர்களுக்கு உடனடியாக உதவும் பொருட்டு ஜெல்லி மீனை அடிப்படையாகக்கொண்டு ஹைதரசன் வாயு மூலம் இயங்கும் ரோபோ தயாரிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் வர்ஜீனியா டெக் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் பல்வேறு பயன்பாட்டுக்கு ரோபோக்களை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். குறிப்பாக ஆழ்கடல்குறித்து ஆராய்ச்சி செய்பவர்கள் ஆபத்தில் சிக்கி வருகின்றனர். அவர்களுக்கு உதவும் வகையில் நவீன ரோபோ ஒன்றைகண்டுபிடித்துள்ளனர்.

இதுகுறித்து ஆராய்ச்சியாளர்கள்தெரிவிக்கையில்: ஜெல்லி மீனை அடிப்படையாகக் கொண்டு ஹைதரசன் வாயு மூலம் இயங்கும் புதிய ரோபோவை உருவாக்கி இருக்கிறோம்.

இது கடலில் மிக வேகமாக ஜெல்லி மீனை போலவே இயங்கும். ஆழ்கடல் பகுதிக்கு விரைவாகவும் எளிதாகவும் செல்லக் கூடியது. இதற்கு ரோபோ ஜெல்லி என்று பெயரிட்டுள்ளோம். கடலில் ஆழத்தில் ஆபத்தில் உள்ளவர்களை உடனடியாகக் காப்பாற்றும் வகையில் ரோபோ வடிவமைக்கப்பட்டுள்ளது. முதல் கட்ட ஆய்வு மற்றும் பரிசோதனையில் எதிர்பார்த்த வெற்றி கிடைத்துள்ளது. தேவைக்கேற்ப இதில் மாற்றம் செய்யவும் திட்டமிட்டுள்ளோம் என்றார்.

# சுய மதிப்பிடல்

①

உங்கள் சுயமரியாதை உங்கள் தன்னம்பிக்கையை வளர்க்கும் என்று பார்த்தோம். அந்த சுயமரியாதையோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பது உங்களைப் பற்றி நீங்களே செய்து கொள்ளும் சுயபரிசோதனையும் ஒன்று என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

சுய பரிசோதனை என்பது என்ன?

உங்கள் நிறைகுறைகளை முழுமையாக அறிந்து கொள்வதே அது.

சரி, சுய பரிசோதனை செய்து கொள்ள வேண்டிய அவசியம்தான் என்ன?

உங்கள் நிறைகுறைகளைச் சரி செய்து கொள்வதற்கே.

இதுவரை உங்கள் நிறை, குறைகள் எதுவென்று நீங்கள் நினைத்து வந்ததில் சில உண்மையாக இருக்கலாம். பல உண்மையாக இருக்காது என்பதே நிஜம். ஏனென்றால் அனைத்துமே உண்மையாக இருந்தால் தன்னம்பிக்கையை வளர்க்க நீங்கள் எப்போதோ முயற்சி எடுத்திருப்பீர்கள்.

ஒருவர் பெரும்பாலும் குழந்தைப் பருவத்தில் தனது தாய், தந்தையர், ஆசிரியர், உறவினர், நண்பர்கள் ஆகியோரின் பாராட்டையோ, குற்றச்சாட்டுக்களையோ கேலியையோ பெற்றுத்தான் தன் நிறைகுறைகளை மதிப்பிடுகிறார்கள்.

அந்த மதிப்பீடே வளர்ந்த பின்பும் அவர்களிடம் இருக்கிறது. அவ்வாறு தன்னைப் பற்றி மதிப்பிட்டு வந்தது உண்மையாக இருக்கும் என்பதற்கு. எந்த உத்தரவாதமும் இல்லை.

நீங்கள் உங்கள் சுற்றத்தாரால் எப்போதும் பாராட்டப் பட்டுக் கொண்டிருக்கலாம். அதனால் உங்களைப் பற்றி மிக உயர்வாக நினைத்துக் கொள்ளலாம். ஆனால் ஏதேனும் சறுக்கல் வந்தால் அதை உங்களால் தாங்கிக் கொள்ள முடியாமல் போகலாம்.

அதாவது, உங்கள் குறைகளை நீங்கள் அறிந்திருக்க மாட்டீர்கள். உங்கள் குறைகளை அறிந்து கொள்ளாத வரையில் அதை எப்படிப் போக்கிக் கொள்ள முடியும்?

இனி அடுத்ததாக, உங்கள் சுற்றத்தாரால் தொடர்ந்து கேலி செய்யப்பட்டும், குற்றம் சாட்டப்பட்டும் வந்திருக்கலாம். அதனால் உங்களைப் பற்றி மிகத் தாழ்வாக நினைத்திருக்கலாம்.

அதனால் நிஜமாகவே உங்களால் இயன்ற ஒரு சாதனையைச் செய்யக் கூட நீங்கள் முயற்சி செய்யாமல் இருப்பீர்கள்.

அதனால் தன்னம்பிக்கையைப் பெறுவதற்கு உங்கள் நிறை குறைகளை முழுமையாக அறிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

**உங்களுக்குப் பிடித்த உங்களுடைய நல்ல குணங்கள் என்னென்ன?**

உங்களை சுய பரிசோதனை செய்து கொள்ள, உங்களின் பலம் - பலவீனம் பற்றிய கேள்விகள் அடங்கிய ஒரு பட்டியல் ஒன்றை நீங்கள் தயாரித்துக் கொள்ளுங்கள்.

உங்கள் முழுமையான திறமை என்ன? நீங்கள் என்னென்னவற்றில் அரைகுறைத் திறமையோடு இருக்கிறீர்கள்.

உங்களுக்குப் பிடிக்காத உங்களுடைய தீய குணங்கள் என்னென்ன?

இம் மாதிரிக் கேள்விகளுக்கு நீங்களே பதில்களையும் எழுதிப் பாருங்கள்.

உங்கள் முழுமையான திறமை என்ன என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும்போது அது பற்றிய மகிழ்ச்சியும் நம்பிக்கையும் உங்களுக்குள் அதிகரிப்பதை நீங்கள் கண்கூடாக உணர்வீர்கள். அடுத்து, உங்களுடைய அரைகுறைத் திறமைகளை அறிந்து கொள்ளும் போது அந்தத் திறமைகளை எப்படி முழுமை யாக்குவது என்னும் உண்மைகளைக் கண்டறிந்து கொள் வீர்கள்.

உதாரணமாக பேச்சாற்றல், நினைவாற்றல், ஆங்கில அறிவு போன்றவற்றை வளர்த்துக் கொள்வது.

உங்களுக்குப் பிடிக்காத உங்களுடைய தீய குணங்களைத் தெரிந்து கொள்வதோடு அவற்றை எப்படி மாற்றிக் கொள்ளலாம் என்னும் வழிகளை ஆராய்ந்து பாருங்கள். சோம்பல், நேரத்தின் மீதான கவனமின்மை, மறதி, கணக்கு வழக்கு இல்லாமல் செலவு செய்வது போன்ற தீய குணங்களை இதற்கு உதாரணமாகக் கொள்ள முடியும்.

உங்களுக்குப் பிடித்த உங்களுடைய நல்ல குணங்களைத் தொடர்ந்து கடைப்பிடிக்கவும் அவற்றிலிருந்து விலகி விடாதபடியும் நீங்கள் எச்சரிக்கை உணர்வு அடைவீர்கள்.

நீங்கள் உருவாக்கியுள்ள 'நிறைகுறை' பட்டியலில் இன்னொரு முக்கியமான அம்சமும் இடம்பெற வேண் டும். அது என்னவென்றால் உங்களிலும் உங்களைச் சுற்றிலும் உங்களால் எவற்றை மாற்ற முடியும், எவற்றை மாற்ற முடியாது என்பதையும் குறித்து வைத்துக் கொள்ள வேண்டும். உங்கள் தோலின் நிறம், உங்கள் உயரம், கீச்சுக் குரல் போன்ற உங்களால் மாற்ற முடியாத அம்சங்கள். உங்களது நிறைகுறைகளை நீங்கள் முழுமையாகத் தெரிந்து கொண்டீர்களானால், எந்தச் சூழ்நிலையை எப்படி எதிர்கொள்ள வேண்டும்? என்ற தைரியமும் நம்பிக்கையும் தானாகவே உங்களுக்கு வந்துவிடும்.

**விமர்சனம் - கேலி**

'' அவமானம் இல்லாமல் வெகுமானம் இல்லை!'' என்றொரு பழமொழியை அனைவருமே அறிந்து இருப்பார்கள்.

இதுவரை, பிறர் உங்கள் மீது கூறிய விமர்சனங்களோ, கேலிகளோ, உங்களுடைய தன்னம்பிக்கையைக் குறைத்திருக்கின்றனவா? இல்லையென்றால் உங்கள் நிறைகுறைகளை நீங்கள் தெரிந்து வைத்திருக்கிறீர்கள் என்று அர்த்தம்.

(தொடரும்)

-ஷிவேந்த்ரா

# கிராமங்களின் அபிவிருத்தியில் இளைஞரின் பங்களிப்பு அவசியம்

## வலி.தென் மேற்கு பிரதேசசபை உறுப்பினர் வலியுறுத்து

**கிராமங்கள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டுமாயின் இளைஞர்கள் பங்களிப்பு முக்கியமானதாகும்.**

**பங்களிப்புள்ள இளைஞர்களாக மாற்றுவதற்கு விழிப்புணர்வும் பயிற்சியும் அவசியம்**

மானிப்பாய், மார்ச் 30

கிராமங்கள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டுமாயின் இளைஞர்கள் பங்களிப்பு முக்கியமானதாகும்.

பங்களிப்புள்ள இளைஞர்களாக மாற்றுவதற்கு விழிப்புணர்வும் பயிற்சியும் அவசியம் என வலி தென்.மேற்குப் பிரதேச சபை உறுப்பினர் சண்முகம் சிவகுமாரன் தெரிவித்தார்.

மானிப்பாய் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்க கூட்டம் தலைவர் க.முதலியார் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ச.சிவகுமாரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது:-

நாடு தழுவிய ரீதியில் பல்லாயிரக் கணக்கான கிராமங்கள் உள்ளன.

இந்தக் கிராமங்கள் பல வளர்ச்சி அடைந்தும் இன்றும் பல கிராமங்கள் புறந்தள்ளப்பட்டும் உள்ளன.

இதற்குப் பல காரணங்கள் உள்ளன. எனினும் வலிமை மிக்க இளைஞர் சக்தியுள்ள கிராமங்கள் வளர்ந்து கொண்டே செல்கின்றன.

அதேபோலவே தான் முதலியார் என்ற அணியின் கீழ் இளைஞர் சக்தி ஒன்று உள்ளது.

இதனால் மானிப்பாய் மேற்கு பிரதேச அபிவிருத்தி விவசாயம், கைத்தொழில், கிராம அபிவிருத்தியில் ஓரளவு முன்னிற்கின்றது என்றார்.

கிராம அபிவிருத்தி அதிகாரி க.உமாபாலன் அங்கு தெரிவித்தாவது:

கிராமங்களில் அதிசக்தி வாய்ந்த நிறுவனம் கிராம அபிவிருத்திச் சங்கம். இந்தச் சங்க்ங்கள் கிராம மட்டத்தில் உள்ள மூல வளங்களை முழுமையாகப் பயன்படுத்த வேண்டும். இதன் மூலம் அபிவிருத்தியை மேற்கொள்ள முடியும்.

இதற்குப் பிரதேச சபை உறுப்பினர் ச.சிவகுமாரன் தெரிவித்தது போல இளைஞர் சக்தியை வலுவூட்ட பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.- என்றார். (எ)



உரும்பிராய் காந்தி சனசமூக நிலைய முன்பள்ளி கலை விழாவில் கலந்து கொண்ட விருந்தினர்கள்,ஆசிரியர்கள்.

## கௌரவிப்பு

சுழிபுரம், மார்ச் 30

சுழிபுரம், பத்திரகாளி அம்மன் ஆலய நிர்வாகத்தினர் சைவப் புலவர் ஆ.கனகரத்தினத்துக்கு ''சிவநெறி வித்தியா திலகம்'' என்னும் சிறப்புப் பட்டத்தை வழங்கி கௌரவித்தனர்.

'சக்தியின் மகிமை' என்னும் தலைப்பில் தொடர் சொற்பொழிவை மேற்படி ஆலயத்தில் தொடர்ந்து ஒருவாரம் ஆற்றியமைக்காக இந்தப் பட்டம் வழங்கப்பட்டது.

(எ-28)

# மூட நம்பிக்கை காரணமாகவே அடக்கப்படுகிறார்கள் பெண்கள்

## உரும்பிராய் பொதுநூலகத்தின் மகளிர் தின நிகழ்வில் பேச்சு

யாழ்ப்பாணம், மார்ச் 30

சமுதாயத்தில் காணப்படும் மூட நம்பிக்கைகள் காரணமாகவே பெண்கள் அடக்கி ஒடுக்கப்படுகிறார்கள். இந்த நிலை மாற வேண்டும். பெண்களின் திறமைகளுக்கு முன்னுரிமை கொடுத்து வலுவூட்டல் செய்யப்பட வேண்டும் என வலி.கிழக்குப் பிரதேச சபை உப அலுவலகப் பொது நூலகத்தின் நூலகர் செல்வி பிரிஷானி இராஜகுல வீரசிங்கம் தெரிவித்தார்.

வலி.கிழக்குப் பிரதேச சபை உப அலுவலகம் உரும்பிராய் பொது நூலகத்தின் மகளிர் தின விழா நிகழ்வில் ''பெண்களைப் பெண்களாக வாழ விடுங்கள்'' என்னும் தலைப்பில் கருத்துரை வழங்கும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது:-

பெண் என்றால் ஒரு போகப் பொருள். ஆண்களின் இச்சைகளைத் தீர்ப்பதற்காகவே படைக்கப்பட்டவள். அவள் அழகை உடலை ரசிப்பதற்காகவே படைக்கப்பட்டவள் என்ற மனப்பான்மை ஆணாதிக்க சிந்தனையாகும்.

நாகரிக விருத்தியிலும், நாட்டின் முன்னேற்றத்திலும் பெண்களின் பங்கு இன்றியமையாதது என்பதை உணர வேண்டும். பெண்களை ஒரு போகப் பொருளாகப் பார்க்கும் நிலை மாற வேண்டும். இந்த மனநிலை ஒவ்வொருவர் மனதிலும் உதிக்க வேண்டும். அப்போதுதான் இந்த உலகம் ஒருசிறந்த பண்பாடு மிக்க உலகமாக அமையும்.

சமுதாயத்தில் காணப்படும் மூட நம்பிக்கைகளாலும், பெண் அடக்கி ஒடுக்கப்படுகின்றாள். கணவனை இழந்த பெண்கள் அதிஷ்டம் அற்றவர்களாக மற்றவர்களால் ஒதுக்கப்பட்டவர்களாக அமங்கலிகளாகக் கருதப்படுகின்றார்கள். அவர்கள் மறுமணம் செய்ய முடியாதென்ற கட்டுப்பாடும் அவர்களின் வாழ்வு முடிந்து விட்டது என்ற கருத்தும் காணப்படுகின்றது. ஆனால் ஆண்களுக்கு இத்தகைய கட்டுப்பாடுகளை இந்தச் சமூகம் விதிப்பதில்லை.

இந்தநிலை மாற வேண்டும். பெண்களின் சாதனைகள் வரலாற்றில் எழுதப்பட வேண்டும். வீர தீரப் பெண்களின் சாதனைகள் அகிலம் முழுவதும் ஓங்கி ஒலிக்க வேண்டும். பெண் அடிமை தகர்த்தெறியப்பட்டு, மூட நம்பிக்கை அழித்தொழிக்கப்பட்டு பெண் ஒன்றும் சாமானியப்பட்டவள் அல்ல என்ற எண் ணம் மனதில் எழ வேண்டும்.

இதனையேதான் பாரதியாரும் தம்முடைய இலக்கியங்களில் கூறியிருக்கின்றார். பெற்றதாயாய் உற்ற சகோதரியாய் ஒன்றிடும் மனைவியாக இருந்து உலகம் உய்ய அன்புக்காக அன்பு செய்யும் பெண்ணின் இயல்பை எண்ணிப் பாரதியார் பெருமையுறுகின்றார். பெண்களை இழிவு செய்யும் மடைமையை பொங்கிவரும் புது உணர்ச்சியுடன் கொளுத்திப் பொசுக்கினார். பெண்ணை ஆண்கள் மதிக்க வேண்டும்.- என்றார்.

முனைவர் மு.வரதராஜன் பெண்களின் வளர்ச்சி பற்றிக் குறிப்பிடும்போது ''மேட்டிலிருந்து பள்ளத்துக்கு வெள்ளம் விரைவாக வருவது போன்று இடைக்காலத்தில் ஒதுக்கப்பட்ட பெண்ணினம் தற்போது முன்னேறி வருகின்றது.

இதற்கப்பால் சமுதாயத்தில் உள்ளவர்கள் பெண்களைப் பெண்களாக வாழ விட வேண்டும். இல்லையேல் முழு உலகமுமே சீர்கெடும் அபாயநிலை உருவாகிவிடும். இந்த உண்மையை உணர்ந்த சான்றோரும் கவிஞரும் பெண்களைப் பெருமைப்படுத்த முயற்சி செய்தனர்.

அவர்களின் நன் முயற்சி இன்று வெற்றி பெற்று வருகின்றது. அந்த முயற்சியானது முழுமையாக வெற்றி பெறுவதே பெண்குலத்தின் முழுமையான வெற்றியாகும்.- என்றார்.

(எ-17)

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
**தொலைபேசி:**021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789, 021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹறா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## பதறினால் சிதறிவிடும்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 19ஆவது கூட்டத் தொடர் முடிவடைந்து ஒரு வாரமாகி விட்டாலும் அதன் சூடு இலங்கையில் இன்னும் ஆறவில்லை. திரும்புகிற இடமெல்லாம் அமெரிக்கத் தீர்மானத்தை ஜனாதிபதியும் அமைச்சர்களும் கரித்துக் கொட்டிக் கொண்டிருக்கிறார்கள். ''யாரும் எங்களுக்குப் புத்தி சொல்லத் தேவையில்லை'' என்றும் ''ஒருபோதும் அடிபணிய மாட்டோம்'' என்றும் அவர்கள் முழங்குகிறார்கள்.

மறுபுறத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் உப்புச் சப்பு எதுவும் இல்லை, அது இலங்கை அரசை எந்தவிதத்திலும் கட்டுப்படுத்தாது என்றும் இதே அரசின் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கூறுகிறார். ஆனாலும் ஜனாதிபதியும் ஏனைய அமைச்சர்களும் ஆத்துப்பறந்து அந்தரித்துத் திரிகிறார்கள். வீர முழக்கங்களும் ஆவேசப் பேச்சுக்களும் அமெரிக்கா மீதான வசைபாடல்களும் தொடர்கின்றன.

வெளியிலிருந்து [மேற்கு நாடுகளிடம் இருந்து] அழுத்தங்கள் இல்லாமல் இருந்தால் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அரசு நடைமுறைப்படுத்தும் என்று நீதி அமைச்சர் ஹக்கீம் சொல்கிறார். ஆனால் பரிந்துரைகள் அனைத்தையும் செயற்படுத்த முடியாது என்று அமைச்சரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சுக் குழுவின் தலைவருமான நிமல் சிறிபால டி சில்வா கூறுகிறார். என்ன செய்ய வேண்டும் என்று எங்களுக்குச் சொல்லித் தராதீர்கள் என ஜனாதிபதி சொல்கிறார்.

இப்படி ஒருவர் மாறி ஒருவர், ஒரு கருத்துக்கு முரணாக மற்றொரு கருத்து என்று ஆளாளுக்கு அமைச்சர்களும் ஜனாதிபதியும் முரண்பட்ட கருத்துக்களைச் சொல்லுமளவுக்கு ஜெனிவாத் தீர்மானம் அவர்களைக் கடுமையாகக் குழப்பி வைத்திருக்கிறது என்பது மட்டும் தெளிவாகிறது.

அமைச்சர் பீரிஸ் சொல்வது போல ஜெனிவாத் தீர்மானம் அரசு மீது எந்தக் கட்டுப்பாட்டையும் அழுத்தத்தையும் செலுத்தாது என்றால் அது பற்றி அலட்டிக் கொள்ள வேண்டிய தேவை அரசுக்கு என்ன வந்தது?

உண்மையில் தற்போது நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் இலங்கை அரசைக் கட்டுப்படுத்தாது. ஆனால் அரசு இந்தத் தீர்மானத்தை மதித்து நடக்கத் தவறினால், அதனடிப்படையில் அரசை நேரடியாகக் கட்டுப்படுத்தக்கூடிய தீர்மானம் ஒன்றை மனித உரிமைகள் சபை நிறைவேற்ற முடியும். அதன் அடிப்படையில் ஐ.நா. பொதுச் சபையிலும் பாதுகாப்புச் சபையிலும்கூட இலங்கைக்கு எதிரான நிலைப்பாடுகள் முன்வைக்கப்படலாம். அதற்கான சாத்தியம் உண்டு.

நெல்சன் மண்டேலா, ஜிம்மி கார்ட்டர், டெஸ்மன் டுட்டு, கொபி அனான் போன்றவர்களை உலகின் மூத்த தலைவர்கள் அமைப்பு இதற்கான முதல் எச்சரிக்கையை பகிரங்கப்படுத்தி உள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக மீண்டும் ஒரு தீர்மானம் வராமல் பார்த்துக் கொள்ளுங்கள் என்று அந்த அமைப்பு விடுத்துள்ள எச்சரிக்கையில் காணப்படும் மிரட்டலே இலங்கை அரசையும் ஆணிவேரோடு கலக்கிவரும் முக்கிய விடயம். தனது பதிலளிக்கும் கடப்பாட்டிலிருந்து விலகினால் என்ன நடக்கும் என்பது அரசுக்கும் தெரியும். அதனால்தான் அது இப்போது பதற்றம் அடைந்திருக்கிறது.

இந்தப் பதற்றம்கூட அரசுக்கு நல்லதல்ல. நிதானமாக யோசித்து, என்ன செய்யப்போகிறோம் என்று கனகச்சிதமாகத் தீர்மானித்து, உறுதியாக அடியெடுத்து வைக்க வேண்டிய வேளையில் பதறுவது காரியத்தைச் சிதற வைத்துவிடும். அப்படியில்லாமல் அரசு புத்திசாலித்தனமாக நடந்துகொள்ள வேண்டிய நேரம் இது.

# இந்தியாவைச் சரியாகப் புரிந்துகொள்வதே ஈழத் தமிழர்களுக்கு மிக முக்கியமானது

துன்னாலைச் செல்வம்

1987ஆம் ஆண்டாக இருக்க வேண்டும். வடமராட்சியின் துன்னாலைப் பகுதியில் மந்திகைக்கும், கலிகைச் சந்திக்கும் இடையே சரமாரியான துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டுக் கொண்டிருந்தன. சனம் எல்லாம் வீட்டுக்குள் முடங்கின. என்ன நடக்கிறது என்று தெரியாமல் மக்கள் பயப்பீதியுடன் இருந்தனர்.

இந்திய இராணுவத்தின் வாகனங்களின் இரைச்சல் ஊரின் காதுகளை அடைத்தது. மேலதிகமான துருப்புக்களை வாகனங்களில் கொண்டு வந்து இறக்கினர். புலிகள்தான் அந்தப் பகுதியில் நிற்கிறார்கள் போலும். அதனால் தான் அந்தப் பகுதியில் மேலதிகமான படைகள் குவிக்கப்பட்டு சண்டை நடப்பதாக நாங்கள் (மக்கள்) நினைத்துக்கொண்டோம்.

இரு மணித்தியாலங்கள் துப்பாக்கி வேட்டுத் தொடர்ந்தன. பின்னர் ஓய்ந்து அடங்கின. ஆனாலும் சனங்கள் வீதிக்குவரப் பயப்பட்டனர். என்ன நடந்தது என்று தெரியாமல், வீட்டுக்குள் இருந்து கொண்டே யன்னல் ஊடாக வீதியைப் பார்த்துக் கொண்டு இருந்தனர்.

''இந்தியன் ஆமி போய்விட்டான்'' என்ற பின் ஒவ்வொருவராக வீதிக்கு வந்தனர். ''கலிகைச் சந்தி இந்திய ஆமியும், மந்திகை சந்தி இந்திய ஆமியும்தான் வந்திருக்க வேணும்'' சனங்கள் தங்கடபாட்டில் கதைத்தனர். ஒரு வீட்டில் இருந்து மட்டும் ஒருவரும் வெளியே வரவில்லை. ஆனால் அந்த வீட்டு கதவுகள் எல்லாம் திறந்தே கிடந்தன. அந்த வீட்டில்தான் ஏதோ நடந்திருக்க வேண்டும் என்று சனங்கள் ஊகித்தறிந்தார்கள். அந்த வீடு நோக்கி முன்னேற ஆரம்பித்தார்கள்.

அந்த வீட்டில் வேலைக்காரி மட்டும் நடுங்கியபடி ஒரு கதவின் பின்னே ஒளித்திருந்தாள். அவளைச் சனம் சூழ்ந்து கொண்டு காப்பாற்றியது(?). அந்த வீட்டில் பேத்தி, தாய், மகள் என மூன்று பெண்கள் இருந்தார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் வீட்டில் வேலைக்காரி மட்டும்தான் அப்போது எஞ்சியிருந்தாள்.

அந்த மூன்று பெண்களையும் மானபங்கப்படுத்திய இந்திய இராணுவம் பின்னர் அவர்களைச் சுட்டுக் கொன்றுவிட்டது. வீட்டுக்குள்ளேயே மூன்று பெண்களும் இறந்து கிடந்தார்கள்.

அப்பொழுது தான் சனத்துக்குத் தெரியும், நடந்தது சண்டையும் இல்லை; அங்கும் புலியும் இல்லை என்ற விடயம். பின்னர் ஒருவாறு ஒரு காரைப் பிடித்து இறந்த மூன்று பெண்களின் உடல்களையும் மந்திகை வைத்திய சாலைக்கு எடுத்துச் சென்றார்கள். அது கூடப் பொறுக்காத இந்திய இராணுவம், காரை நடுவழியில் மறித்து மூன்று உடல்களையும் காரோடு சேர்த்து எரித்தார்கள்.

இந்திய இராணுவம் இந்த மண்ணில் ஆடிய கொடூரங்களுக்கு ஒரு சிறு உதாரணம் இது.

அந்தக் காலத்தில் சப்பாத்தி எண்ணெய் மணம் இந்திய இராணுவம் பக்கத்தில் நிற்கிறது என்பதை அடையாளம் காட்டிவிடும். சீக்கியன், கூர்க்கா என ஈவிரக்கமற்ற மோசமான படையினர்தான் அமைதி காப்போராக இங்கு இறக்கப்பட்டனர். வாய்ப்புக் கிடைத்த போது அவர்கள் தமது சுயரூபத்தைக் காட்டிவிட்டனர். ஈழத் தமிழர்களை எப்படிக் கொல்ல வேண்டும்; பின்னர் அந்தக் கொலைகளை எப்படி ஆதாரங்கள் இன்றி மறைக்க வேண்டும் என்று இலங்கைப் படையினருக்குக் காட்டிக் கொடுத்தவர்களே இவர்கள் தான். அந்தளவுக்கு படுகொலைகளையும் கொடூரங்களையும் நிகழ்த்திக் காட்டியவர்கள் இந்தியர்களே.

அப்படிப்பட்டவர்கள் எப்படி போர்க்குற்ற விசாரணை ஒன்று இலங்கை மீது நடத்தப்படுவதை அனுமதிப்பார்கள். அதனால்தான் அவர்கள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடரில் அமெரிக்காவால் முன்வைக்கப்பட்ட தீர்மானத்தில் அவ்வாறான கோரிக்கைகள் எவையும் முன்வைக்கப்படாமல் பார்த்துக் கொண்டார்கள். அத்துடன் இறைமை என்ற பெயரில் இலங்கை அரசின் விரும்பம் மற்றும் அனுமதியுடனேயே, அதன் அரசியல் விவகாரங்களுக்குள் தலையிடலாம் என்றும் திருத்தத்தை முன்வைத்தது.

அதற்கெல்லாம் காரணம் 1987 முதல் 2009 வரையான ஈழத்தமிழர் படுகொலைகள் அனைத்துக்கும் புதுடில்லி ஆதரவாளனாகவும் பங்காளியாகவும் இருந்தமையே. ஆனாலும் இலங்கையின் வடபகுதியில் அதற்கு இருக்கக்கூடிய அரசியல் மற்றும் பொருளாதார நலன்கருதியே இந்தியா, ஐ.நா. தீர்மானத்தை ஆதரித்தது.

இந்தியாவின் முடிவு ஈழத் தமிழர்களின் நன்மைக்காக அல்லது அவர்களின் நலனுக்காக எடுக்கப்பட்டது என்று ஒருபோதும் ஈழத் தமிழர்கள் கருதிக்கொள்ளலாகாது. தங்களின் அரசியல் இராஜதந்திர காய் நகர்த்தல்களுக்காக குறிப்பாக தென் மாநிலங்களில் இந்திய காங்கிரஸின் எதிர்கால அரசியலைக் கருத்தில் கொண்டே இந்தியா, தீர்மானத்தை ஆதரிக்கும் முடிவை எடுத்தது.

இவ்வாறான நடவடிக்கைகளால் ஈழத் தமிழர்களின் மனம் குளிரப் போவதில்லை. போர் வரலாற்றில் இந்திய இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள்,அக்கிரமங்கள் அவர்களின் மனங்களில் இன்றும் ஆழமான வடுக்களாக இருக்கின்றன. ஆகவே டில்லி அரசு ஈழத் தமிழர் விடயத்தில் கபட நாடகம் ஏதுமின்றி மனம் திறந்து செயல்பட முன்வந்தால் மட்டுமே ஈழத் தமிழருக்கு அதன் மீது முழுமையான நம்பிக்கை ஏற்படும்.

மூன்று தசாப்த காலபோரின் மூலம் எட்டப்பட்ட அனைத்தையும் ஈழத் தமிழர்கள் இழந்துபோய், இப்போது அதிகாரமற்ற தரப்பாகி நிற்பதற்கு இந்தியா தான் ஒரு மூல காரணம் என்பதைத் தமிழர்கள் நினைவில் கொண்டிருக்கிறார்கள்.

விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் வீழ்ச்சி கண்ட இறுதி இடமான முள்ளிவாய்க்காலில் 40,000 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் சாவதற்குக் காரணமாக இருந்ததுடன் அதனை வேடிக்கை பார்த்துக் கொண்டும் இருந்தது இந்தியா. 3 லட்சம் மக்கள் செத்தாலும் போரைச் சிங்கள அரசு வெற்றி கொள்வதற்கான பாதுகாப்புக் கேடயமாக இந்தியா இருந்தது.

அத்தகைய இந்தியா, இனிவரும் காலங்களிலும் ஈழத் தமிழர்கள் சார்பான முடிவுகளை எடுக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. எனவே தமிழர் தலைமைகள் இந்தியாவை முற்று முழுதாக நம்பி இருக்காத வகையிலான அரசியல் நகர்வுகளுக்குச் சென்றாக வேண்டும்.

இந்தியாவைச் சரிவரப் புரிந்து கொள்வதே ஈழத் தமிழர்களின் அரசியலுக்கு மிக முக்கியமானது.

## தமிழர்களைக் கைவிட்ட புரட்சியாளர்கள்

சென்ற நூற்றாண்டின் மிகச் சிறந்த புரட்சியாளர் யார் என்று கேட்டால், பெரும்பாலானவர்கள் சே குவேரா என்பார்கள். பலர் லெனினையும் ஸ்டாலினையும் குறிப்பிடுவார்கள். பலருக்கு மா சே துங் பிடிக்கும்.

50 ஆண்டுகளுக்கும் மேலாக அமெரிக்காவை எதிர்த்து அரசை நடத்தி வரும் ஃபிடல் காஸ்ட்ரோவுக்கும் இந்தப் பட்டியலில் நிரந்தரமான இடமுண்டு.

தமிழர்களுக்காக உலகமெங்கும் குரல் கொடுப்பவர்களில் பலர் தங்களைப் புரட்சியாளர்களாக முன்னிறுத்திக் கொள்வதற்கு இவர்களில் ஒருவரைத்தான் இன்று வரைக்கும் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். தமிழர்களில் பலருக்கு இவர்கள்தான் முன்னோடிக் கதாநாயகர்கள்.

இப்படி உணர்வுபூர்வமாக இணைந்திருந்த தமிழர்களையும் அவர்களுக்காகப் போராடி வருவோரையும் சே குவேரா உள்ளிட்ட புரட்சியாளர்களின் வழி வந்தவர்கள்தான் இப்போது ஒட்டுமொத்தமாகக் கைவிட்டிருக்கிறார்கள். எப்படி என்கிறீர்களா?

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை இந்தியா வலுவிழக்கச் செய்துவிட்டது என்று பெரும்பாலானவர்கள் குற்றஞ்சாட்டுகிறார்கள். புரட்சியாளர்களை நெஞ்சுக்குள் ஒட்டி வைத்திருப்பவர்களும் இதையேதான் சொல்கிறார்கள்.

உண்மையில் இந்தத் தீர்மானத்தை வலுவிழக்கச் செய்து, பத்தோடு பதினொன்றாக தூக்கிப் போட்டது யார் தெரியுமா? புரட்சியாளர்களால் உருவாக்கப்பட்ட கியூபா, ரஷ்யா, சீனா ஆகிய நாடுகள்தான்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானம் கடுமையான எந்தக் கோரிக்கையையும் முன்வைக்கவில்லை. இலங்கை அரசே அமைத்த ஓர் ஆணையத்தின் அறிக்கையை நடைமுறைப்படுத்துவதைப் பற்றி மட்டுமே அந்தத் தீர்மானம் பேசியது.

இப்படியொரு வலுவற்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டதால், தமிழர்களுக்கு உரிமை கிடைக்கச் செய்வதிலும், போர்க்குற்றங்கள் தொடர்பாக நீதி கிடைக்கச் செய்வதிலும் முழு வெற்றிபெற்று விட்டதாகக் கருத முடியாது. அதற்கெல்லாம் இது முதற்படியாக வேண்டுமானால் இருக்க முடியும். இந்தத் தீர்மானத்தால் தமிழர்களுக்கு நேரடியான ஒரேயொரு நன்மைதான் கிடைத்திருக்கிறது.

நெருக்கடிகள் சூழ்ந்திருக்கும்போதுதான் உன் நண்பர்களையும் எதிரிகளையும் அடையாளம் காண முடியும் என்று சொல்வார்கள். அதைப்போல, இந்தத் தீர்மானம் தமிழர்களுக்குத் தங்களது உலக அளவிலான நண்பர்களையும் எதிரிகளையும் அடையாளம் காட்டியிருக்கிறது. சர்வதேச அரசியல் சதுரங்கத்தில் புலப்படாத எத்தனையோ ராஜதந்திரங்கள் இருக்கும். அதில் ஒரு பகுதிதான் இலங்கைக்கு எதிரான அமெரிக்காவின் தீர்மானம்.

*- பூலியான்*

# கடமை இன்னும் முடிந்துவிடவில்லை

பழ.நெடுமாறன்
(கட்டுரையாளர் தமிழர் தேசிய இயக்கத்தின் தலைவர், நீண்டகால ஈழ விடுதலைப் போராட்ட ஆதரவாளர்)

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா முன்மொழிந்து இந்தியா உள்ளிட்ட 24 நாடுகள் ஆதரவு தெரிவித்து நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் முழுமையானதாகவும் மனநிறைவு அளிப்பதாகவும் இல்லை என்பது உண்மை.

ஆனால், திட்டமிட்டு இனப்படுகொலை செய்த இலங்கை அரசைக் கண்டிக்கும் வகையில் சர்வதேச அரங்கில் 1987 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்குப் பின்னர் இன்றுவரை இலங்கை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஐ.நா. தீர்மானங்களில் இந்தத் தீர்மானம் ஓரளவு பரவாயில்லை. இதன் மூலம் முழுமையான வெற்றி கிட்டாவிட்டாலும் முதற்கட்ட வெற்றி கிடைத்துள்ளது.

சர்வதேச சட்டங்களையும் மரபுகளையும் ஐ.நா. போன்ற சர்வதேச அமைப்புகளையும் கொஞ்சமும் மதிக்காமல் அலட்சியம் செய்து தான்தோன்றித்தனமான வகையில் நடந்து கொண்ட இலங்கை அரசு இனி இவ்வாறு தொடர்ந்து செயல்படுவதை உலக சமுதாயம் அனுமதிக்காது என்பதற்கான சமிக்ஞையாக இந்தத் தீர்மானத்தைக் கொள்ளலாம்.

தீர்மானத்தின் மீது ஐ.நா. அதிகாரபூர்வமாக அழுத்தம் தர முடியும். இதற்கு முன்பு வரை இலங்கை மீது சட்டரீதியாகவும் சர்வதேச அமைப்பு ஒன்றின் மூலமாகவும் நடவடிக்கை எடுக்க எத்தகைய உரிமையும் இல்லாமல் இருந்தது. இப்போது அந்த வாய்ப்புக் கிடைத்திருக்கிறது.

தீர்மானம் இலங்கைக்கு எதிரான தீர்மானம் அல்ல. அவ்வாறு கருதுவது முழுமையானது அல்ல. மனித குலத்துக்கு எதிரான குற்றங்களைக் கூச்சமின்றி இழைத்த கொடுங்கோலர்களுக்கு எதிரான தீர்மானம் என்பதை இதற்கு எதிராக வாக்களித்த நாடுகள் உணர்ந்து கொள்ளவில்லை. இந்த உண்மையை உணர்ந்து செயல்பட இந்திய அரசும் தவறிவிட்டது. அதனால் தீர்மானம் முழுமையானதாக இல்லாமல் போய்விட்டது.

தமிழர்களுக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட போரில் இந்தியாவுக்கும் கணிசமான பங்கு உண்டு. ராஜபக்ஷ கும்பல் போர்க் குற்றங்களை இழைத்தது என்று சொன்னால் அதற்குத் துணை நின்ற குற்றம் இந்தியாவைச் சாரும்.

அமெரிக்கத் தீர்மானத்துக்கு இந்தியா கொடுத்த திருத்தம் இந்தத் தீர்மானத்தை நீர்த்துப்போக வைத்துள்ளது. போர்க் குற்றம் தொடர்பாக ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் விசாரணை நடத்த முற்பட்டால் இலங்கை அரசின் சம்மதத்துடனும் முன் அனுமதியுடனும் செய்ய வேண்டும் என்ற இந்தியாவின் திருத்தமானது, குற்றவாளியை விசாரித்துத் தண்டிப்பதற்கு அவனின் சம்மதத்தையும் முன் அனுமதியையும் நீதிபதி பெற வேண்டும் என்பதற்கு ஒப்பாகும்.

மனித உரிமைகள் சபைக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பிறகு இந்தியா மீது கோபமாக இருக்கும் ராஜபக்ஷவைத் திருப்திப்படுத்துவதற்காக மார்ச் 24ஆம் திகதி பிரதமர் மன்மோகன் சிங் எழுதிய கடிதத்தில் இந்த உண்மை வெளிப்பட்டிருக்கிறது. "தீர்மானத்தில் இடம் பெற்ற வாசகங்களில் இலங்கைக்குச் சமன் நிலை கிடைக்க இந்தியா அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு அதில் வெற்றி பெற்றதைத் தாங்கள் அறிவீர்கள்" என்று மன்மோகன் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அதாவது தீர்மானத்தைச் செயலற்றதாக்குவதற்காகவே இந்தியா அதை ஆதரிப்பது போல் புகுந்து மேற்கண்ட திருத்தத்தைக் கொண்டுவந்து இலங்கையைக் காப்பாற்றி உள்ளது என்பதை அப்பட்டமாகப் பிரதமர் தனது கடிதத்தின் மூலம் ஒப்புக்கொண்டிருக்கிறார்.

இலங்கைக்கு நண்பனாகவும் உலக சமுதாயத்துக்கு நல்லவனாகவும் காட்டிக் கொள்ள முயன்று இறுதியில் அந்த முயற்சியில் இந்திய அரசு அம்மணப்பட்டு நிற்கிறது.

அது மட்டுமல்ல, இந்தத் தீர்மானத்தை எந்தெந்த நாடுகள் ஆதரித்தன, எதிர்த்தன, நடுநிலை வகித்தன என்ற பட்டியல் அதிர்ச்சிகரமான ஓர் உண்மையை வெளிப்படுத்தியிருக்கிறது.

நேரு, இந்திரா காந்தி காலங்களில் அணிசேரா நாடுகளின் வழிகாட்டியாகவும் தலைவராகவும் இந்தியாவே திகழ்ந்தது. அந்த நிலையில் இருந்து அடியோடு மாறி ஆசியாவில் இந்தியா இன்று தனிமைப்படுத்தப்பட்டு நிற்கிறது.

இந்தியாவின் அண்டை நாடுகளும் இந்தியாவின் இராணுவ உதவி உட்படப் பல்வேறு உதவிகளையும் பெறும் மாலை தீவு, பங்களாதேஷ் போன்றவையும் இந்தியாவுடன் இல்லை. அணிசேரா நாடுகளின் அமைப்பை உருவாக்கிய நேருவுடன் இணைந்து நின்ற இந்தோனேஷியா, தாய்லாந்து போன்ற நாடுகளும் இன்று இந்தியாவுடன் இல்லை. மேற்கண்ட நாடுகள் அனைத்தும் சீனாவுடன் கைகோத்து நின்று இந்தத் தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்துள்ளன.

நீண்ட காலமாக இந்தியாவின் நெருங்கிய நட்பு நாடாகத் திகழ்ந்த மலேசியாகூட நடுநிலை வகிப்பதாக அறிவித்துவிட்டது. இந்தத் தீர்மானத்தை அமெரிக்கா கொண்டு வருவதற்குப் பதில் இந்தியா கொண்டுவந்திருந்தால் சர்வதேச அரங்கில் இந்தியாவின் கௌரவம் உயர்ந்திருக்கும். அவ்வாறு நடந்துகொள்ள இந்தியா தவறியதன் மூலம் மேலும் மேலும் சர்வதேச அரங்கில் தனிமைப்படுத்தப்பட்டும் உள்நாட்டில் அனைத்துக் கட்சிகளின் கடும் கண்டனத்துக்கும் ஆளாகி நிற்கிறது.

இலங்கைத் தமிழர்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வு கிடைப்பதற்கு அந்த நாட்டு அரசுக்கு நெருக்கடி கொடுப்பதற்கு கிடைத்த வாய்ப்பாக ஜெனீவா தீர்மானத்தை இந்திய அரசு கருதுவதற்குப் பதில், தீர்மானத்தின் கிடுக்கிப் பிடியில் இருந்து இலங்கையைக் காப்பாற்றுவதை நோக்கமாகக் கொண்டே இந்தியா செயல்பட்டிருப்பது, என்றும் மாறாத அவமானத்தைத் தேடித்தந்துள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்தை இந்திய அரசு ஆதரிக்க வேண்டும் எனத் தமிழக மக்கள் ஒன்றுபட்டுப் போராடியதன் விளைவாக இந்திய அரசுக்கு வேறு வழி இருக்கவில்லை.

தமிழக சட்டமன்றத்தில் முதல்வர் ஜெயலலிதா முன்மொழிந்து அனைத்துக் கட்சியினரும் ஆதரித்து நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

அதைப்போல தமிழகக் கட்சிகள் ஒன்றுபட்டு அறிவித்த பொதுவேலை நிறுத்தம் மற்றும் போராட்டங்கள் டில்லிக்கு அழுத்தம் கொடுத்தன. நாடாளுமன்றத்தில் எதிர்க் கட்சிகளும் ஆளுங்கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளும் இணைந்து நின்று அழுத்தம் கொடுத்ததை இந்திய அரசால் மீற முடியவில்லை.

கடந்த 3 ஆண்டுகளாக உலகெங்கும் உள்ள தமிழர்கள் இடைவிடாமல் ஒன்றுபட்டு நடத்திய போராட்டங்கள் தமிழகத்தில் அனைத்துக் கட்சிகளும் தனித்தனியாகவும் கூட்டாகவும் நடத்திய போராட்டங்கள் ஆகியவற்றின் விளைவாக உலக நாடுகளின் கவனம் ஈழத் தமிழர் பிரச்சினையில் திருப்பப்பட்டு, ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இந்தத் தீர்மானம் பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டது.

போரின் போது நடைபெற்ற மனித உரிமை மீறல்களையும் போர்க் குற்றங்களையும் குறித்து விசாரித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள இலங்கை அரசுக்கு 3 ஆண்டு கால அவகாசத்தை உலகம் அளித்தது. ஆனால், இலங்கை எதுவும் செய்யாதது மட்டுமல்ல, மேலும் மேலும் தமிழர்களுக்கு எதிரான கொடுமைகளைத் தொடர்ந்தது. முள்வேலி முகாம்களில் இருந்த மக்கள் தங்கள் ஊர்களுக்கும் வீடுகளுக்கும் திரும்பிச் செல்லவும் மீளக்குடியமரவும் அனுமதிக்கப்படுவார்கள் என இலங்கை அரசு அளித்த வாக்குறுதி முற்றிலுமாக நிறைவேற்றப்படவில்லை.

தமிழர்களுக்கு ஒப்புக்காவது அதிகாரம் அளிக்கும் 13ஆவது சட்டத் திருத்தம் கிடப்பில் போடப்பட்டது.

மனித மாண்புகளை கொஞ்சமும் மதிக்காது செயல்பட்ட அதிகாரிகள் மீது விசாரணையோ நடவடிக்கைகளோ இந்த மூன்றாண்டு காலத்தில் மேற்கொள்ளப்படவில்லை.

சர்வதேச மரபுகளையும் சட்டங்களையும் மதிக்காமலும் ஐ.நா.வுக்கு அடங்காத நாடாகவும் விளங்கும் சில நாடுகளைப்போல இலங்கையும் அடங்காப்பிடாரி நாடாக உருவெடுத்துள்ளது.

உலக சமுதாயத்தை வஞ்சகச் சூழ்ச்சி செய்து ஏமாற்றும் மோசடிக் கலையில் தேர்ந்து விளங்குகிறது. புத்தபிரானின் அருள்பொங்கிய நாடாக வர்ணிக்கப்பட்ட இலங்கை, ரத்த வெறி கொண்ட நாடாக மாறியது.

அப்படிப்பட்ட ஒரு நாட்டின் மீது ஐ.நா. தீர்மானம் நிறைவேற்றப்பட்டவுடனேயே உலக சமுதாயத்தின் பொறுப்பும் கடமையும் தீர்ந்துவிடவில்லை. மாறாக இதைத் தொடர்ந்து அடுத்த கட்டமாக சர்வதேச நீதிமன்றத்தில் இலங்கை மீது வழக்குத் தொடுக்க வேண்டிய முக்கியமான கடமை உள்ளது. அனைத்துலக குற்றவியல் நீதிமன்றம் ஒரு நிரந்தரமான நீதி அமைப்பு ஆகும்.

இனப்படுகொலை மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள், போர்க் குற்றங்கள் ஆகியவற்றை விசாரணை செய்து தண்டனை வழங்கும் அதிகாரம் அதற்கு உண்டு.

ஆனால், ஐ.நாவில் அங்கம் வகிக்கும் 120 நாடுகள் மட்டுமே இந்த நீதிமன்றத்தை உருவாக்கிய ரோம் உடன்படிக்கையில் ஒப்பமிட்டுள்ளன. சீனா, இந்தியா, இலங்கை உள்பட 42 ஐ.நா. உறுப்பு நாடுகள் ரோம் உடன்படிக்கையை அங்கீகரிக்கவோ ஒப்பமிடவோ ஆதரிக்கவோ இல்லை. இந்தச் சூழ்நிலையில் இந்த நாடுகள் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் விசாரணைக்கு எதிராக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

ஏற்கெனவே செர்பிய இனம் அல்லாதவர்களை இனப்படுகொலை செய்த குற்றத்துக்காக செர்பிய நாட்டின் தலைவராக இருந்த மிலோசெவிக் இந்த நீதிமன்றத்தால் விசாரணை செய்யப்பட்டார். ஆனால், அவருக்குத் தண்டனை வழங்குவதற்கு முன்னம் சிறையில் உயிரிழந்தார்.

மிக அண்மையில் சூடான் குடியரசுத் தலைவர் ஓமர் அல்-பசீர் என்பவரை இந்த நீதிமன்றத்தின் விசாரணைக்கு ஐ.நா. ஒப்படைத்துள்ளது. இவர் மீது இனப்படுகொலை மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள், போர்க் குற்றங்கள் அடங்கிய குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது.


ஆனால், ரோம் உடன்படிக்கையில் ஒப்பமிடாத இலங்கைக்கு எதிராக இந்த நீதிமன்றத்தினால் நடவடிக்கை எடுக்க முடியாது. ஐ.நா. பாதுகாப்புச் சபை தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றி அதன்மூலம் ராஜபக்ஷக்களை சர்வதேச நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்த முடியும்.

ஐ.நா. பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பினர்களாக உள்ள சீனாவும், ரஷ்யாவும் இதை அனுமதிக்கா. தங்களது 'ரத்து' (வீட்டோ) அதிகாரத்தைப் பயன்படுத்தி இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை அவை புறந்தள்ளிவிடும்.

அப்படி நடக்காமல் இருக்க வேண்டுமானால், ஐ.நா. பொதுச் சபையில் இலங்கைக்கு எதிரான கண்டனத் தீர்மானம், பொருளாதாரப் புறக்கணிப்பு நடவடிக்கை போன்றவற்றைக் கொண்டு வந்து பெரும்பாலான நாடுகளின் ஆதரவு பெற்று நிறைவேற்றவேண்டும். அப்போது அதற்கெதிராக எந்த வல்லரசும் 'ரத்து' அதிகாரத்தைப் பயன்படுத்த இலகுவில் முன்வரமாட்டா.

தென்னாபிரிக்க வெள்ளை அரசின் நிறவெறிக் கொள்கைக்கு எதிராக பொருளாதாரப் புறக்கணிப்பு நடவடிக்கைத் தீர்மானத்தை கடந்த காலத்தில் இந்தியா முன்மொழிந்து மிகப்பெரும்பாலான நாடுகளின் ஆதரவுடன் ஐ.நா. பொதுச் சபையில் நிறைவேற்றியது. அதைப் போல இப்போதும் நாம் செய்ய முடியும்.

தமிழர்கள் பிரச்சினை என்பதைவிட மனித குலப் பிரச்சினை என்ற கோணத்தில் உலக நாடுகள் இந்தப் பிரச்சினையை அணுகுவதற்கு இடைவிடாது முயற்சி செய்வதன் மூலமே வெற்றி பெற முடியும். அழிவின் விளிம்பில் நின்று கதறும் அந்த மக்களை மனதில் நிறுத்தி உறுதியுடன் தொடர்ந்து நமது கடமையாற்றுவோம்.



# யாரை எங்கே வைப்பது என்பது....

துளசியைப் பூசை அறையில் வைக்கிறோம். கறிவேப்பிலையைச் சமையல் அறையில் வைக்கிறோம். இரண்டும் இலைகள்தானே. இருந்தாலும் ஏன் வேறு வேறு இடம்? ஒரே இடத்தில் வைப்பதில்லையே.

செருப்பை வாசலில் விடுகிறோம். பூங்கொத்தை வரவேற்பறையில் வைக்கிறோம். இடமாற்றி வைப்பதில்லையே! ஏன்? ஒரு வீட்டில் எதை எதை எங்கே எங்கே வைப்பது என்ற தெளிவு நமக்கு இருக்கிறது. அதாவது உயிரற்ற அஃறிணைப் பொருள்களைக் கூட எங்கெங்கே வைக்க வேண்டும் என்கிற விழிப்பு நம்மிடம் இருக்கிறது. அது இருப்பதால் தான் வீடு வீடாக இருக்கிறது. சாப்பாட்டு மேசைமேல் சாக்கடை குத்தும் குச்சி இருந்தால் அது வீடா? அங்கு இருப்பவர்கள் குடும்பமா நடத்துகிறார்கள்.

வாழ்வில் நாம் பழகும் நபர்களையும் இதே மாதிரி எங்கே எங்கே வைக்க வேண்டும் என்று நமக்குத் தெரிய வேண்டாமா? சமத்துவம், மனிதத்தன்மை, பண்பாடு, இரக்கம் இதன் காரணமாக எல்லா மனிதர்களையும் சமம் என்று மதித்தாலும் யாரை எங்கே எப்படி வைக்க வேண்டும் என்று தெரியாததால் எத்தனை குடும்பங்கள் வீணாகி விட்டன தெரியுமா?

நெருங்கிய நண்பன் என்றாலும் தன் மனைவியோடு அதிகம் பழக விடக் கூடாது என்கிற எல்லை தெரியாமல் பழகவிட்டு விட்டு முடிவில் தற்கொலை செய்து கொண்ட சில ஆண்கள் உள்ளனர்.

வேலைக்காரியின் பிதற்றலைக் கேட்டுக் கொண்டு ஊட்டியாகக் குளிர்ந்த தன் வாழ்வையே ராஜஸ்தான் பாலைவனமாக்கிக் கொண்ட முட்டாள் பெண்களின் முகவரிகள் உங்களுக்குத் தேவையா?

கூனியை எங்கே நிறுத்தி இருக்க வேண்டும் என்று கைகேயிக்குத் தெரியவில்லை. சகுனியை எந்த இடத்தில் வைத்திருக்க வேண்டும் என்பது துரியோதனனுக்குப் புரியவில்லை. ஏன்.... சூர்ப்பனகையை எங்கு நிறுத்தி இருத்திருக்க வேண்டும் என்பது அந்த ராமனுக்கே கூட விளங்கவில்லை. 'யாரை எங்கு வைப்பது' என்பது யாருக்கும் புரியவில்லை என்ற வரிகள் உண்மையில் எவ்வளவு அர்த்தமுள்ளவை.

பெருவாரியான அரசியல் தலைமைகள் வீணாய்ப் போனதற்குக் காரணம் எல்லை தெரியாமல் ஆட்டம் போட்ட அதிகார மையங்கள் தான் என்று வரலாறு சமாளிக்கிறது. ஆனால் அந்த மையங்களைச் சரியான இடங்களில் நிறுத்தி வைக்காத தலைமைகள்தான் அதற்கு உண்மையான காரணம்.

பெருந்தலைவர் காமராசர் இடத்தில் அவரது தாயார் கூட எந்தக் காரியமும் சாதித்துக் கொள்ள முடியாது. மூதறிஞர் ராஜாஜியும் அப்படித் தான். கட்சிக்காரர்களைக் கூட ஆட்சியில் தலையிடுவதை அவர் அனுமதித்தது இல்லை. பேரறிஞர் அண்ணா அவர்களிடம் அவரது துணைவியார் பெரிதாகச் சொந்த வீடு கட்ட வேண்டும் என்பதைப் பேரப் பிள்ளைகள் மூலம் சொல்லச் செய்தார். ஒரு காகிதத்தை எடுத்து வீட்டை வரைந்து காட்டினார் அண்ணா. "இது தான் நாம் கட்டப் போகும் வீட்டின் வரைபடமா?" என்று ராணி மகிழ்ந்ததும்; "இல்லை, இதுதான் வீடு; காகிதத்தில் தான் கட்ட முடியும்; இதற்கு மேல் அநாவசியமாக கனவு காணாதே" என்று கனவுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தார் அண்ணா.

நாயை வாசலில் கட்டி வைக்கிறோம். பசுவைத் தோட்டத்தில் கட்டி வைக்கிறோம். பூனையை வீடு முழுவதும் உலவ விட்டாலும் சமையல் அறைக்குள் நுழையாமல் கவனமாகப் பார்த்துக் கொள்கிறோம். ஆனால் இப்படி நண்பர்களை, உறவினர்களை, பணியாளர்களை, நாம் சார்ந்த இயக்கத்தில் இருப்பவர்களை, ஏன் நமது வழிகாட்டிகளாக பவனி வரும் சமயக் குருமார்களைக் கூட எந்த எல்லையில், எந்தப் புள்ளியில் நிறுத்தி வைக்க வேண்டும் என்பது நம்மவருக்குத் தெரிய வேண்டும்.

அளவுக்கு மீறி சில சாமியார்களைத் தமது குடும்ப விஷயங்களில் மூக்கை நுழைக்கும்படி காலைக் கழுவி கழுவி வாய்ப்பளித்த பலர் தங்கள் பாவங் களைக் கழுவ புண்ய நதிகளே போதாது என்று பின்னாளில் புலம்பியதை பலரும் கேள்விப்பட்டிருக்கிறோம்.

வசிட்டர் இராமனது குலகுரு. அவர் தசரதர் ஆணைப்படி நாடு செல்லும் இராமனைத் தடுத்து "வேண்டாம் காடு செல்லாதே... நாட்டை ஆள்க.... நான் குரு சொல்கிறேன்" என்றபோது, "கொடுத்த சத்தியத்தை மீறும்படி குரு சொல்வதா? சொன்னாலும் நான் அதை ஏற்பதா?" என்று வசிட்டரையே ஓர் எல்லையில் நிறுத்தி வைக்கிறார் ராஜா இராமன். அந்தத் துணிவு நமக்கும் வரவேண்டும். "நீங்கள் என்ன சொன்னாலும் சரி" என்று இன்று பலர் கள்ளச் சாமியார்களின் கீழான யோசனைகளை நடைமுறைப்படுத்தி பெண்ணை இரவு நேர பூஜைக்கனுப்பி மகனைப் பலி கொடுத்து என்னென்ன முட்டாள் தனங்களைச் செய்து தொலைக்கிறார்கள்.

கொஞ்சம் யோசியுங்கள். நாடுகளுக்கிடையே எல்லை எப்படி முக்கியமோ? அப்படி நபர்களுக்கிடையிலும் எல்லை இருப்பது நல்லது. எல்லைகளைக் காக்க இராணுவம் என்ன பாடுபடுகிறது! அத்தகைய கவனம் அவசியம்.

மாலையிட்டு மணந்த மனைவியின் தலையீடு கூட எல்லை மீறும் போது நிறுத்த வேண்டிய இடத்தில் நிறுத்தியவர்கள் சரித்திரத்தில் நிலைத்து நின்று விட்டார்கள். மனைவி அல்ல மனமகிழ்ச்சி தரும் மங்கையின் பேச்சைக் கூட மகாவாக்கியமாகத் தன் நாடு ஏற்றுப் பணிந்து நடக்க வேண்டும் என்று ஆணையிட்ட மன்னர்கள் அந்த மங்கைகளாலேயே மண்ணோடு மண்ணாகி விட்டார்கள். இதை உணர்ந்து செயற்பட்டால் யாவருக்கும் நன்மையே.



**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# சுகாதாரத்தில் சிறந்த மானிப்பாய் மகளிர் கல்லூரி

(கடந்தவாரத் தொடர்ச்சி)



**சோபனா**

சண்டிலிப்பாய்க் கல்விக் கோட்டத்திலேயே தனித்துவமான பெண்கள் கல்லூரியாகத் திகழும் மானிப்பாய் மகளிர் கல்லூரி தரம் 1 முதல் க.பொ.த. உயர்தரம் வரை வகுப்புக்களைக் கொண்டு அமைந்திருப்பது அப்பகுதி வறிய மாணவர்களின் கற்றலுக்கு உரமூட்டுவதாக அமைந்துள்ளது.

சுமார் 15 இற்கும் மேற்பட்ட கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் இந்தப் பாடசாலையில் கல்வி கற்பது சிறப்புக்குரிய விடயமாகும். ஆரம்பப்பிரிவு, கனிஷ்ட இடைநிலைப்பிரிவு, சிரேஷ்ட இடைநிலைப் பிரிவு என மூன்று பிரிவுகளாக வகுப்புகள் தரம் பிரிக்கப்பட்டு மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

இந்தக் கல்லூரியின் கற்றல் செயற்பாடுகள் மானிப்பாய் பிரதேசத்தில் எந்தளவுக்கு ஊக்குவிக்கப்படுகின்றன என்பதற்கு அமைவாக வருடாவருடம் அதிகரிக்கப்படும் மாணவர் தொகை ஓர் எடுத்துக் காட்டாக அமைந்துள்ளது.

2006 ஆம் ஆண்டு 1035 மாணவர்களும், 2007 ஆம் ஆண்டு 1262 மாணவர்களும், 2008 ஆம் ஆண்டு 1337 மாணவர்களும், 2009 ஆம் ஆண்டு 1369 மாணவர்களும், 2010 ஆம் ஆண்டு 1370 மாணவர்களும், 2011 ஆம் ஆண்டு 1411 மாணவர்களும், 2012 ஆம் ஆண்டு 1425 மாணவர்களும் என படிப்படியாக வருடந்தோறும் மாணவர்கள் தொகை இந்தக் கல்லூரியில் அதிகரித்த வண்ணமே உள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி சூரியகுமாரி ஜெயவீரசிங்கத்தின் கட்டுக் கோப்பான வழிகாட்டலுக்கு அமைவாக ஆசிரியர்களின் செயற்பாடுகள் பாடசாலையில் திறமையாக இடம் பெறுவதுடன் மாணவர்களின் வரவு வீதமும் சீராக இந்தக் கல்லூரியில் இடம் பெற்று வருகிறது.

தேசிய கல்வித் திட்டத்துக்கு அமைவாக பிரதான பாடங்கள், தெரிவுப்பாடங்கள் என கல்வித்தர நிலைகளுக்கு ஏற்றமுறையில் ஒவ்வொரு வகுப்புக்களிலும் இடம்பெற்று வருகின்றன. க.பொ.த. உயர்தரப் பிரிவில் கணித, விஞ்ஞான, வர்த்தக, கலைப் பிரிவு என வகுப்புகளைக் கொண்டமைந்திருப்பது, இந்தக் கல்லூரியில் கற்கும் மாணவிகள் தமது உயர்தர கல்விச் செயற்பாடுகளுக்காக வேறு பாடசாலைகளைத் தேடிச் செல்ல வேண்டிய தேவைப்பாட்டை நீக்கியுள்ளது.

> பாடசாலையின் ஆளணி வளங்களுக்கு ஏற்றாற் போல் தோட்டத் தொழிலாளி, காவலாளி, சுகாதாரத் தொழிலாளி என சிறந்த ஆளணி வளங்களால் பாடசாலை சீரமைக்கப்பட்டு சிறந்த சுகாதாரம் மிக்கப் பாடசாலையாகத் திகழ்கின்றது.

இதனைவிட தமிழ் , ஆங்கில மொழி மூலமான இரு மொழி மூலப்பாடத்திட்டங்களும் மாணவர்களின் திறன்கள், விருப்பத்துக்கு அமைவாக இடம்பெற்று வருகின்றன.

தரம் 1 முதல் தரம் 5 வரை அனைத்து மாணவர்களுக்கும் தமிழ்மொழி மூலமான பாடத்திட்டச் செயற்பாடுகளே நடைபெறுகின்றன. தரம் 6 இல் தமிழ்மொழி மூலம் 95 மாணவர்களும் ஆங்கில மொழி மூலம் 26 மாணவர்களும்,தரம் 7 இல் தமிழ் மொழி மூலம் 89 மாணவர்களும், ஆங்கில மொழி மூலம் 8 மாணவர்களும், தரம் 8 இல் தமிழ் மொழி மூலம் 90 மாணவர்களும், ஆங்கில மொழி மூலம் 5 மாணவர்களும், தரம் 9 இல் தமிழ் மொழி மூலம் 93 மாணவர்களும் ஆங்கிலமொழி மூலம் 8 மாணவர்களும், தரம் 10 இல் தமிழ் மொழி மூலம் 96 மாணவர்களும், ஆங்கில மொழி மூலம் 7 மாணவர்களும், தரம் 11 இல் தமிழ் மொழி மூலம் 177 மாணவர்களும், ஆங்கிலமொழி மூலம் 18 மாணவர்களும், க.பொ.த. உயர்தரப் பிரிவில் தமிழ்மொழி மூலம் 317 மாணவர்களும் என 1425 மாணவர்கள் தற்போது இந்தக் கல்லூரியில் கல்வி பயின்று வருகின்றனர்.

மாணவர்களின் தொகை அதிகரிப்புக்கு ஏற்றாற்போல் தமிழ்மொழி மூல ஆசிரியர்கள் 47 பேரும் ஆங்கில மொழி மூல ஆசிரியர்கள் 3 பேரும், இந்தக் கல்லூரியில் கற்றல் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பாடசாலையின் ஆளணி வளங்களுக்கு ஏற்றாற்போல் தோட்டத்தொழிலாளி, காவலாளி, சுகாதாரத் தொழிலாளி என சிறந்த ஆளணி வளங்களால் பாடசாலை சீரமைக்கப்பட்டு சிறந்த சுகாதாரம் மிக்கப் பாடசாலையாகத் திகழ்கின்றது.

பாடசாலை அமைந்திருக்கும் சூழலுக்கு ஏற்றாற் போல் சிறந்த சுகாதாரம் ஒழுங்கமைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பாடசாலையின் சுகாதார நடவடிக்கைகளைக் கவனிப்பதற்காக பாடசாலைக்கென சுகாதாரக் கழகம் அமைக்கப்பட்டு அதிபரின் வழிகாட்டலில் அதற்கென ஒரு பொறுப்பாசிரியரும் செயற்பட்டு வருகின்றார்.

பாடசாலைச் சூழலைத் தூய்மையாக வைத்திருப்பதற்கான முழுமையான நடவடிக்கைகளை இந்தக் கழகம் மேற்கொண்டு வருகின்றது. பாடசாலையில் மட்டுமல்லாது பாடசாலையின் சூழலில் இருக்கும் மக்கள் குடிமனைகளிலும் விழிப்புணர்வை ஏற்படுத்தக் கூடிய வகையில் சுகாதார விழிப்புணர்வு நடவடிக்கைகளை ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் சுகாதாரக் குழுவில் செயற்படும் மாணவர்கள் நிறைவேற்றி வருகிறார்கள்.

பாடசாலையின் சிறந்த சுகாதாரம் பேணப்படுவதற்கு எடுத்துக்காட்டாக 2008 ஆம் ஆண்டு யாழ்.மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரிகளின் மேற்பார்வையில் மதிப்பீடு செய்யப்பட்ட சுகாதார மேம்பாட்டுக்குரிய பாடசாலையாகத் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

நிழல் தரும் மரங்களுக்கு கீழ் கட்டிடங்கள் அமையப்பெற்ற சிறந்த அமைதியான சூழலுடன் பாடசாலையின் இதர வளங்கள் காணப்படுகின்றன.

மாணவர்களின் கற்றல் திறமைக்கு வலுவூட்ட, பாடசாலையில்பேணப்படும் சுகாதாரம் சூழல் என்பன பிரதான காரணமாக உள்ள நிலையில் மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கு இத்தகைய சூழல் கிடைக்கப்பெற்றமை ஒரு வரப்பிரசாதமாகும்.

பாடசாலையில் மாணவர்கள் சுகாதார முறையைப் பேணுவதற்கு, பாடசாலைக்கென உள்ள மாணவத் தலைவர்கள் தமக்குக் கீழ் உள்ள மாணவர்களின் சுகாதார நடவடிக்கைகள் தொடர்பாக கண்காணித்து அறிவுரைகளையும், ஆலோசனைகளையும் கூறி வழி நடத்தி வருகின்றார்கள். இது மாணவர்களின் தலைமைத்துவமான பண்பை விருத்தி செய்வதற்கும் பிரதான காரணமாக உள்ளது.

இதனை விட உயர்தர மாணவர் மன்றம், இந்து மாணவர் மன்றம், கிறிஸ்தவ மாணவர் மன்றம், சமூக விஞ்ஞான மன்றம், விஞ்ஞான மன்றம், சுகாதாரக் கழகம்,ஆங்கில மாணவர் மன்றம், மனைப் பொருளியல் மன்றம், இடைநிலைக் கழகம், அனர்த்த முகாமைத்துக் கழகம் ஆகிய மன்றங்கள் பாடசாலையின் துறைசார்ந்த செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன.

இந்தக் கழகங்கள் ஊடாக அந்தக் கழகத் தலைவர்கள் மற்றும் ஏனைய உறுப்பினர்கள் பொறுப்பாசிரியர் ஒருவரின் வழிகாட்டலுடன் செயற்பட்டு வருகின்றனர்.

(தொடரும்)

## மோட்டார் சைக்கிள் தீப்பிடித்து இளைஞர் சாவு

கொழும்பு,மார்ச் 30
நீர்கொழும்பு, கல்கந்த சந்தியில் நேற்று வியாழக்கிழமை அதிகாலை 5 மணிக்கு இடம்பெற்ற வாகன விபத்தின்போது மோட்டார் சைக்கிளொன்று தீப்பிடித்து எரிந்த தன் காரணமாக இளைஞர் ஒருவர் தீயில் கருகி மரண மடைந்துள்ளார்.

வீதியில் பயணித்துக் கொண்டிருந்த லொறியொன்றுடன் மோட்டார் சைக்கிள் மோதிய போது மோட்டார் சைக்கிள் தீப்பிடித்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்துத் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

(ச)




முன்னாள் அமைச்சர் பிலிப் குணவர்தனவின் 40ஆவது நினைவு தின நிகழ்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை இலங்கை மன்றக் கல்லூரியில்நடைபெற்றது. இந்தநிகழ்வில் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ , சிரேஷ்ட அமைச்சர் ரட்னசிறி விக்ரமநாயக்க உள்ளிட்ட பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

## ஷிரால், மைத்திரி, லால் மீது ஒழுக்காற்று நடவடிக்கை

கொழும்பு,மார்ச் 30
ஐ.தே.கவின் தலைமை அலுவலகமான சிறிகொத்தா கடந்த வருடம் தாக்கப்பட்டமை தொடர்பாக மேல் மாகாண சபை உறுப்பினர் ஷிரால் லக்திலக்க, தென் மாகாண சபை உறுப்பினர் மைத்திரி குணரட்ன, லால் பெரேரா ஆகியோருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ள ஐ.தே.கவின் செயற்குழு தீர்மானித்துள்ளது. இதற்காக முன்னாள் அமைச்சர் திலக் மாரப்பன தலைமையில் ஒழுக்காற்று குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ச)

# நெல் கொள்வனவை குழப்ப முயற்சி

### ஐ.தே.கட்சி, ஜே.வி.பியைச் சாடுகிறார் அமைச்சர் ஜோன்ஸ்டன்

கொழும்பு,மார்ச் 30
ஐக்கிய தேசியக் கட்சியும் ஜே.வி.பியும் நெல் கொள்வனவில் குளறுபடிகளை ஏற்படுத்த பல்வேறு சதித்திட்டங்களை முன்னெடுத்த போதிலும் நாடளாவிய ரீதியில் சீரான முறையில் நெல் கொள்வனவு இடம்பெற்று வருவதாக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.



இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒவ்வொரு விவசாயிடமிருந்தும் மூவாயிரம் கிலோ கிராம் வரை நெல் கொள்வனவு செய்யப்பட்டு வருகிறது.

இதனால் விவசாயிகள் எவரேனும் பாதிக்கப்படுவதாக கருதினால் அமைச்சுக்கு முறையிடலாம்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விவசாய சமூகத்தினருடன் மிகவும் நெருக்கமான உறவினைக் கொண்டிருப்பவர்.

இந்த அரசு விவசாயிகளை ஒரு போதும் கைவிட்டுவிடாது. எவ்வித பாரபட்சமுமின்றி தரமான நெல் வைத்திருக்கும் அனைத்து விவசாயிகளிடமிருந்தும் நெல் கொள்வனவு செய்யப்பட்டு வருகிறது.

இந்த வருடம் பெரும்போக நெல் செய்கையிலிருந்து ஒரு லட்சத்து 50 ஆயிரம் தொன் நெல்லைக் கொள்வனவு செய்வதே எமது இலக்கு.

இதற்காக ஒரு பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதுவரையில் 35 ஆயிரம் தொன் நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. விவசாயிகளிடமிருந்துகிடைக்கும் அனைத்து தரமான நெல்லையும் கொள்வனவு செய்யுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்- என்றார்.

(ச)

## 'காஸ்' விலை: புதுவருடம் வரை உயர்வு இல்லை

தமிழ், சிங்கள புத்தாண்டு கொண்டாடும் வரை எரிவாயு விலையை அதிகரிக்காது இருக்க அரசு தீர்மானித்துள்ளதாக வர்த் தக அமைச்சின் செயலாளர் சுனில் எஸ்.சிறிசேன தெரிவித்தார்.

எரிவாயு விலையை அதிகரிப்பது தொடர்பாக இரண்டு நிறுவனங்களினால் நுகர்வோர் அதிகார சபையிடம் அனுமதி கோரப்பட்டுள்ளமை சம்பந்தமாக கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அதேவேளை புத்தாண்டுக்கு முன்னர் அத்தியாவசியப் பொருள்களின் விலைகளையும் அதிகரிக்கும் எண்ணம் அரசுக்கு இல்லை என்று அவர் தெரிவித்தார். (ச-22)

## பொலிஸார் துரத்திச்சென்ற கார் விபத்து

கொழும்பு,மார்ச் 30
பொலிஸார் துரத்திச் சென்ற கார் ஒன்று புத்தளம், பாலாவியில் அமைக்கப் பட்டுவரும் பாலத்தின் கீழ் வீழ்ந்து விபத்துக்குள்ளான சம்பவம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை இடம் பெற்றது.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலை அடுத்து குறித்த காரை பொலிஸார் நிறுத்த முற்பட்ட போதும், இந்தக் கார் நிறுத்தாது செல்லவே பொலிஸார் துரத்திச் சென்றனர்.

இதனாலேயே இந்த விபத்து ஏற்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கார் விபத்துக்குள்ளானதும் காரில் இருந்த இருவர் வெளியில் பாய்ந்து பொதி ஒன்றுடன் தப்பிச் சென்றுள்ளனர். எனினும் காரின் சாரதியை கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் காரில் கடல் அட்டை எடுத்துவரப்பட்டதாக சாரதி கூறியதாக பொலிஸார் கூறினர். இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## மின்னல் தாக்கி மூவர் மரணம்

கொழும்பு,மார்ச்30
மின்னல் தாக்குதல் காரணமாக மூன்று பேர் இறந்த சம்பவம் அவிசாவளை, அமித்திரிகல பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்றுள்ளது.

இந்தச்சம்பவத்தில் அப்பிரதேசத்தைச் சேர்ந்த 2 பெண்கள் மற்றும் 12 வயது சிறுவன் ஆகியோரே உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

(ச)

## அரசியல் தீர்வு காண்பதற்கு அரசு இணங்க வேண்டும்

கொழும்பு,மார்ச் 30
நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தவும் எதிர்காலத்தில் நியாயமான அரசியல் தீர்வு காண்பதற்கும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் குமர குருபரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்படுவதாவது:-

நல்லிணக்க ஆணைக் குழு அறிக்கை முழுவதையும் நடைமுறைப்படுத்த முடியாது என்று மூத்த அமைச்சர்களும், ஒருபோதும் பரிந்துரைகளை நடைமுறைபடுத்த அனுமதியோம், வீதியில் இறங்கிப் போராடுவோம் என்று அமைச்சர் விமல் வீரவன்ஸவும், ஜெனிவா சென்றிருந்த மனித உரிமைவாதிகளின் காலை அடித்து முறிப்பேன் என்று அமைச்சர் மேர்வின் சில்வாவும் கூறி வருகின்றனர்.

> பொறுப்பின்றி அரசு செயற்படுவதனால் இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு சர்வதேச சக்திகளின் பொறுப்பான பங்களிப்புத் தான் தேவை.

கூட்டுப் பொறுப்பின்றிப் பேசுவதற்கு இவர்கள் மனம் ஆசைப்படும் பொழுதும், அரசும் இப்படி பேச இவர்களை வைத்துக்கொள்ள விரும்பும் பொழுதும் இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு சர்வதேச சக்திகளின் பொறுப்பான பங்களிப்புத் தான் தேவை- என்றார்.

## பிரதமர் கூற்றை அறிந்திருந்தால் ஜெனிவாவில் வாக்குகள் குறைந்திருக்கும்

### மனோகணேசன் கூறுகிறார்

கொழும்பு,மார்ச்30
ஆணைக்குழு அறிக்கையை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் புத்திஜீவிகளின் ஆலோசனை பெற்றுக்கொள்ளப்படவுள்ளதாக பிரதமர் டி.எம். ஜயரட்ண அண்மையில் தெரிவித்ததை உலக நாடுகள் கேள்விப்பட்டிருந்தால் ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சபை அமர்வுகளில் இலங்கைக்கு இன்னும் குறைந்தளவு வாக்குகளே கிடைத்திருக்கும் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின்தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

அரசின் இரட்டைநிலைப்பாட்டை உலக நாடுகள் தெரிந்து கொள்ளவில்லை. பிரதமரின் கருத்து இலங்கைக்கு ஆதரவாக வாக்களித்த நாடுகளை அவமரியாதை செய்யும் வகையில் அமைந்துள்ளது.

பிரச்சினைகளுக்கு உரிய முறையில் தீர்வு காணப்படாது இழுத்தடித்தால் எதிர்காலத்தில் சர்வதேச அழுத்தங்களை எதிர்நோக்க நேரிடும். இதனைத் தவிர்க்க முடியாது. - என்றார். (ச)

## ஜெனிவா தீர்மானம்; முதலாவது கூட்டம் கண்டியில் நாளை

கொழும்பு,மார்ச் 30
இலங்கை சம்பந்தமாக ஜெனிவா மனித உரிமை சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பாக மக்களுக்கு தெளிவுப்படுத்த அரசு தீர்மானித்துள்ளது.

மாகாண மட்டத்தில் இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளதாக அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நாடு ஒன்றாக என்ற தொனிப்பொருளில் மக்களை தெளிவுப்படுத் தும் இந்தக் கூட்டங்களை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதில் முதலாவது கூட்டம் நாளை சனிக் கிழமை கண்டியில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ச)

## கருவிழி கூம்பல் நோய்க்கு முதல் முறையாக சிகிச்சை

### கொழும்பு ஆஸ்பத்திரியில்




கொழும்பு,மார்ச் 30
இலங்கையை அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கியுள்ள 'கெரட்டோ கோனஸ்' எனப்படும் கருவிழி கூம்பல் நோய்க்கு சிகிச்சை அளிக்கும் திட்டம் முதல் முறையாக கொழும்பு தேசிய கண் வைத்திய சாலையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கருவிழி கூம்பல் நோய் ஆசிய வலயத்தில் இலங்கை உட்பட பல நாடுகளில் பரவியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. சிகிச்சை மூலம் நோயை படிப்படியாக குறைக்க சுகாதார அமைச்சு எதிர்பார்த்துள்ளது.

நோய் பரவ ஆரம்பிக்கும்போதும் ஆரம்பித்து நடுநிலையில் இருக்கும் போதும் சிகிச்சைப் பெற்றால் அதன் தாக்கத்தைக் குறைத்துக் கொள்ள முடியும் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நோய்க்கு சிகிச்சை அளிக்கக்கூடிய இயந்திர சாதனம் இலங்கையில் இதற்கு முன்னர் இருக்கவில்லை என்ற போதும் நேற்று முன்தினம் புதன்கிழமை கொழும்பு தேசிய வைத்திய சாலையில் குறித்த இயந்திரம் பொருத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ச)

# அமைச்சருடன் விவாதத்துக்கு தயார்

கொழும்பு,மார்ச் 30
மாதாந்தம் 7500 ரூபாவுக்குள் மூன்று பேர் கொண்ட குடும்பம் வாழ்க்கை நடத்துவது தொடர்பாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்தனவுடன் பகிரங்க விவாதத்துக்கு தான் தயார் என்று புதியஇடது சாரி முன்னணியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ண தெரிவித்தார்.

இது தொடர்பாக அமைச்சர் பந்துல குணவர்தனவுக்கு தான் ஏற்கெனவே அறிவித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

பிச்சைக்காரர்கள் போல் வாழ்வதற்கு மக்களுக்கு கற்பிக்க அமைச்சர் முயற்சிக்கிறார் என்பதை நிரூபிப்பதற்காக நான் இந்த விவாதத்தில் பங்குபற்ற தீர்மானித்தேன் என்று அவர் தெரிவித்தார்.

# சேவை நலன் பாராட்டு



## திரு. கா.ராமஜயம்
அதிபர்
யா/தம்பசிட்டி மெ.மி.த.க. பாடசாலை

### கார்த்திகேசு ராமஜயம்
(B.Dev.S, PGD in. Ed., M.A)

பிறந்ததிகதி 30.03.1952

ஆரம்பக்கல்வி:
யா/ கரவெட்டி பொன்னம்பலம், வித்தியாலயம்.

இடைநிலைக்கல்வி: யா/ கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி

உயர் நிலைக் கல்வி:
யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்

பட்டப்படிப்பு: கொழும்பு பல்கலைக்கழகம்

பட்டப்பின் டிப்ளோமா: யாழ். பல்கலைக்கழகம்

முதுகலைமாணிப்பட்டம்: யாழ். பல்கலைக்கழகம்

சேவைவிவரம்:
ஆசிரியர்/ கிளி/ இந்துக்கல்லூரி
(09.01.1979 - 30.06.1983)

ஆசிரியர்/ கிளி/மத்திய கல்லூரி
(01.07.1983 - 31.01.1985)

ஆசிரியர்/ கிளி/ இயக்கச்சி அ.த.க பாடசாலை
(01.02.1985 - 17.05.1987)

(ஆசிரியர், பகுதித்தலைவர், பிரதி அதிபர்)
யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் -
(18.05.1987 - 18.04.2008)

அதிபர்
யா/ தம்பசிட்டி மெ.மி.த.க பாடசாலை (19.04.2008 - 30.03.2012)

### மகிழ்வோடு நீடூழிவாழ

அதிபர் ராமஜயம் எனது நண்பர் நெ. ம. மகாவித்தியாலயத்தில் தொடங்கிய நட்பு முதுகலைமாணி கற்கையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நிறைவுசெய்யும் வரை தொடர்ந்தது.



மாணவர்களும், பெற்றோரும் விரும்பும் நல்ல அதிபர், நல்ல ஆசிரியர், பிள்ளை களுக்கு நல்லதந்தை, ஊர்மக்கள் விரும்பும் நல்ல நாணயமான ஒழுக்க சீலர். தான் ஆசிரியர் மாத்திரமல்ல நல்லவிவசாயி என்பதை எல்லோர் முன்னும் பாறைசாற்றும் நல்ல முயற்சியாளர். எண்ணியதைமுடிக்கும் திறன் உண்டு. நல்லதையே எண்ணுவதும் உண்டு. திண்ணிய நெஞ்சம்முடையவர். தெளிந்த நல்லறிவும் உண்டு. பாடசாலையிலிருந்து ஓய்வுபெற்றாலும் ஓய்வையே சுகமாக எண்ணி வாழ்பவர் அல்லர், என்றும் ஓடி ஓடி உழைக்கும் நல்ல மனிதன். அவர் குடும்பத்துடன் மகிழ்வோடு நீடூழிவாழ வாழ்த்துகின்றேன்.

பேராசிரியர் வி.ப. சிவநாதன் தலைவர்/பொருளியல்துறை யாழ். பல்கலை

### வடமாகாண கல்வி அமைச்சு செயலாளரின் வாழ்த்துச்செய்தி



கடந்த மூன்று தசாப்தங்களாக கல்விப்பணியினை சிறப்பாக ஆற்றி சேவையில் இருந்து ஓய்வுபெறும் திரு.கா. ராமஜயம் அவர்களுக்கு பாராட்டுத் தெரிவிப்பதில் பெருமகிழ்வடைகின்றேன். இவர் தனது சேவைக்காலத்தில் அர்ப்பணிப்புடனும் இதயசுத்தியுடனும், நேர்மையுடனும் அரும்பணியாற்றி பல நல்ல மனிதர்களை உருவாக்கியது பெருமைக்குரியதாகும். மிகவும் எளிமையாகவும், அன்பாகவும் பழகும் ஆற்றலுடைய இவர் கிராமப்பற்று, சமூகப்பற்று, பாடசாலைப் பற்று என்பவற்றுடன் பணியாற்றி கல்வித்துறைக்கும் மற்றும் சமூக அபிவிருத்திக்கும் பெரும் பங்காற்றியமை நன்றியுடன் நினைவு கூரத்தக்கதாகும். இவர் தனது ஓய்வுக்காலத்தில் தனது குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக நீண்டகாலம் வாழ எல்லாம் வல்ல இறைவனின் அருள் கடாட்சம் கிடைக்கவேண்டிப்பிரார்த்திப்பதுடன் எனது பாராட்டுக்களையும், நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சி. சத்தியசீலன் செயலாளர், கல்விபண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு, வடமாகாணம்

### மாண்பும்கொண்ட நீண்ட ஆயுளாக இருக்க வாழ்த்துகின்றேன்

ஆற்றலில் மிகப்பெரியது மன ஆற்றல், மன ஆற்றலில் சிறப்புடையோன் என்றும் சிறப்புடையான் என்பது போல், செயலில் கண்ணியமும் வைத்தகாலைப் பின்வையாமல் செய்யும் தொழிலே



தெய்வமாக மதித்தவர் யா/தம்பசிட்டி மெ.மி.த.க.பா. அதிபர் திரு.கா. ராமஜயம். வந்தாரை உபசரித்து அமரவைத்து வந்தகாரியம் வினவும் பழக்கம் இவருடன் கூடப்பிறந்த ஒன்று. அன்பளிப்புகளை அதை அளிக்கும் முறைகண்டு, அதன் தன்மை கண்டு ஏற்றுக்கொள்ளல் அவ்வாறிருந்தும் குறிப்பிடக்கூடியபடி வளர்ச்சியைப் பாடசாலை கண்டுள்ளது என்பது வியப்புக்குரியதெனலாம். ஏனெனில் தானே முதலில் பணத்தையிட்டு காரியம் முடியட்டும் எனும் மனப்பாங்குடன் செயற்பட்டவர். 'அனைவருக்கும் கல்விச் செல்வம் சொந்தம்' என்ற கோட்பாட்டை மிகவும் மதித் தவர் என் பதை பாடசாலைக்குச் செல் லாமல் இருக்கும் மாணவர்களை வலிந்து பாடசாலைக்கு உள்வாங்கிய தன் மூலம் நிரூபித்துக்காட்டியவர். இறைபக்தி, கருணை, அன்பு, சமூக நலம் இவர் மாட்டே குடிகொண்ட பண்புகள். இதனால் சேவையிலும் கண்ணியமிக்கவரானார். அவர் சேவையிலிருந்து ஓய்வு பெற்றாலும் அவர் சேவை பாடசாலையில் நினைவுகூரத்தக்கதொன்றாக என்றும் இருக்கும் என் பதில் நாம் மகிழ் வடையலாம். அவரது பிற்கால நலமும், மாண்பும்கொண்ட நீண்ட ஆயுளாக இருக்க இறைஞ்சுவோமாக.

கு. சுந்தரமூர்த்தி, உதவிக் கல்விப்பணிப்பாளர், (ஆங்கிலம்) வடமராட்சி வலயம்,யா/தம்பசிட்டி மெ.மி.த.க பாடசாலை, பழையமாணவர்சங்கத்தலைவர்

### நீண்ட ஆயுளுடன் சிறப்பாக வாழ வாழ்த்துகின்றேன்

எனது ஆரம்பக்கல்வியின் தாய்ப் பாடசாலையின் அதிபருக்கு வாழ்த்துச் செய்தி தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி. அதிலும் நாம் இரண்டு பேரும் யா/ நெல்லியடி ம.மா.வி.இல் ஆசிரியர்களாகப் பணியாற்றி ஒரே காலப்பகுதியில் பதவி உயர்வு பெற்றும்



கொண்டோம். பதவி ஏற்று நான்கு ஆண்டுகளுக்குள் பாடசாலையில் பௌதிகவள விருத்தியிலும் கல்வி மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் அதிக கவனம் செலுத்தி நிறைந்த இலக்குகளை எட்டியவர். அத்துடன் பாடசாலை யின் முகப்புத் தோற்றத்தை பல வருடங்க ளுக்கு பின் (சுமார் 35 வருடங்கள்) மிகவும் கம்பீரமான முறையில் நிர்மாணித்து பெரும் கோட்டை வாசல் போல் வடிவமைத்து மிகவும் அழகாக்கி யவர். குறுங்காலத்தில் அனைவர் உள்ளங்களிலும் ஒரு சிறப்பான இடத்தை பெற்று எல்லோரினதும் அன்பையும் ஆதரவையும் பெற்றார். இன்றுடன் அரசசேவையில் இருந்து ஓய்வுபெறும் எமது பாடசாலை அதிபர் ஓய்வு காலங்களில் சீரும் சிறப்பும் பெற்று நீண்ட ஆயுளுடன் சிறப்பாக வாழ வாழ்த்துகின்றேன்.

நா. கண்ணதாசன், பொருளாளர், பழைய மாணவர் சங்கம், அதிபர்,யா/ துன்னாலை R.C. T.M.S

### சேவையால் உயர்ந்தவர்

யா/ தம்பசிட்டி மெ.மி.த.க பாடசாலையின் அதிபராக கடமையாற்றும் திரு. கார்த்திகேசு ராமஜயம் அவர்கள் 33 வருட காலம் அர்ப்பணிப்பான சேவையின் பின்னர் இன்று 30.03.2012 இல் இருந்து ஓய்வு பெற்று செல்வதையிட்டு அவர்களை வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகிறேன்.



1977 ஆம் ஆண்டு கொழும்பு பல்கலைக்கழத்தில் அபிவிருத்திக் கல்வியில் பட்டத்தைப் பெற்றுக்கொண்ட இவர் 1979 ஆம் ஆண்டு ஆசிரிய சேவையில் இணைந்து கொண்டார். கிளிநொச்சி மாவட்டத்தில் தனது முதல் நியமனத்தைப் பெற்று 9 ஆண்டுகள் தொடர்ச்சியாக அந்த மாவட்டத்தில் சேவையாற்றி 1987 ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்துக்கு இடமாற்றம் பெற்று வந்தார். யாழ். மாவட்டத்தில் யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் ஆசிரியராக, பகுதித் தலைவராக, பிரதி அதிபராக 21 ஆண்டுகள் கடமையாற்றியதுடன் இக் கல்லூரியின் வளர்ச்சியில் தன்னை அர்ப்பணித்து சேவையாற்றிய நல்லாசானாக திகழ்ந்தார். 2008 ஆம் ஆண்டு யா/தம்பசிட்டி மெ.மி.த.க. பாடசாலையில் அதிபராக நிய மனம் பெற்று அளப்பரிய சேவையால் இக் குறுகிய காலத்தினுள் இப் பாடசாலையில் மாணவ சமூகத்தால் என்றும் மதிக்கப்படும் நல் அதிபராக திகழ்வது இன்று இவரது சேவைக்கு கிடைத்த சான்றாக திகழ்கின்றது.

யா/ தம்பசிட்டி மெ.மி.த. பாடசாலையை பருத்தித்துறை கோட்டத்தில் முன்னணி ஆரம்ப பாடசாலையாக மாற்றியதோடு இப் பாடசாலையின் கவின் கலையை பிள்ளைநேயப் பாடசாலைகுரிய பண்புசார் அம்சங்களுக்கு ஏற்ற வகையில் மாற்றி மாணவர்களை மகிழ்வுடன் கற்கும் சூழலுக்கு மாற்றியிட்டார். இந்தப் பாடசாலையின் பெற்றோரை, நலன் விரும்பிகளை, பழைய மாணவர்களை ஒருங்கிணைத்து பாடாசலை வளர்ச்சியில் சமூகத்தை இணைத்து பாடசாலையை முன்னணிப் பாடசாலை யாக வளர்த்தபெருமைக்குரிய வர். இந்தப் பாடசாலை தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் பெரும்பாலான மாணவர்களை சித்தியடையச் செய்து வறிய மாணவர் களின் கல்விக்காக அவர்களது, முன்னேற்றத்துக்காக தனது சேவை யை வழங்கி இந்தப் பாடசாலைக்கும் கல்விப் புலத்துக்கும் இவர் ஆற்றிய சேவையை மனதாரப் பாராட்டுகின்றோம். அதிபர் திரு. க. ராமஜ யம் தனது ஓய்வு காலத்தில் குடும்பத்தினருடன் சந்தோசமாக நீண்ட காலம் வாழ இறைவனை வணங்கி வாழ்த்துகின்றேன்.

சி. நந்தகுமார், வலயக் கல்விப் பணிப்பாளர்,வடமராட்சி.

### சமூகப் பணியைத் தொடர வாழ்த்துகின்றேன்

கா. ராமஜயம் 34 வருடங்கள் ஆசிரியராகப் பணி யாற்றி பல நல் மாணாக்கர்களை உருவாக்கிய பெருமை



இவருக்கே உரியதாகும். மாணவர்களுடன் கண்டிப்பாக நடந்தாலும் அவர்களது குடும்பப் பின்னணி, சூழல் ஆகியவற்றை நன்கு அறிந்தவர். இவர் 2008 ஆம் ஆண்டு தொடக்கம் யா/ தம்பசிட்டி மெ.மி. த.க. பாடசாலையில் அதிபராக பொறுப்பேற்ற நாளில் இருந்து இளைப்பாறும் வரை பாடசாலையின் கல்விமேம்பாட்டிற்கும் பௌதிக வளர்ச்சிக்கும் தன்னால் இயன்ற பங்களிப்பை மேற்கொண்டார். நீண்டகாலமாக முடிக்கப்படாமல் இருந்த மேல்மாடிக் கட்டடத்தை வலயக்கல்வி அலுவலகத்துடன் அடிக்கடி தொடர்புகொண்டு கட்டிமுடித்து உயரமான பாடசலை வளைவு கேற் (Gate) என்பனவும் அமைத்துள்ளார். மாணவருடைய ஒழுக்கம், கட்டுப்பாடு ஆகியவற்றுடன் நேரந்தவறாமையையும் அடிக்கடி எடுத்துக் கூறி பாடசாலையில் சிறந்த கல்வி நிலையை ஏற்படுத்தினார். கோட்டமட்ட நிகழ்வுகளிலும், வலய மட்ட நிகழ்வுகளிலும் முன்னின்று அயராது உழைத்தார். என்றும் இளமைத் தோற்றத்திலுள்ள திரு. ராமஜயம் அவர்கள் தன்னுடைய ஓய்வு காலத்தில் தேகாரோக்கியத்துடனும் குடும்பத்துடனும் சிறப் புற வாழவும் சமூகப் பணியை தொடரவும் எல்லாம் வல்ல மூத்தவிநாயகர் அருளை வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

திருவாளர் - பா. இரகுநாதன்
கோட்டக் கல்விப் பணிப்பாளர், பருத்தித்துறைக் கோட்டம்.

### எமது இதயத்தை வென்ற அதிபர்

2008 ஆம் ஆண்டு அதிபராக கடமையேற்று ஒரு குறுகிய கால சேவையிலேயே தம்ப சிட்டி இதயங்களை வென்ற அதி



பர், இன்று தனது வெள்ளிவிழா அகவையில் பதவிநிலை ஓய்வுபெறுகின்றார். அரசாங்கம் 60 வயதுடன் ஓய்வு பெற அறிவித்து தவறு இழைத்துவிட்டதாகவே நான் கருதுகின் றேன். ஏனெனில் எமது அதிபர் இன் னும் 10 வருடத்துக்கு இதே இளமைத் தோற்றத்துடன் துடிப்புடன் சேவை யாற்றக்கூடிய ஓர் இளைஞர். பாடசாலை அபிவிருத்தியில் தனது சொந்தவீட்டுக்குக் கூட அவ்வளவு அக்கறை காட்டுவாரோ என்று கூறமாட்டேன். எங்கே எந்தவேலை எப்படி இருப்பினும். காலை 07.00 க்கு எமது அதிபர் பாடசாலையில் நிற்பார். நேரம் தவறுபவர் யாராகஇருந்தாலும் அவரிடம் பேச்சு வாங்கியே ஆகவேண்டும். எமது பாட சாலை பற்றிய அவரது கனா - விளையாட்டு மைதானம், மூன்றுமாடிக் கட்டடமும், அயல்காணி கொள்வனவு கனவாகவே போய் விடுமா என்ற பயம் என்னைப்பற்றிக்கொண்டுள்ள து. பாடசாலைக்கு மைதானம் அமைக்க காணியை காட்டு நான் காசுதருகிறேன் என்ற வார்த்தை நான் வாழ்நாளில் அவரை மறக்கமுடியாதபடி செய்துள்ளது.

நான் அவருடன் பழகிய இந்த நாலுவருடங்களில் அவரின் உலக வாழ்வியல் அனுபவங்கள் பலகற்றுக்கொண்டேன். எழுத ஏராளம் உண்டு. இடம் கிடையாது. எமது இதயம் கவர்ந்த அதிபர் தனது ஓய்வுகாலத்தில் உடல் நலத்துடன் சந்தோஷமாக சகல வளங்களையும் பெற்று நீடூழி வாழ பாடசாலை சமூகம் சார்பில் வாழ்த்தி விடை பெறுகின்றேன்.

நா. சோதிநாதன்செயலாளர்,பாடசாலை அபிவிருத்திச்சங்கம்

# கல்வி மூலம் சிறந்த சமூகத்தை உருவாக்க ஒத்துழைப்பு தேவை

## பிரிட்டிஷ் கவுன்ஸில் பரிசளிப்பு விழாவில் கல்வி அமைச்சர்

கண்டி,மார்ச் 30

கல்வியில் அதிக கவனம் செலுத்தி அதன் மூலம் சிறந்த பணி செய்யும் சமூகம் ஒன்றை உருவாக்க அனைவரினதும் ஒத்துழைப்புத் தேவை என்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

பிரிட்டிஷ் கவுன்ஸில் ஒழுங்கு செய்த பரிசளிப்பு விழா கண்டி ஏர்ல்ஸ் ரிஜன்சி ஹோட்டலில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

சீரான கல்வித்திட்டத்தின் மூலம் உலகுக்கு வளமுள்ள குழந்தைகளை உருவாக்கும் மஹிந்த சிந்தனையின்படி பல முக்கிய பணிகள் எமக்கு உள்ளன. இதற்காக புதிய கல்வித்திட்டத்தில் ஐந்து விடயங்களில் எமது கவனம் செலுத்தப்பட்டுள்ளது. தகவல் தொழில்நுட்பம், ஆங்கிலமும் வெளிநாட்டு மொழிகளும், கணிதம் -விஞ்ஞானம், விளையாட்டு, அழகியல் என்பனவே இந்த ஐந்து விடயங்கள்.

இன்றைய நவீன உலகில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஆங்கிலமும் வெளிநாட்டு மொழியும் முக்கியத்துவம் பெறுகின்றன. இவை இன்றி இன்றைய பூகோளமயமாக்கப்பட்ட யுகத்தில் சிறப்புற முடியாது. தொடர்பு மொழியாக ஆங்கிலமும், வெளிநாட்டு மொழியும் உள்ளன.

பிரிட்டிஷ் கவுன்ஸில் மிக நீண்டகாலமாக எமது நாட்டில் ஆங்கிலக் கல்வி வளர்ச்சிக்காக அரும்பணியாற்றி வருகிறது. இதன் ஒரு கட்டமாகக் கடந்த இரண்டு



வருடங்களாக இலங்கை மாணவர்களையும் ஆசிரியர்களையும் பிரிட்டிஷுடன் பரிமாற்றம் செய்யும் பணியையும் செய்து வருகிறது- என்றார். (ச)

# மலையகத் தொழிலாளர்களின் உழைப்பு சுரண்டப்படுகிறது

நுவரெலியா,மார்ச் 30

இலங்கையில் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் சம்பள ஒப்பந்த நிபந்தனைகளுக்கு முரணாக தோட்டக் கம்பனிகளால் வேலை வாங்கப்படுவதாகவும் உழைப்பு சுரண்டப்படுவதாகவும் தொடர்ந்தும் குற்றச்சாட்டுக்கள் வந்த வண்ணமுள்ளன என்று ஹற்றனிலுள்ள மனித உரிமைகள் இல்லத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இதனால் தோட்டத்தொழிலாளர்கள் தமது சம்பளப் பணத்தை வாங்க மறுத்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுகின்றனர்.

ஒரு நாள் சம்பளத்துக்காக பறிக்க வேண்டிய தேயிலைக் கொழுந்தின் நிறையை 17 கிலோவிலிருந்து 20 கிலோவாக அதிகரித்த தோட்ட நிர்வாகம், அந்த முடிவை தொழிலாளர்களின் சம்மதமின்றி எடுத்துள்ளதாகவும் தொழிற்சங்கங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை ஹற்றன் தொழிலாளர்களால் பறிக்கப்பட்ட தேயிலைக் கொழுந்தை நிர்வாகம் ஏற்றுக்கொள்ள மறுத்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பிரச்சினை தொடர்பில் ஹற்றன் தொழில் நியாய சபைக்கு கொண்டு செல்லப்பட்டபோதும் தொழிலாளர்களுக்கு இதுவரை தீர்வு கிடைக்கவில்லை என்று ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸின் செயலாளர் முரளி ரகுநாதன் தெரிவித்தார். (ச)

# ஓட்டோவில் ஒரு கிலோ கஞ்சா மூவருக்கு விளக்க மறியல்

எருவில்,மார்ச் 30

ஓட்டோவில் ஒரு கிலோ கஞ்சாவைக் கொண்டுசென்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட மூவரையும் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு பொத்துவில் மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஜ.என். றிஸ்வான் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டார். பொலிஸாருக்கு கிடைத்த தகவலை அடுத்து கடந்த செவ்வாய்க்கிழமை மாலை பொத்துவில்- சியம்பலாண்டுவ பிரதான வீதி யில் ஓட்டோவை சோதனை செய்தபோது ஒரு கிலோ 15 கிராம் கஞ்சா மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கைதுசெய்யப்பட்டவர்களை நேற்றுமுன்தினம் புதன்கிழமை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்திய போதே இவர்களை எதிர்வரும் 10ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு பொத்துவில் மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார். (ச-31)

# தேயிலைத் தொழிற்சாலையை திறக்கக் கோரி ஆர்ப்பாட்டம்

நுவரெலியா,மார்ச் 30

நுவரெலியா, கந்தப்பளை பார்க் தோட்டத்திலுள்ள தேயிலைத் தொழிற்சாலையை உடனடியாக திறக்கக் கோரி தொழிலாளர்கள் தோட்டத் தேயிலைத் தொழிற்சாலைக்கு முன்னால் நேற்று வியாழக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கந்தப்பளை, பார்க், ஸ்கடல் ஆகிய தோட்டங்களைச் சேர்ந்த 850 தொழிலாளர்கள் கலந்துகொண்டனர்.

உடபுசல்லாவை பெருந்தோட்டக் கம்பனிக்கு உட்பட்ட பார்க் தோட்டத் தேயிலைத் தொழிற்சாலை கடந்த இரண்டு மாதகாலமாக மூடப்பட்ட நிலையில் உள்ளது. இந்தத் தேயிலைத் தொழிற்சாலையை மீண்டும் இயங்கச் செய்வதற்கு தோட்ட நிர்வாகம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரியே தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டம் தொடர்பாக தோட்ட முகாமையாளருடன் தோட்டத் தொழிற்சங்க பிரதிநிதிகளுக்கும் இடையில் பேச்சை நடத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ச)



சிவமயம்

கரைச்சி புளியம்பொக்கனை நாகதம்பிரான் ஆலய பொங்கலுக்கான தண்டல் ஒழுங்குகள் பற்றிய அறிவித்தல்



புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பொங்கல் 05.04.2012 வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. இதற்கமைவாக தண்டல் ஒழுங்குகள் நாளை இன்று (30.03.2012) வெள்ளி தொடக்கம் வட்டக்கச்சி, இராமநாதபுரம், விசுவமடு, கல்மடு, திருவையாறு, பிரமந்தனாறு, மயில்வாகனபுரம், உடையார்கட்டு சுதந்திரபுரம், தேவிபுரம் போன்ற பகுதிகளுக்கு ஆலய சின்னங் களுடன் உழவு இயந்திரங்களில் தொண்டர்கள் வருகைதரவுள்ளார்கள் என்பதை முன்கூட்டியே அறியத்தருகின்றோம்.

ஆலய பரிபாலனசபை

(C/200))(6-9-8)

சிமெந்துக் கல் விற்பனைக்கு

சிமெந்துக் கல் விற்பனைக்கு உண்டு. கல் ஒன்றின் விலை 27/= (கிளிநொச்சி, யாழ்ப்பாணம் போன்ற இடங்களுக்கு விநியோகம் செய்யப்படும். இவற்றுக்கான கட்டணம் அறவிடப்படும்)

(14073)(6-9-11) தொடர்புக்கு:- 0778162892

மலிவு விற்பனை

யாழ். நகரில் எங்குமில்லாத மலிவு விலையில் JAPAN SONY WEGA FLAT TV கள் 21'',25'' - 13,500/=, 29''-16,000/=, 12'' BOX - 12,000/=, பைனியர் AMP -10,000/= குளிர்சாதனப் பெட்டிகள், 19,500/= C.D ரேடியோ கசெற் - 3000/=

தொடர்பு: 077 0440570

சோவி ரேட் சென்ரர்

(கொமர்ஷல் வங்கி எதிரில்), 56, K.K.S வீதி, சுன்னாகம்

மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவகுடும்பம், 45 வயது கார்த்திகை நட்சத்திரம், டோகாவில் பணிபுரிந்துவிட்டு தற்போது நாடுதிரும்பியிருக்கும் மணமகனுக்கு படித்த, நற்குணமுள்ள மணமகள் தேவை சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது.

தொடர்பு: 077 4607912

(18172)(48,6,7)

முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

30.03.2012 (JEBON)

செல்வன் ஜெபோன்



வல்வெட்டித்துறை ஆசீர்வாதம் ஒழுங்கையில் வசிக்கும் ஜெரோம்குணராஜ் - ஜெனிபா தம்பதியரின் செல்வப்புதல்வன் ஜெபோன் தனது முதலாவது பிறந்தநாளை புனித செபஸ்தியர் துணையுடன் இன்று தமது அன்னை வேளாங்கன்னி இல்லத்தில் வெகு விமர்சையாக கொண்டாடுகின்றார். இவர் பல்கலைகளும் கற்று பல்லாண்டுகாலம் வாழ வாழ்த்துபவர்கள்

அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, கனடாமாமா, அமெரிக்கா சித்தப்பா, நோர்வே

அன்னை வேளாங்கன்னி இல்லம், ஆசீர்வாதம் ஒழுங்கை, வல்வெட்டித்துறை
T.P : 021 3214620, 021 3215150

குணம் கிறீம் கவுஸ், K.K.S றோட், சுன்னாகம்
குணம் லொச் தும்பளை வீதி, பருத்தித்துறை
T.P. .077 8999023, 077 1869015

## கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி மாணவி சாதனை



2011 ஆம் ஆண்டில் நடைபெற்ற க.பொ.த (சா/த) பரீட்சையில் கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி மாணவி

செல்வி

**ரவீந்திரன் மலரினி**

என்பவர் அனைத்துப் பாடங்களிலும் 'A' தரச்சித்தி பெற்று, கிளிநொச்சி மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளார். இவர் கல்லூரிப் படிப்பினை மட்டுமே நம்பி, எந்தவொரு கல்வி நிலையத்திலும் தனது கல்வியினைத் தொடராது தன்னம் பிக்கையுடன் கல்வி பயின்று இன்று தனக்கு மட்டுமன்றி, தன் குடும்பத்துக்கும் தனது கிராமத்துக்கும், தனது கல்லூரிச் சமூகத்துக்கும் பெருமையைத் தேடித்தந்துள்ளார்.

இவரது சாதனை எமது கல்லூரிக்குக் கிடைத்த மாபெரும் வரப்பிரசாதமாகும். இவரது சாதனையினை முன்னிட்டு இவரையும் இவரை வளர்த்து ஆளாக்கிய பெற்றோரையும் கல்வியறிவு ஊட்டி நல்வழி காட்டிய அதிபர் மற்றும் ஆசிரியப் பெருந்தகைகளையும் பெருமகிழ்வுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி
கல்லூரிச் சமூகத்தினர்.



புதுக்குடியிருப்பு முன்னாள் பிரதேச செயலாளர்

அமரர் நா.கோணேஸ்வரன்

அவர்களின்

ஓராண்டு நினைவாக

மாபெரும் மாட்டு வண்டிச் சவாரிப்போட்டி

இடம்:- விசுவமடு தொட்டியடி மைதானம்

காலம் 08.04.2012 ஞாயிற்றுக்கிழமை

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

-விசுவமடு மக்கள்.

(14084) (2,6,7)

இதயம் நிறைந்த அதிபரின் அறுபதாவது அகவையில் இனிய நல் வாழ்த்துக்கள்

யா/ தம்பசிட்டி மெ.மி.த.க. பாடசாலை முதல்வர்

திரு. கா. ராமஜயம் (S LTS - 1)

((B.Dev, MA (D.S - Drst) PGD in. Edu)



தன்னிகரில்லா தலைவனாய்
தம்பசிட்டியம் பதியில்
திகழ்ந்து
தனியிடம் பெற்றவரை
தற்சேவை நிறைநாளில்
தரணிபோற்றிட
வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்:
மயில்வாகனம் குடும்பம்,
தேவகுமார் குடும்பம்,
பிரசாந் குடும்பம்.

தம்பசிட்டி
பருத்தித்துறை.

(12712) (45,6,7)

# லஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் பணிமனை கிழக்கில் வேண்டும்

## அக்கரைப்பற்று மாநகரசபையின் எதிர்க்கட்சித் தலைவர் வேண்டுகோள்

பாலமுனை, மார்ச் 30

''லஞ்ச ஊழல் தலைவிரித்தாடும் அக்கரைப்பற்றுப் பகுதியில் அதுபற்றிய முறைப்பாடுகளைச் செய்யவும், விசாரணைகளை முன்னெடுப்பதற்கும் வசதியாக, லஞ்ச ஊழல் ஆணைக் குழுவின் உப அலுவலகம் ஒன்று உடனடியாகத் திறக்கப்படவேண்டும்.'' என்று அக்கரைப்பற்று மாநகரசபையின் எதிர்க்கட்சித் தலைவர் அஷ் ஷெய்க் எஸ். எல்.எம். ஹனிபா மதனி தெரிவித்தார்.

அக்கரைப்பற்று ஜும்மாப் புதுப்பள்ளி வாசலுக்கு அண்மையில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தநிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அக்கரைப்பற்றுப் பகுதிக்கு அபிவிருத்திக்கென கோடிக்கணக்கான அரச நிதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டும், இந்த நிதிக்கான அபிவிருத்தி வேலைகள் முறையாக நடைபெறாமல் இருப்பதும் அண்மைக் காலமாக அக்கரைப்பற்று மக்களால் விசனத்தோடு பார்க்கப்படுகின்ற ஒரு விடயமாகும்.

அபிவிருத்தி என்ற பெயரில் அரச நிதியின் பயன்கள் மக்களைச் சென்றடையாமல், மோசடிக்காரர்களின் கைகளிலேயே சிக்கிக் கொள்கின்றன. இங்குள்ள அதிக நிறுவனங்களில் ஊழல் மோசடி முறைப்பாடுகளின் பேரில், விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

அக்கரைப்பற்றிலுள்ள தொழில்நுட்பக் கல்லூரி கடந்த பல நாள்களாக மூடப்பட்டிருக்கிறது. மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் முற்றாக மூடப்பட்டிருக்கின்றன. ஊழலும் மோசடிகளும் போதைப்பொருள் பாவனைகளும் அற்ற நாடாக இலங்கை சிறக்கவேண்டும்என்றஜனாதிபதியின் இலட்சியத்துக்கு முட்டுக்கட்டையாக இருக்கின்ற இந்த நடவடிக்கைகளை முற்றாக ஒழிப்பதற்கு லஞ்ச ஊழல் ஆணைக் குழுவின் உப அலுவலகம் திறக்கப்பட வேண்டியது இங்கு அத்தியாவசியமாக இருக்கிறது.

தற்போது ஆரம்பித்து வைக்கப்பட்ட கிராமத்துக்கொரு வேலைத்திட்டம் எனும் தலைப்பில் அம்பாறை மாவட்டத்திலுள்ள ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற, மாகாண சபை உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியின் அளவு சுமார் 20 கோடி ரூபாவாகும். இந்த அபிவிருத்திகள் அனைத்தும் இந்த மாவட்டத்தில் எமது கட்சியின் சார்பில் நடைபெறவுள்ளன.

அக்கரைப்பற்றுப் பகுதியில் அபிவிருத்தி வேலைகளை ஏனைய அமைச்சர்களும், நாடாளுமன்ற, மாகாண சபை உறுப்பினர்களும் செய்வதற்கு இருக்கின்ற தடைகளைப் பள்ளிவாசல்கள் சம்மேளனம் நீக்கி, எமக்கு ஒரு வாய்ப்பை வழங்குமாக இருந்தால் இன்னும் பல கோடி ரூபா செலவிலான அபிவிருத்திகளை செய்யக் காத்திருக்கிறோம் .

எமது கட்சியில் இருந்த உவைஸ் என்பவர் அதாவுல்லாஹ் தரப்புக்கு மாறிச் சென்ற விவகாரத்தினூடாக இந்தக்கட்சிக்கு இருந்ததடைக் கல் ஒன்று தடம் புரண்டு நகர்ந்து விட்டதாகவே கட்சி வட்டாரத்தில் பார்க்கப்படுகின்றது- என்றார். (ச)

# ஆரையம்பதி சந்தையில் கெட்டுப்போன மரக்கறிகள்

## திடீர்ச் சோதனையில் சிக்கின

மட்டக்களப்பு,மார்ச் 30

மட்டக்களப்பு, ஆரையம்பதி பிரதேசத்தின் பொதுச்சந்தையில் பாவனைக்கு உதவாத மரக்கறிகள் மற்றும் காலாவதியான உணவுப்பொருள்களை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை கைப்பற்றியுள்ளனர்.



ஆரையம்பதி பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி இ.சிறிநாத்தின் ஆலோசனைக்கு அமைய பொதுச்சுகாதார பரிசோதகர்கள் ஆரையம்பதி பொதுச்சந்தையில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டபோதே இந்தப் பொருள்கள் கைப்பற்றப்பட்டன. பழுதடைந்த பெரிய வெங்காயம், மரக்கறிகள், காலாவதியான பிஸ்கட்டுக்கள் உள்ளிட்ட உணவுப் பொருள்கள் இதன்போது கைப்பற்றப்பட்டன.

பழுதடைந்த மற்றும் காலாவதியான உணவுப் பொருள்களை விற்பனைக்காக வைத்திருந்தவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஏ.எல்.எம்.பசீர் தெரிவித்தார். (ச)

# கணினிகளை சேதப்படுத்தியதாக பிரதி தவிசாளர் மீது குற்றச்சாட்டு

அக்கரைப்பற்று,மார்ச் 30

அக்கரைப்பற்று பிரதேச சபைக்குள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை காலை நுழைந்த பிரதித் தவிசாளர் ஐ.எல்.ஏ.ஹக்கீம் உள்ளிட்ட குழுவினர் சபைக்குச் சொந்தமான தளபாடங்கள் மற்றும் கணினிகள் ஆகியவற்றை சேதப்படுத்தியுள்ளதாக அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்று பிரதேச சபைக்கு தனிப்பட்ட வேலை நிமித்தம் வருகை தந்திருந்த அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகரவின் இணைப்புச் செயலாளர் எம்.ஐ.பாரூக்கின் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரின் கண்ணாடி பிரதித் தவிசாளர் ஐ.எல்.ஏ.ஹக்கீம் மற்றும் எஸ்.லாபீர் உள்ளிட்ட குழுவினரால் அடித்து உடைக்கப்பட்டுள்ளது .

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று.பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

குறிப்பிட்ட நபர் சபை ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் முரண்பாடான கருத்துக்களையே தெரிவித்து வருகின்றார். அத்துடன் பிரதேச சபை செயலாளர் மற்றும் ஊழியர்களை அச்சுறுத்தி வந்துள்ளதுடன் சபை நடவடிக்கைகளின் போது முறையற்ற வார்த்தைப் பிரயோகங்களையே பாவித்து வருகின்றார் என்று அக்கரைப்பற்று பிரதேச சபை தவிசாளர் எம்.ஏ.றாசீக் தெரிவித்தார். (ச)







வெளிவந்துவிட்டது

நிறம்மாறாத
இந்தியாவும்
தடம்மாறாத
கருணாநிதியும்



அயலில் உள்ள ஒரு பெரிய நாடு என்ற வகையிலும், ஒரு பிராந்திய வல்லரசாக இருந்தபோதிலும் எமக்காக விசுவாசமாகக் குரல் கொடுக்கும் கோடி உறவுகளைக் கொண்ட நாடு என்ற வகையிலும் நாம் அந்நாட்டின் உறவுகளை எதிர்பார்க்க வேண்டியுள்ளது.

ஆனால், இந்திய மத்திய அரசும், கருணாநிதியும் தமிழகத் தமிழ் மக்களின் வாக்குகளை வெல்ல எமது பிரச்சினையை பகடைக்காயாகப் பாவித்து வருகின்றனர். அதேவேளையில் எம்மைப் பலிக்கடாய்களாக்கி இலங்கை அரசின் நல்லெண்ணத்தைப் பெற்று வருகின்றனர். ஆனால் தமிழகத் தமிழ் மக்களும் இந்தியாவெங்கும் பரந்திருக்கும் நல்லெண்ணம் கொண்ட நியாயபூர்வமான சக்திகளும் இந்திய மத்திய அரசுக்கும், தி.மு.க.வினருக்கும் நிச்சயமாகத் தகுந்த பாடத்தை....

மலையகம் யாருடைய
வீட்டுச் சொத்தும் அல்ல






ஐ.பி.எல் போட்டிகளுக்கு
தடை விதிக்கவேண்டும்




முற்றிலும் மாறுபட்ட
புதிய மினி கணினி

## சமய சந்நிதிகளில்

யாழ்.நல்லூர் சிவ ஞானப் பிள்ளையார் கோயில் வருடாந்த பெரும் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 10 நாள்கள் இடம் பெறும் திருவிழாவில் எதிர்வரும் 7 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு தேர்த்திரு விழாவும், மறுநாள் ஞாயிற்றுக் கிழமை தீர்த்தத்திருவிழாவும், இடம்பெறும். (வ-13)

* * *

நாவலி, மார்ச் 30

நவாலி அந்திரான் முருக மூர்த்தி ஆலயத்தின் குளிர்த்தி நிகழ்வு இன்று வெள்ளிக் கிழமை நடைபெறும். (வ-100)

* * *

கொக்குவில் வள்ளி தேவ சேனா சமேத ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தான வருடாந்த பெருந்திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி சிறப்பாக நடைபெற்று வருகிறது.

நாளை மறுதினம் மஞ்சத் திருவிழா இடம்பெறும்.

எதிர்வரும் 4 ஆம் திகதி புதன்கிழமை சப்பறத் திருவிழாவும், எதிர்வரும் 5 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (வ)

## வடமராட்சியில் இரண்டாயிரத்துக்கும் அதிகமானோருக்கு உதவித்தொகை

வடமராட்சி, மார்ச் 30

சமூகசேவை அமைச்சினால் முதியவர்களுக்கு வழங்கப்படும் உதவித் திட்டத்தின் கீழ் பருத்தித் துறை வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவில் 70 வயதை அடைந்த இரண்டாயிரத்துக்கும் அதிகமான பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை சமூக பாதுகாப்புச் சபையால் முதியோர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத்தைப் பெற்றுக் கொள்ள இவ்வாண்டில் 60 வயதைக் கொண்ட 79 பேர் தெரிவாகியுள்ளனர். (வ-8)

## சுய தொழில் கடன் கொடுப்பனவு

நவாலி, மார்ச் 30

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் சுயதொழில் கடனுக்கு விண்ணப்பித் தோரை மேற்படி செயலகத் துக்கு வந்து கொடுப் பனவை பெற்றுக் கொள்ளுமாறு சமூக சேவை உத்தியோகத் தர் க.புரட்சிதாசன் அறிவித்துள்ளார்.

சமரபாலா மல்லிகா- சுதுமலை தெற்கு, மாணிக்கம்- மானிப்பாய், சுப்பிர மணியம் தெய்வேந்திரம்- சாவற்கட்டு ஆகிய பயனாளிகளே தங்களது கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-100)

# தவக்காலத்தில் ஆன்மிக வலுவூட்டும் பாஷையூர் - மணிபுரி சிலுவைப் பாதை



உலகெங்கும் வாழும் கிறிஸ்தவர்கள் இயேசுக் கிறிஸ்துவின் பாடுகள் மரணத்தை நினைவு கூர்ந்து உயிர்ப்பின் வழியாக மீட்பளிக்கும் நிலை வாழ்வுக்குள் நுழைய தம்மைத் தயார்ப் படுத்தும் தவக் காலத்தை அனுசரித்து வருகிறார்கள். ''மனந்திரும்பி நற்செய்தியை நம்புங்கள்'' என்ற இயேசுவின் அழைப்பை உச்சரித்து குருவானவர் விசுவாசிகளின் நெற்றி யிலே முன்னைய வருடத்திலே வழங்கிய குருத் தோலைகளை எரித்துப் பெறப்பட்ட புனித நீற்றைக் கொண்ட சிலுவை அடையாளம் வரைந்த திருநீற்றுப் புதனில் தொடங்கிய தவக் காலம், இயேசு கல்வாரி மலையிலே சிலுவையில் தொங்கி மீட்பின் திட்டத்தை நிறைவு செய்த பெரிய வெள்ளிக்கிழமையுடன் நிறைவடைகிறது.

இந்த நாள்களில் எம்மை ஆய்ந்துணர்ந்து தீமையை, பாவவழிகளை பகைமையை விட்டு திருந்திய மன்னிப்பின் மூலம் அன்புறவை வளர்க்கும் மக்களாக மறை விசேட வழிபாடுகள், மறையுரைகள், திருப்பலிகள், சடங்குகள் எனப் பல நிகழ்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அகத்தையும் புறத்தையும் தூயதாக மாற்ற ஒறுத்தவர்கள், நோன்புகள் தர்மம், நற்செயல்கள் என்பவற்றைக் கடைப்பிடித்து புதிய வாழ்வை ஆரம்பிக்கின்றனர்.

மனமாற்றத்தின் வழியாக அருளையும், அன்புநிறை அமைதியையும், மன்னிப்பையும் பெற்றுக் கொள்ளும் இந்த தவக் காலத்தில் சிலுவைப் பாதைத் தியானம் முக்கிய இடத்தை வகிக்கிறது.

யாழ்.நகரின் கரையோரக் கிராமங்களை உள்ளடக்கிய வீதிச் சிலுவைப்பாதைத் தியான நிகழ்வு 22 வருடங்களுக்கு மேலாக நடைபெற்று வருவது நோக்கத் தக்கது. பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் இருந்து மணியந்தோட்டம் கர்த்தர் ஆலயம் வரை இந்த வீதிச் சிலுவைப் பேரணி நடைபெறுகிறது.

தமிழ் மக்கள் பல்வேறு இழப்புக்கள், சோதனைகள், வேதனைகள், துன்பங்களை சுமந்த காலப் பகுதியான 1990 ஆம் ஆண்டு இந்த சிலுவை சுமந்த இயேசு வின் திரு உருவத்தை பேரணி யாக எடுத்துச் செல்லும் பக்தி முயற்சி ஆரம்பிக்கப்பட்டது. அருட்தந்தை பிரான்சிஸ் அடிகள் பாஷையூர் பங்குத் தந்தையாக இருந்தபோது உதவிப் பங்குத் தந்தையாக கட மையாற்றிய எவ்.எக்ஸ். கருணாரட்ணம் அடிகளாரின் முயற்சியில் 1990 ஆம் ஆண்டு தவக்காலத்தில் சிலுவைப் பேரணி தொடங்கப்பட்டது. வருடந்தோறும் தவக்காலத்தின் 6ஆவது வெள்ளிக்கிழமை மாலை பாஷையூரில் ஆரம்பிக்கும் சிலுவைப் பேரணி புனித புரம், மகேந்திரபுரம், எழிலூர், கொழும்புத்துறை, வசந்தபுரம், ஆகியகிராமங்கள் வழியாகச் சென்று சுமார் 3 கிலோமீற்றர் தூரத்திலுள்ள மணியந் தோட்டம் கர்த்தர் கோயிலைச் சென்றடைந்து திருப்பலியுடன் நிறைவு பெறும்.

பாஷையூர் புனித அந்தோனியர் ஆலயப் பங் குடன் இணைந்திருந்த கொழும்புத்துறை சூசையப்பர் ஆலயம், செபமாலை அன்னை ஆலயம், எழிலூர் வேளாங்கண்ணிமாதா ஆலயம், வசந்தபுரம் புனித யாகப்பர் ஆலயம், மணியந் தோட்டம் கர்த்தர் ஆலயம், உதயபுரம் புனிதபிலிப்பு நேகியார் ஆலயம் என்பவற்றின் கத்தோலிக்க மக்கள் இணைந்து இந்த தவக்கால பக்தி முயற்சியை நடத்தி வருகின்றனர்.

இந்த முயற்சியை ஆரம்பித்து வைத்த கருணாரட்ணம் அடிகளாரைத் தொடர்ந்து அருட்தந்தையர்களான செபமாலைதுரம், சாள்ஸ் கொலின், டேவிற், சி.ஜே. ஜெயக்குமார், யேசுரட்ணம், அஜாவிஸ், ஸ்ரலின் ஆகியோர்வழி நடத்தி வந்துள்ளனர்.

17 ஆண்டுகளுக்கு பின்னர் மணியந்தோட்டப் பகுதி மக்கள் மீளக் குடியமர்ந்ததையடுத்து கடந்த ஆண்டு முதல் மீண்டும் கர்த்தர் கோயிலுக்கு சிலுவைப் பாதைப் பேரணி செல்லத் தொடங்கியுள்ளது.

இந்த ஆண்டுக்கான சிலுவைப் பேரணி நிகழ்வு தவக்காலத்தின் 6 ஆம் வெள்ளிக் கிழமையான மார்ச்30 ஆம் திகதி மாலை நடைபெறவுள்ளது. தற்போதைய பங்குத் தந்தை அருட்திரு பேடி னண்ட் ஜோய் அடிகளார் இதற்கான ஏற்பாடுகளை மேற் கொண்டு வருகிறார்.

எஸ்.யேசுதாஸ்

# நீங்காத நினைவில் நான்காம் ஆண்டு





அமரர்
**கந்தையா மகாலிங்கம்**
**மலர்வு: 04.01.1933 உதிர்வு: 01.03.2008**

திருமதி
**புவனேஸ்வரி மகாலிங்கம்**
**மலர்வு: 09.01.1944 உதிர்வு: 30.03.2008**

*அப்பா, அம்மா நீங்கள் கூப்பிடும்*
*ஒலி கேட்கிறதே!*
*உங்கள் உடைகள்*
*எம்மை உருக்குகின்றதே!*
*நீங்கள் விரும்பிய உணவு*
*எமக்குக் கசக்குகிறதே!*
*உங்கள் பஞ்சணைகள்*
*எம்மை எரிக்கின்றதே!*



*நித்தமும் உங்கள் வதனங்கள்*
*எமது நெஞ்சத்தைத் தழுவுகின்றன!*
*ஆண்டு நான்கு ஆகியும்*
*நீங்கள் எங்களுடன் இருக்கும் பிரமை*
*ஆண்டவன் சித்தம் இதுவென்றால்*
*நாம் அதை வெல்ல முடியுமா?*
*இதுதான் வாழ்க்கை நியதியென*
*எண்ண முடியவில்லையே அப்பா, அம்மா.*

**உங்கள் ஆத்மா சாந்திபெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.**
**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

இல. 148, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

பாசத்துடன்: **பிள்ளைகள்,**
அன்புடன்: **மருமக்கள்,**
கொஞ்சிக்குலாவும்: **பேரப்பிள்ளைகள்.**

(C242) (6-7-10)

## A/L வரலாறு - 2011 பெறுபேறு

[illegible]

| பெயர் | பெறு பேறு | வரலாறு | பெயர் | பெறு பேறு | வரலாறு |
|---|---|---|---|---|---|
| இ. ஆன் அச்சனா மா. நி. 01 முல்லை. | 3A | A | க. சரணியா | ABC | A |
| ஸ்ரீ..சம்ஷிகா மா. நி. 36 யாழ். | 3A | A | சசிகலா | ABC | A |
| கே. ஜஸ்மியா மா. நி. 48 யாழ். | 2AB | A | தே. பவிராஜ் | 3A | A |
| க. மதிவதனி மா. நி. 49 யாழ். | 3A | A | சி. விஜிதா | ABC | A |
| த. தாரணி | 2AB | A | க. பிரியங்கனா | 2AC | A |
| இலக்கியா | 2AB | A | அ. தேனுஷா | ABC | A |
| ம. பிரிந்தா | 2AB | A | விஜயராஜ் | 2AB | A |
| வ. கௌசிகா | A2C | A | வ.நிரோஜன் | 2AB | A |
| க. கோபிகா | ABC | A | ப. லக்சிகா | ABC | A |
| இ. கோபிகா | 2AB | A | அ. நிரோஜன் | A2C | A |
| க. கோபிதா | 2AB | A | சாளினி | ACS | A |
| சு. ரிஷிகா | 2AB | A | சி. கௌசிகன் | ACS | A |
| சிவராஜினி | ABC | A | சி. சியாமளா | A2C | A |
| இந்திராணி | ABC | A | எஸ். அச்சுதன் | ABC | A |
| சி. ஆதவன் | ABC | A | சி. கார்த்திகா | A2C | A |
| அ. ஆஷா | 2AC | A | ந.. சாரங்கா | A2C | A |
| கிருஷாளினி | A2B | A | க. கமல்ராஜ் | A2C | A |
| நிஷாந்தினி | 3A | A | பி. பார்த்தீபன் | ABC | A |
| பா. சரண்யாதேவி | 2AB | A | சி. தங்கநாயகி | A2C | A |
| | | | ஆ.நிஸாந்தினி | A2S | A |

100 % சித்தி 50 இற்கு மேற்பட்டோர் B சித்தி பெற்றுள்ளனர்.
யாழ். முன்னணி வரலாற்று ஆசிரியர்: M, பத்மன் M.A (History)

D. M. I யாழ்ப்பாணம். | Bitsman மானிப்பாய். | உயர்கலைக் கல்லூரி குளப்பிட்டி சந்தி.

(16150) (45.6.7)

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 17.03.2012 சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குலவிளக்கு

**அமரர் இரத்தினம் பஞ்சாபிகேசன்**

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 01.04.2012 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற விருப்பதால் தாங்களும் இந்த நிகழ்வில் கலந்து தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். (தயவு செய்து இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

"முருகபூபதி",
சங்கம் வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி.

நாதஸ்வர வித்துவான்
கலாநிதி கே.எம்.பஞ்சாபிகேசனும்,
குடும்பத்தினரும்.

(இ/237)(2-6-7)


YAMAHA

காட்சியறை திறப்பு விழா
30.03.2012



அனைத்து வகையான
'YAMAHA' அசல் உதிரிப்பாகங்களையும்
(GENUINE SPARE PARTS)
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்

★ லீசிங் வசதி செய்து தரப்படும்
★ இலவச ஜக்கட் ★ 03 இலவச சேவை

02 வருடம் / 30000 K.M ற்கான உத்தரவாதம்

டிஜிட்டல் எலக்ரோனிக்ஸ்
62/16, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
021-2224040

(C\238) (6,7,10)


# வலுவிழந்த பிள்ளைகளுக்கு உதவிப் பொருள்

சாவகச்சேரி, மார்ச் 30

தென்மராட்சி பிரதேசத்தில் வதியும் மனவளர்ச்சி குன்றிய பிள்ளைகள், வலுவிழந்த பிள்ளைகள் ஆகியோருக்கு உதவிப் பொருள்கள் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 6 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு அறவழி நிலையத்தில் இடம்பெறும்.

நிலையத்தின் முன்னாள் தலைவர் வி.எஸ்.துரைராஜாவின் அனுசரணையுடன் இந்த உதவிப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன. (ஒ-9)

# 'மூன்றாவது கை' வெளியீடு

சாவகச்சேரி, மார்ச் 30

வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினர் 'மூன்றாவது கை' என்னும் சஞ்சிகையை அண்மையில் வெளியிட்டுள்ளனர்.

சஞ்சிகையில் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள், செயற்திட்டங்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் ஆக்கங்களும் பிரசுரமாகியுள்ளன.

இந்த சஞ்சிகை திணைக்களத்தின் மூன்றாவது பதிப்பாக வெளிவந்துள்ளது. (ஒ-9)

# தவறி வீழ்ந்து கட்டடத் தொழிலாளர் காயம்

சாவகச்சேரி, மார்ச் 30

சாவகச்சேரி பகுதியில் கட்டடப் பணிக்கென தென்னிலங்கையில் இருந்து வந்த கட்டடத் தொழிலாளர்கள் உயரமான இடங்களில் இருந்து தவறி வீழ்ந்து காயமடைந்தனர். இந்தச் சம்பவங்கள் நேற்று இடம் பெற்றன.

வெவ்வேறு இடங்களில் உயரமான கட்டடங்களில் இருந்து வீழ்ந்ததில் காதில் இரத்தம் வழிந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர்கள் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

கொழும்பு கதிரேசன் வீதியைச் சேர்ந்த கம்புஹாலிகே புஞ்சிபண்டார (வயது-42), காலி எல்பிட்டியை வைச் சேர்ந்த ரஞ்சித் பெரேரா (வயது - 41) ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவர். (ஒ-9)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்று (30.03.2012) றுகுணு பல்கலைக்கழகத்தில் இடம்பெறும் பட்டமளிப்பு விழாவில் விஞ்ஞானமாணி பட்டம் பெறும்

செல்வன்
குட்டித்தம்பி குணாளன்
B.Sc(Fmst.Spe) அவர்களை

இமையாணன் சிறிமுருகப் பெருமான் அருள் பெற்று மேலும் பட்டங்கள் பெற்று சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றோம்.

அன்புடன் வாழ்த்தும்.
ஆசையப்பா– ஆசையம்மா (கோபாலகிருஷ்ணன்)
அண்ணாமார் – (சாந்தன்,ருசி, அனு)
அண்ணி,அக்கா, தங்கைமார் (பிரியா,மகிழ்),தம்பி(புவி),பெறாமக்கள் (கிசானன், அபிசாந்)

செல்விவளவு.
இமையாணன்கிழக்கு.
உடுப்பிட்டி.

(6,7,12)

## A/L வர்த்தகப்பிரிவு - 2014
## புதிய பிரிவுகள் ஆரம்பம்

2012.03.30 பி.ப. 4 மணி
2012.04.01 காலை 8 மணி
திகதிகளில் எந்தப்பிரிவிலும் இணைந்து கொள்ளலாம்

★. கடந்தகாலப் பரீட்சைகளில் சிறந்த பெறுபேற்றுக்கு வழிகாட்டிய ஆசிரியர் குழு
ஆனைப்பந்திக் கல்லூரி (M.Tec)
டிப்போ சந்தி, அருகில் A -9 வீதி,கிளிநொச்சி

## மரண அறிவித்தல்

### *செல்லத்துரை மதியாபரணம் (மதி)*



தாவடி தெற்கு, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை மதியாபரணம் (மதி) 27.03.2012 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை - கண்மணி தம்பதியரின் புதல்வனும் காலஞ்சென்ற நாகப்பு - செல்லம்மா தம்பதியரின் மருமகனும், பத்மலீலாவதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தங்கம்மா மற்றும் விஜயரட்ணம், சரஸ்வதி, பத்மாவதி, மணிமேகலா ஆகியோரின் அன்புச் சகோதரனும், அகிலா (லண்டன்), பவித்திரா, பவிகரன் (லண்டன்), சுஜிதா (கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவகுமார் (லண்டன்), செந்தில்ராஜ் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.03.2012) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 2 மணிக்கு தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தாவடி தெற்கு,
கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

## கிளிநொச்சி மாவட்ட வர்த்தகர்களுக்கான அறிவித்தல்
### கிளிநொச்சி மாவட்ட வணிக, கைத்தொழில், வேளாண் ஒன்றியம்
### Kilinochchi District Chamber of Commerce, Industry & Agriculture

மேற்படி கிளிநொச்சி மாவட்ட வணிக. கைத்தொழில், வேளாண் ஒன்றியத்தின் நடவடிக்கைகள் (I. L.O. LEEDS) நிறுவன அனுசரணையுடன் இல. 57, புகையிரத நிலைய வீதி, கிளிநொச்சியில் 20.09.2011 ஆம் திகதி தொடக்கம் மீண்டும் ஆரம்பமாகி முழு உத்வேகத்துடன் செயலாற்றிக் கொண்டு வருகின்றது.

மேற்படி ஒன்றியம் அங்கத்தவர்களது தேவைகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றது என்பதனைத் தயவுடன் அறியத்தருகின்றோம்.

21.02.2012 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரின் தலைமையில் மாவட்ட தொழில் முயற்சி சபை (District Enterprise Forum) உருவாக்கப்பட்டது.

28.03.2012ஆம் திகதி (USAID) நிறுவனத்தினர் கிளிநொச்சி மாவட்டத்தில் வேலைவாய்ப்பை கூட்டுவதற்கான தொழில் முயற்சிகளுக்கு அனுசரணை வழங்குவதற்கான விவரங்களை திரட்டுவதற்காகத் எமது ஒன்றியத்தில் சந்திப்பு ஒன்றினை நடத்தியுள்ளனர். இது சம்பந்தமான விவரங்களை எமது அலுவலகத்தில் நேரடியாகவோ அல்லது தொலைபேசி இலக்கம் 021 228 5601 மூலமாகவோ அறிந்துகொள்ளலாம்.

அங்கத்தவர்கள் தங்களது 2012 ஆம் ஆண்டுகான சந்தாப் பணத்தினை (ரூபா 1000.00) செலுத்துமாறு அன்புடன் கேட்டுக்கொள்வதுடன் இதுவரை அங்கத்தவர்களாக சேராதவர்கள் எமது வணிக ஒன்றியத்தில் இணைந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.


சி. நவரத்தினராஜா
செயலாளர்

(C/245) (6,7,45)

## ஆஸ்திரேலியா 5 வருட குடும்ப விசா
## லண்டன், சுவிஸ், பிரான்ஸ் விசா

இலவச சட்ட ஆலோசனைகளுக்கு......

வாரத்தில் எல்லா நாள்களும் (சனி, ஞாயிறு, பொதுவிடுமுறை நாள்களும்) திறந்திருக்கும்.



**திசைகாட்டி பிறைவேற் லிமிட்டெட்**
**முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்**

**தலைமைக் காரியாலயம்**
37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
021 2219016, 075 6574136

115A, இரத்தினபுரம் வீதி, கிளிநொச்சி.
021 2285544

மெல்பேர்ன் ஆஸ்திரேலியா.
0061 390437100

231/3, மகேஸ்வரி வீதி,
கொழும்பு - 06,
011 2366925 (16215)(6-7-8)


## சிறப்புச் சொற்பொழிவு

வடமராட்சி, மார்ச் 30

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் தமிழ் நாடு, மதுரையைச் சேர்ந்த சுவாமி சிவயோகனந்தாவின் சிறப்புச் சொற்பொழிவு இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

தவத்திரு வே.முருகேசு சுவாமிகளின் குருபூசையைத் தொடர்ந்து முற்பகல் 10.30 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தின் கலை பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த வெளியீடான ''ஞானச்சுடர்'' ஆன்மிக சஞ்சிகையின் பங்குனி மாத இதழ் வெளியீட்டு விழா நடைபெறும்.

இந்த விழாவில் இளைப்பாறிய அதிபர் வ.கணேசமூர்த்தி வெளியீட்டுரையை நிகழ்த்துவார். மதிப்பீட்டுரையை ஆசிரியர் பி.அருளானந்தன் நிகழ்த்துவார்.

அதனைத் தொடர்ந்து மதுரையில் இருந்து வந்த சுவாமி சிவயோகனந்தாவின் சொற்பொழிவு இடம்பெறும். (ஒ-8)

## சேவை நயப்பு பாராட்டு விழா

30.03.2012



### உயர் திரு கார்த்திகேசு ராமஜயம்

(B.Dev.s ,PGD In Ed,M.A)

கல்வி:
1. ஆரம்பக்கல்வி - யா/கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயம்
2. இடைநிலைக்கல்வி - யா/கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி
3. உயர்நிலைக்கல்வி - யா/நெல்லியடி ம.ம.வி
4. பட்டப்படிப்பு - கொழும்பு பல்கலைக்கழகம்
5. பட்டப் பின் படிப்பு - யாழ். பல்கலைக்கழகம்
6. முதுகலைமாணிப் பட்டம் யாழ்.பல்கலைக்கழகம்

சேவை விவரம்
1. ஆசிரியர் - கிளி/இந்துக் கல்லூரி(09.01.1979 - 30.06.1983)
2. ஆசிரியர் - கிளி/ மத்திய கல்லூரி (01.07.1983 - 30.01.1985)
3. ஆசிரியர் - கிளி/ இயக்கச்சி அ.த.க.பா(01.02.1985 - 17.05.1987)
4. ஆசிரியர் - பகுதித்தலைவர் ,பிரதி அதிபர் - யா/நெல்லியடி ம.ம.வி (18.05.1987 - 18.04.2008)
5. அதிபர் - யா/தம்பசிட்டி மெ.மி.த.க.பா(19.04.2008 - 30.03.2012)

எமது பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றி தனது அறுபதாவது அகவையில் ஓய்வு பெற்றுச் செல்லும் உயர்திரு கார்த்திகேசு ராமஜயம் தனது ஓய்வுக் காலத்தில் என்றும் போல் உள மகிழ்வுடன் நலம் பல பெற்று பல்லாண்டு காலம் வாழ இறையருளை வேண்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
உபஅதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

யா/தம்பசிட்டி மெ.மி.த.க. பாடசாலை (6-7-12)

யாழ்/பன்னாலை சேர்.கனகசபை வித்தியாலயம், தெல்லிப்பழை.

### 157 ஆவது ஆண்டு நிறைவும், மண்டபத் திறப்பு விழாவும், பரிசளிப்பு வைபவமும், "கனகதாரா" நூல் வெளியீடும்.

காலம் : 31.03.2012 (சனிக்கிழமை) காலை 9.00 மணி
தலைவர் : திரு. சி. சிவராஜன் (அதிபர்)
ஆசியுரை : சிவாகம கிரியாரத்தினம் பிரம்மஸ்ரீ கு. நகுலேஸ்வரக்குருக்கள் J.P -பழைய மாணவன்-

நிகழ்வு-I
**கதிர்காமத்தம்பி மண்டபத்திறப்பு வைபவம்**
பிரதம விருந்தினர்:
கௌரவ அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா அவர்கள்
(பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அமைச்சர்)
சிறப்பு விருந்தினர்:
திருமதி லக்ஷி அபேயசேகர (சேவாலங்கா, உபதலைவர்)

நிகழ்வு - II
**வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்ட பொன்னையா கலையரங்கு திறப்பு விழா.**
நேரம்: காலை 9.15
பிரதம விருந்தினர்:
திருமதி இமெல்டா சுகுமார் அவர்கள்
(அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்)
சிறப்பு விருந்தினர்:
உயர்திரு க. ஸ்ரீமோகனன் (பிரதேச செயலர், வலி. வடக்கு)

நிகழ்வு : III
**கணினி கூடம் திறந்து வைத்தல்**
நேரம் : காலை 9.30
பிரதம விருந்தினர்:
உயர்திரு ப. விக்னேஸ்வரன் அவர்கள்
(மாகாணக்கல்விப் பணிப்பாளர், வடக்கு மாகாணம்)
சிறப்பு விருந்தினர்:
உயர்திரு ச. கைலாசநாதன் அவர்கள்
(பிரதிக் கல்விப் பணிப்பாளர், மாணவர்கள் கல்வி அபிவிருத்தி, வலிகாமம் கல்வி வலயம்)

நிகழ்வு - IV
**மைதான பார்வையாளர் கூடம் திறந்து வைத்தல்**
நேரம் : காலை 9.45
பிரதம விருந்தினர்:
உயர்திரு இ.இராஜேந்திரன் அவர்கள்
(வலயக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம்)
சிறப்பு விருந்தினர்:
உயர்திரு சு.முரளிதரன் அவர்கள்
(பிரதேச செயலர், வலி தென்மேற்கு)

நிகழ்வு : V
**பரிசளிப்பு விழாவும் கனகதாரா மலர் வெளியீடும்**
நேரம் : மு.ப 10.00
பிரதம விருந்தினர்:
உயர்திரு ப. விக்னேஸ்வரன் அவர்கள்
சிறப்பு விருந்தினர்:
உயர்திரு முத்து இராதாகிருஷ்ணன் அவர்கள்
(மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர், வடக்கு மாகாணம்)
கௌரவ விருந்தினர்கள்:
தொண்டர் திலகம் வ.இ.இராமநாதன் (இலண்டன் -பழைய மாணவர்)
உயர்திரு N.P. ஸ்ரீஸ்கந்தராஜா அவர்கள்
(ஓய்வுபெற்ற தொடர்பாடல் அதிகாரி, இரத்மலானை விமான நிலையம்)
(கதிர்காமத்தம்பி அதிபரின் குடும்ப உறுப்பினர்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம்.
(C204) (6,9,10)

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**சட்டநாதர் சிதம்பரம் (காஞ்சனா)**

மலர்வு
18 ★ 09★ 1935

உதிர்வு
24 ★ 03★ 2007

அம்மா! ஆண்டு ஐந்து சென்றாலும் உங்கள் இழப்பை
எங்களால் தாங்கமுடியவில்லையே!
நீங்கள் எங்களுக்குக் கூறிய அன்பு மொழிக்கு இணங்க
உங்கள் பிள்ளைகள், குடும்பம்
சிந்தாமல் சிதறாமல் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம்
இன்னும் எம்மை வாழவைக்க வேண்டுமென எல்லாம் வல்ல
இறைவனை வேண்டுவதோடு உங்கள் ஆத்மா சாந்தியடைய
மணற்காட்டுக் கந்தனைத் தினமும்
வேண்டி அவன் பாதம் பணிகின்றோம்.

- சட்டநாதர் (கணவர்),
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

ஆறுமுகம் வீதி,
கந்தரோடை, சுன்னாகம்.
(சி/229) (2-6-7)

இன்று ஓர் ...........
## "கல்வாரிக் களம்"

அது!
சாவகச்சேரி கச்சாய் வீதி. புனித லிகோரியார் ஆலய பங்கு மக்களின் தயாரிப்பில்.
பிரமாண்டமான மேடை நவீன ஒலி, ஒளி அமைப்பில். இரவு 7 மணிக்கு , ஆலய வளாகத்தில்.

மேடை,
மேடை அலங்காரம்
ஒப்பனை, ஒலி, ஒளி } சாள்ஸ் மீசாலை

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

பங்குத்தந்தையும்.
பங்குமக்களும்.
(16214 (6 ,7,12)

## மனமார்ந்த நன்றிகள்



நீதிமன்ற வீதி, மல்லாகத்திலுள்ள எனது வீட்டை 28.03.2012 ஆம் தினத்தன்று வரையும் நல்லமுறையில் பராமரித்து வந்த ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளரும் அமைச்சருமான கௌரவ K.N.டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கும், யாழ்.மாவட்ட அமைப்பாளர் கமல் தோழர் அவர்களுக்கும் வலி.வடக்கு அமைப்பாளர் அன்புத் தோழர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

- வீட்டு உரிமையாளர்.


## BITSMANS
கல்வி நிறுவனம் **A/L 2014** மானிப்பாய்

★.கலை ★.வர்த்தகம் ★. கணிதம் ★. உயிரியல்

வகுப்புக்கள் ஆரம்பம் (31.03.2012) சனி 3.00 P.M

| கலைப்பிரிவு | |
|---|---|
| ✱. தமிழ் - N.பாலா | ✱. வரலாறு -M.பத்மன் |
| ✱. நாடக அரங்கியலும் - மங்களேஸ் | ✱. புவியியல் - N.பாபு |
| ✱. இந்துநாகரிகம் - S.ஜெயக்குமார் | ✱. கிறிஸ்தவம் - திருமதி மல்லிகா |
| ✱. அளவையியல் -E.S. பவான் | ✱. அரசியல் - நிகேஷ் |
| **வர்த்தகப்பிரிவு** | **கணித , உயிரியல் பிரிவு** |
| ✱. பொருளியல் - S.S. சிறி | ✱.பௌதிகம் - V.பார்த்தீபன் |
| ✱. கணக்கீடு - N.ராஜன் | ✱. இரசாயனம் - T.சிவகுமார் |
| ✱. வணிகக்கல்வி - ரூபன் | ✱. இணைந்த கணிதம் - S. பிரதீபன் |

## PATRICIAN INSTITUTES

பற்றிஷன் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்
புதிய பயிற்சி நெறிகள் ஆரம்பமாகின்றன

**ஆரம்பம் : 02.04.2012**

- ✱ COMPUTER COURSES (கணினி பயிற்சிநெறி)
- ✱ CERTIFICATE COURSES
- ✱ Short Hand Typing (English) சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (ஆங்கிலம்) கணினி மூலம் தட்டெழுத்து பயிற்சி அளிக்கப்படும்.
- ✱ Short Hand Typing (Tamil) சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (தமிழ்)
- ✱ கணினி மூலம் தட்டெழுத்து பயிற்சி அளிக்கப்படும்.
- ✱ Sewing (தையல்)
- ✱ General Moto Mechanism (மோட்டார் வாகனம் திருத்தல்)
- ✱ General Electrician (ஜெனரல் எலக்ரீஸன்)
- ✱ Lathe Machine Operation (கடைச்சல் இயந்திரப் பயிற்சி)
- ✱ Arc Welding (மின் ஒட்டுநர் பயிற்சி)
- ✱ Carpentry (மரவேலை)
- ✱ Refrigeration and Air conditioning (குளிர்சாதனப் பெட்டி திருத்துதல்)

குறிப்பு:
1. பயிற்சிக் கட்டணம் தவணை முறையில் செலுத்தலாம்
2. வன்செயலால் பாதிக்கப்பட்ட அல்லது வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர்கள் பயிற்சிக்கட்டணத்தில் சலுகைகள் பெறலாம்.
3. பயிற்சி நெறிகள் சம்பந்தமான சகல விவரங்களையும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விவரங்களுக்கு:

Registrar,
61 (59), St. Patrick's Road, Jaffna.
T.P:0212226148, Fax:0212226148.
Email:Spitee@sltnet.lk.

# சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 30

கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் அண்மையில் வெளியாகின.

இதன் அடிப்படையில் பாடசாலை அதிபர்கள் அனுப்பி வைத்த மாணவரின் பரீட்சை பெறுபேறுகள் வருமாறு.

**வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி**

ஆங்கில மொழி மூலம்

பாலமுரளி கிருஷ்ணா அற்புதநாதன் 9 ஏ, ராகுலன் சிவஞானம் 6ஏ 3 பி, அபிராமி பாலச்சந்திரன் 6ஏ 2பி, நிரோஜன் சிவநாதன் 6ஏ 2பி சி, நர்மதா நாகராஜன்5ஏ பி 3சி, சஜானா சிவசுந்தரராஜா 4ஏ 2பி 2சி, அபர்ணா தங்கராசா 4ஏ2பி 2சி எஸ், சாஹித்தியன் நகுலராஜா 4ஏ பி 2சி 2 எஸ், தேனுகா வடிவேல் 3ஏ 3பி 2சி எஸ், வினோஜா இராசலிங்கம் 3ஏ 2பி 3சி எஸ், ரஞ்சினி சுந்தரமூர்த்தி 3ஏ பி 5சி, தனேசினி சுந்தரலிங்கம் 3ஏ பி 3சி எஸ்.

தமிழ்மொழி மூலம்

பிரபு மனோகரன் 9ஏ, வைஷ்ணவன் புஸ்பகுமார் 9ஏ, ஆதர்ஷனா துரைராஜா 9ஏ, காயத்திரி ரவீந்திரன் 9 ஏ, தர்ஷன் பாலசிங்கம் 8ஏ பி, டொனுர்கன்ஸ் ஆனந்தராசா 8ஏ 1 சி, ஜதுர்ஷனா பாஸ்கரன் 6ஏ 2பி சி, லிங்கராஜ் சௌந்தராஜா 6ஏ 2பி சி, சிவரூபன் பூலோக நாதன் 5ஏ 4பி, சிந்துராஜன் பத்மநாதன் 5 ஏ 3பி சி, அபிகஜன் இராசேந்திரன் 5ஏ பி 2சி எஸ், சாரங்கன் கோபிதாசன் 4ஏ 3பி 2சி, சிவப்பிரியா அசோகன் 4ஏ பி 2சி 2 எஸ், ஹீர்த்தனன் ஹரிச்சந்திரன் 4ஏ 5 சி, பிருந்தாபன் புவனேந்திரன் 4ஏ 3பி சி, கணேச குமரன் ராஜராஜன் 3ஏ 5பி சி, சுபாங்கன் சுபேந்திரன் 3ஏ 4பி 2சி, அனோ தேவராசா 3 ஏ 4பி 2சி, சுதாகரன் கதிர்காமநாதன் 3ஏ 3பி 3சி, ஹில்ரன் ஜோன்பப்ரிஸ்ற் 3ஏ 3பி 2சி எஸ், சுலக்ஷனா சுந்தரராஜா 3ஏ 3பி 2சி எஸ், சர்மினி இராமச்சந்திரன் 3ஏ 2பி 3சி எஸ், இவன்ஜலின் ஆனந்தசிங்க 3ஏ 2பி 2சி 2எஸ்.

**இடைக்காடு மகாவித்தியாலயம்**

ஆங்கில மொழி மூலம்

க.தர்ஷிகா 7ஏ,2பி, ந.கயேந்திரன் 2ஏ,4சி,3எஸ், ம.கிரிசாந் ஏ,4பி,3சி,எஸ், க.சிவதர்சன் ஏ,3பி,5சி,

தமிழ் மொழி மூலம்

ச.சதிஸ்ஜா 6ஏ,பி,சி, எஸ், இ.கயேந்திரன் 5ஏ,3பி, எஸ், பூ.துஷாந் 3ஏ,2பி,4சி, கு.பங்கயன் 2ஏ,3பி,2சி,எஸ்,

**சில்லாலை றோ. க. த.க.பாடசாலை**

அ.மேரிமெல்சியா 7ஏ, 2சி, யோ.பி.டண்ஸ்ரன் ஜெயக்குமார் 2ஏ,3பி,4சி, இ.அனிற்றா 2ஏ,பி,5சி, சா.சூரியா 2ஏ,பி,4சி,எஸ், த.தர்சிகன் ஏ,3சி,4எஸ், கு.கௌசலா ஏ,பி,4சி,எஸ்.

**சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி**

க.சுகிதரன் 7ஏ,2பி, ஜெ.ஹரிதாஸ் 6ஏ,2பி,சி, வீ.குணபரன் 6ஏ,2பி,சி, ச.லவன் 5ஏ,2பி,2சி, சி.டிலுக்சன் 5ஏ,2பி,சி,எஸ், ப.விதுர்சன் 5ஏ,2பி,சி,எஸ், ம.குவேந்திரன் 5ஏ,3சி, த.டபிசன் 4ஏ,3பி,சி,எஸ், சி.மோகனராசா 3ஏ,3பி,2சி,எஸ், அ.பிருந்தா 3ஏ,3பி,2சி,எஸ், ந.சிறீதகன் 3ஏ,2பி,சி,3எஸ், ற.டிலக்சன் 3ஏ,பி,4சி,எஸ், மு.துவாரகா 3ஏ,பி,3சி,2எஸ், இ.கீர்த்திகா 3ஏ,பி,4சி,எஸ்.

**யாழ்.மத்திய கல்லூரி**

ச.சாமுவேல் 9ஏ, சூ.கோபிநாத் 8ஏ,சி, உ.கிருசாந் 7ஏ,2பி, வி.பிரசாந் 7ஏ,பி,சி, ப.ஸ்ரீபன் 7ஏ,பி,எஸ், க.யதுசன் 7ஏ,பி,எஸ், ச.கஜரூபன் 6ஏ,2பி,சி, சி.கபில்சன் 6ஏ, பி,சி, க.சன்சயன் 5ஏ,3பி,சி, வே.கவுத்யமன் 5ஏ,2பி,2சி, பா.விதுஷன் 5ஏ,3சி,எஸ், உ.சண்ஜீத் 5ஏ,2பி,2சி, க.ஜனகீசன் 5ஏ,பி,2சி,எஸ், ந.ஜனுசன் 4ஏ,3பி,2எஸ், ற.விவிதிசாந்தன் 4ஏ,3பி,2எஸ், ற.வீரேஸ்வரநானந்தர் 4ஏ,4பி,சி, பி.யேசுநேசன் 4ஏ,3பி,சி,எஸ், வி.குருநாதன் 4ஏ,5பி, உ.நதீஸன் 4ஏ,2பி,2எஸ்.

**அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்**

மு.வாகீசன் 5ஏ,2பி, சி.எஸ், கு.லக்சிகா 5ஏ,பி,சி, 2எஸ், த.கோமதி 4ஏ,2பி, 2சி,எஸ், வ.இந்துசன் 4ஏ,2பி,2சி, ம.கோகுலன் 3ஏ,பி,4எஸ், த.கயானி 3ஏ,2பி,3சி, இ.கிருஷாயினி 3ஏ,பி,2சி,2எஸ், வ.கஸ்தூரி 2ஏ,பி,3சி,2எஸ்.

**இராமநாதன் / இறம்பைக் குளம் மகளிர் கல்லூரி**

9ஏ

ஆன்.விபூஜா விக்கிரமசிங்கம், கிஷோபிகா யோகலிங்கம், குலராஜினி சந்திரன், மதுர்சனா அம்பிகைபாகன், பிருந்திகா அமிர்தலிங்கம், பியன் சியா இளங்கோ, சயந்தி சிவசிதம்பரம், சாமின் டனியலா ஜேம்ஸ், சிந்துர்க்கா சத்தியநாதன், தினார்த்திகா திருப்பதி, ரட்ணப்பிரியா கனகரட்ணம்.

8ஏ

டில்ரூபா வில்வராசா, கஜானி சிறிஸ்கந்தராஜா, மயூரி சுப்பிரமணியம், சஜித்தா கௌரிநாதன், சஜிக்கா கௌரிநாதன், வைஷாலி சிவராஜசிங்கம், சாருகாசினி கெங்காதரன்.

7ஏ

யுதர்சனா யுகேந்திரன், நிஷாந்தினி சிவராசா, திருமகள் நவசீலன், இந்து ஜெயராஜசிங்கம், துவாரகா யோகலிங்கம், ஷாயகி பரமலிங்கம், சாகித்தியா சதீஸ்குமார்.

6ஏ

பிரம்மியா சந்திரகுமார், எக்ஸ்சிபா பிரியங்கா பாலச்சந்திரன், கௌசிகா சுபதரன், றதிரா ஆர்ஜினி பாக்கியநாதன், விதுஷா ரவீந்திரன்.

5ஏ

கம்ஷா சுதாகர், மதுரா பத்மநாதன், சிவகௌரி சிவபாதசுந்தரலிங்கம், நிஷாமினி சுந்தரமூர்த்தி, தாமிரா பத்மரஞ்சன்.

4ஏ

ஆன் நிரஞ்சனி விக்ரர் கிருபாகரன், கனிஷா பன்னீர்ச்செல்வம், பிராமினி சிவகணேசலிங்கம், வர்மினி பொன்குமரன், கோவர்த்தனா ஸ்ரீதர், சதுஸ்திகா மன்மதராஜா.

3ஏ

கார்த்திகா வைத்தீஸ்வரன், சங்கவி தேவராஜா, சங்கீதா பாலசிங்கம், சிந்துயா பாஸ்கரன், கௌசலா ராசலிங்கம், வர்ணிகா சண்முகநாதன், டிலுக்ஷிகா அருளானந்தம், ஹம்சிகா ஸ்ரீதரன், தட்சாயினி பாலகிருஷ்ணன், திவ்வியப்பிரியா தவராசா, கீர்த்தனா புவனேந்திரன், அபிராமி அமிர்தலிங்கம், கிருஷானி சந்திரபோஸ், கௌசிகா சிவசாமி, மரின் விதுர்ஷிகா கோமதாஸ், தனுஸ்ரிகா லோகேஸ்வரன்.

**வல்வை சிவகுரு வித்தியாசாலை**

பிறேமச்சந்திரன் ஜோதிகா 8ஏ சி, கனகராஜா லாவண்ணியா 4 ஏ 4பி சி, இந்திரதாஸ் தமிழ்நிலா 4ஏ 2பி 2சி எஸ், பாபு திலீபன் 4ஏ 3பி சி, சிறீதரன் சிறீகிருஸ்ணன் ஏ பி 3சி 3எஸ், சிவனேஸ்வரன் அச்சுதன் ஏ பி 2சி 4எஸ், பத்மநாதன் கஜந்தன் ஏ பி 3சி 2எஸ், குகராசா திவாகர் ஏ பி சி 3எஸ், இரத்தினலிங்கம் யுகதீபன் ஏ பி சி 3எஸ், இரத்தினகுமார் லக்ஸ்மன் ஏ 2சி 4 எஸ், கணேசலிங்கம் அருண் பி 3சி 4எஸ், சங்கரசிவா யசிந்தா ஏ 2சி 3 எஸ்.

**வரணி மகா வித்தியாலயம்**

சின்னத்தம்பி சுகன்ஜா 9 ஏ, இராசகுலேந்திரபிள்ளை கீர்த்தனா 8 ஏபி, அம்பிகாநிதி கார்த்திகா 8ஏ சி, இலங்கேஸ்வரன் கவிதானந் 7ஏ 2பி , கந்தையா ஜனகராஜ் 7 ஏ பி சி.

நற்குணம் விஷ்ணுசாம் 6 ஏ பி சி எஸ், ரமேஸ்வரன் றஜிதரன் 5 ஏ 3பி, இரத்தினேஸ்வரன் அஜந்தன் 5ஏ 2பி சி எஸ், ஸ்ரீராமராவ் கிருஜந்தன் 4ஏ 2பி சி 2எஸ், சிவராசா நிதர்ஷன் 4ஏ பி 3சி, அருணாசலம் டிலக்ஸன் 4ஏ பி 2சி எஸ், நவரத்தினம் தர்சிகா 4ஏ பி 3சி எஸ்.

(வ-9)

---

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா

**நாளை**

பங்குனி 18 சனிக்கிழமை 31.03.2012
திதி: அட்டமி சித்தம் மு.ப 09.34 வரை
நட்சத்திரம்: புநர்பூசம் பி.இ 05.08 வரை
சுபநேரம்: 03.11- 04.41 வரை
ராகு காலம்: 09.11-10.41 வரை

**மேடம்:** புதிய வரவுகளால் கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர்களின் மனஸ்தாபங்களுக்கு ஆள்படாமல் இருக்க அவர்கள் கேட்ட உதவிகளைச் செய்வீர்கள். உத்தியோகத்தர்களுக்கு மேல் அதிகாரிகளிடம் வாக்குவாதங்களைத் தவிர்க்க வேண்டும். காலை முதல் மாலை வரை அடுக்கடுக்காக பல வேலைகளைத் திட்டமிட்டு செய்வீர்கள்.

**இடபம்:** தெய்வ அருளால் சில காரியங்கள் நடந்ததாகக் கூறி பெருமை கொள்வீர்கள். சக ஊழியர்கள், குடும்பத்தினருடன் வாக்குவாதங்களில் ஈடுபட வேண்டாம். எந்த வேலையையும் மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே செய்வது நன்மை தரும். மனைவி வழியில் திடீர் செலவுகளைச் சந்திக்கலாம். மறதியால் அவதிகளுக்கு ஆளாகலாம்.

**மிதுனம்:** சிரமம் இல்லாமல் இருந்த இடத்தில் இருந்தே காரியங்களைச் சாதித்துக் கொள்ளும் நாள். கணவன், மனைவி இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் விலகி பாசம் அதிகரிக்கும். அரசு தொடர்பான காரியங்களில் அலைச்சல் இருக்குமே அன்றி, ஆதாயம் கிடைப்பது கடினம். புதிய தொழில் ஒப்பந்தங்களை மேற்கொள்ள முற்படுவீர்கள்.

**கடகம்:** பெண்கள் வழியில் சந்தோஷம் தரும் செய்தியைக் கேட்கலாம். இருக்கும் பணத்தை ஆடம்பரமாகச் செலவு செய்து விட்டு, பின்னர் கவலை அடைவீர்கள். வேலையில் கடுமை காணப்படும். சிலரை சந்திக்க முற்பட்டு அது முடியாமல் போகலாம். இழுபறிகள் நேரும்.

**சிங்கம்:** எந்தக் காரியத்தையும் குழப்பம் இல்லாமல் தெளிவாக செய்து முடிப்பீர்கள். நண்பர்கள் மத்தியில் உங்களின் மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். சகோதரர்கள் தொடர்பான விடயங்களில் நினைத்தது நடப்பது கடினமே. லாபகரமான பணவரவுகளுக்கு வாய்ப்பு உண்டு. சக ஊழியர் ஒருவரின் மூலம் புதிய நண்பர் அறிமுகம் கிடைக்கும்.

**கன்னி:** நிதி நிலைமையில் முன்னேற்றம் காணும் நாள். தொழில் ரீதியாக ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் விலகுவர். பெண்கள் வகையில் அனுகூலமான உதவிகள் கிடைக்கலாம். உங்களை முன்னர் விமர்சித்த ஒருவர் இன்று பாராட்டலாம். குடும்பத்தில் சந்தோஷம், குதூகலம் அதிகரிக்கும். உதிரி வருமானங்களைப் பெறலாம்.

**துலாம்:** சொல்வாக்கைக் காப்பாற்றி செல்வாக்கு பெறும் நாள். பிள்ளைகள் வழியில் திடீர் செலவுகளைச் சந்திக்கலாம். உடல் நலன் தொடர்பான விடயங்களில் அதிக அக்கறை காட்டுவீர்கள். நீங்கள் செய்யும் வேலை ஒன்றால் மற்றவர்களுக்கு பாதிப்பு ஏற்படலாம். பல நாள்களாக சந்திக்காத நண்பர் ஒருவரைச் சந்திப்பீர்கள். பக்தி நாட்டம் கூடும்.

**விருச்சிகம்:** சேமிப்புகள் கரையும் அளவுக்கு திடீர் செலவு ஏற்படலாம். முகவர் தொழில் புரிவோர் சிரமங்களைச் சந்திக்கலாம். பணவரவு ஒன்றை எதிர்பார்த்து ஏமாந்து போகலாம். குடும்பத்தில் உள்ளவர்களே உங்களின் முயற்சிகளுக்குத் தடை போடலாம். சில விடயங்களில் நினைத்தது ஒன்றாகவும் நடப்பது ஒன்றாகவும் அமையும்.

**தனுசு:** எப்படி ஆகுமோ என்று பயந்த காரியம் ஒன்று நல்ல விதமாக முடிவுக்கு வரும். கடிதங்கள் மூலம் எதிர்பார்த்த முக்கிய செய்திகள் வந்து சேசரலாம். நீண்ட நாளாகளாகக் கொடுக்க வேண்டிய கடன் மிகுதி ஒன்றை கொடுத்து தீர்ப்பீர்கள். உங்களிடம் வாக்குக் கொடுத்தவர்கள் அதைக் காப்பாற்றி பெருமை சேர்ப்பர். கூட்டு முயற்சிகளில் வெற்றி உண்டு

**மகரம்:** திடீர் பணவரவுகளை பெறலாம். பிரச்சினைகளை தைரியமாக எதிர்கொண்டு சாதனை படைப்பீர்கள். குடும்ப உறுப்பினர்களுடன் மகிழ்ச்சி, சந்தோஷமாக பொழுதைக் கழிப்பீர்கள். பெண்கள் பிறந்த வீட்டின் உதவிகளை பெறலாம். மதிப்பு, கௌரவத்தை அதிகரிக்கும் வகையிலான நிகழ்ச்சிகள் நடக்கலாம். புதிய முயற்சிகளில் வெற்றி கிட்டும்.

**கும்பம்:** உடல் நலத்தில் அதிக அக்கறை காட்ட வேண்டிய நாள். கண்ட இடத்தில் சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும். பெண்கள் புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்க போட்ட திட்டம் நிறைவேறும். சக ஊழியர்களின் பாராட்டுக்களை அல்லது விமர்சனங்களை எதிர்கொள்ளலாம்.

**மீனம்:** சொந்த பந்தங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள். உழைப்புக்கு ஏற்ற மதிப்பு, மரியாதை உண்டு. உள்ளொன்று புறமொன்று பேசும் நண்பர்களை அடையாளம் கண்டு ஒதுங்கிக் கொள்வீர்கள். தேவையற்ற அலைச்சல்களுக்கு ஆள்படலாம். பெரிய அளவில் ஆதாயத்தை எதிர்பார்த்துச் செய்த காரியம் ஒன்றில் எதுவும் கிடைக்காமல் போகலாம்.

---

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | | 7 | 3 | 6 | 4 | | |
| 6 | | | 4 | | | 9 | | |
| 5 | | | | | | | 3 | |
| | | 9 | 2 | 5 | | 1 | | 3 |
| 2 | 7 | 1 | | | | 6 | 4 | 5 |
| 3 | | 5 | | 6 | 4 | 2 | | |
| | 4 | | | | | | | 1 |
| | | 2 | | | 1 | | | 7 |
| | | 6 | 8 | 7 | 3 | | 2 | |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 1 | 2 | 8 | 9 | 3 | 4 | 7 | 5 |
| 8 | 5 | 9 | 4 | 1 | 7 | 2 | 3 | 6 |
| 7 | 4 | 3 | 6 | 5 | 2 | 9 | 8 | 1 |
| 1 | 8 | 4 | 9 | 7 | 6 | 3 | 5 | 2 |
| 3 | 9 | 6 | 5 | 2 | 4 | 7 | 1 | 8 |
| 5 | 2 | 7 | 1 | 3 | 8 | 6 | 9 | 4 |
| 2 | 3 | 5 | 7 | 6 | 1 | 8 | 4 | 9 |
| 9 | 6 | 8 | 3 | 4 | 5 | 1 | 2 | 7 |
| 4 | 7 | 1 | 2 | 8 | 9 | 5 | 6 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# வெளிவிவகாரக் கொள்கை படுதோல்வி கண்டுள்ளது

## அரசை சாடுகிறார் கிரியெல்ல

**ஐ.நா. எமக்கெதிராக நிபுணர் குழு அமைக்காது. அமெரிக்கா ஜெனிவாவில் பிரேரணை கொண்டு வராது என வெளிநாட்டமைச்சர் ஜீ. எல். பீரிஸ் உறுதிமொழிகளை வழங்கினார்.**

கொழும்பு,மார்ச் 30

சுதந்திரம் கிடைத்தது தொடக்கம் இந்தியாவுடன் நட்புறவைப் பேணி வந்துள்ளோம். அந்த நாட்டின் உதவி எமக்கு அவசியம் தேவையாகும். ஆனால் இன்றைய அரசினால் இந்தியாவின் நட்புறவை பெற முடியவில்லை. இது எமது வெளிவிவகாரக் கொள்கையின் படுதோல்வியையே வெளிப்படுத்துகிறது என ஐ.தே. க.வின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக லக்ஸ்மன் கிரியெல்ல மேலும் தெரிவித்ததாவது:-

ஐ.நா. எமக்கெதிராக நிபுணர் குழு அமைக்காது. அமெரிக்கா ஜெனிவாவில் பிரேரணை கொண்டு வராது என வெளிநாட்டமைச்சர் ஜீ. எல். பீரிஸ் உறுதிமொழிகளை வழங்கினார்.

ஆனால் இவையனைத்தும் நடைபெற்று முடிந்து விட்டது. அரசுக்கு இராஜதந்திர ரீதியான எதிர்காலத் திட்டம் கிடையாது. இதுவே இன்றைய நிலைமைக்கு காரணமாகும்.

இது நாட்டுக்கு எதிரான பிரச்சினையல்ல. அரசின் பிழையான செயற்பாடுகளால் அரசுக்கு எதிராகவே இப்பிரச்சினை எழுந்துள்ளது. எனவே, அரசே இதற்குத் தீர்வு காணவேண்டும். ஆனால் அரசிடம் இராஜதந்திரம் கிடையாது.

இவ்வாறானதோர் தருணத்தில் அமெரிக்கா, இந்தியா பொருள்களைப் பகிஷ்கரிக்குமாறும் இந்நாடுகளுக்கு எதிரான மனநிலையை மக்கள் மத்தியில் ஏற்படுத்துமாறும் சில அமைச்சர்கள் கூறுகின்றார்கள்.

இவ்வாறு நாம் இந்தியப் பொருள்களைப் பகிஷ்கரிக்கும் பட்சத்தில் முதலில் புத்தர் சிலைகளையும் அப்புறப்படுத்த வேண்டிவரும். ஏனென்றால் புத்த தர்மமும் இந்தியாவிலிருந்தே எமக்கு கிடைத்தது-என்றார்.(த)

# சின்னக்கருசலில் இரு தரப்பு மோதல்

**பெரிய கருசல் கிராமத்தைச் சேர்ந்த இளைஞர் குழு ஒன்று 9528 இலக்கம் கொண்ட பச்சை நிற ஓட்டோவில் சின்னக் கருசல் கிராமத்திற்குள் நுழைந்து அங்கு உள்ள வீடு ஒன்றின் மீது கல் வீசித் தாக்கிவிட்டுத் தப்பிச் சென்று விட்டது.**

மன்னார்,மார்ச் 30

மன்னார் சின்னக்கருசல் கிராமத்தில் இரண்டு குழுக்களுக்கிடையில் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் இடம்பெற்ற மோதலை 100 இற்கும் மேற்பட்ட ராணுவத்தினரும், பொலிஸாரும் இணைந்து நிலைமையைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளனர் என்று மன்னார் பிரதேச சபையின் உப தலைவர் அந்தோனி சகாயம் தெரிவித்தார்.

மன்னார்- தலை ம்ன்னார் பிரதான வீதியில் சின்னக் கருசல் கிராமம் அமைந்துள்ளது.

நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் பெரிய கருசல் கிராமத்தைச் சேர்ந்த இளைஞர் குழு ஒன்று 9528 இலக்கம் கொண்ட பச்சை நிற ஓட்டோவில் சின்னக் கருசல் கிராமத்திற்குள் நுழைந்து அங்கு உள்ள வீடு ஒன்றின் மீது கல் வீசித் தாக்கிவிட்டுத் தப்பிச் சென்று விட்டது.

பின்னர் குறித்த வீட்டில் உள்ள இளைஞர் ஒருவர் தனது ஓட்டோவில் அந்தக் குழுவைத் துரத்திக் கொண்டு பெரிய கருசல் கிராமம் வரை சென்றுள்ளார்.

அங்கு நின்ற குறித்த குழுவினர் இளைஞர் மீது கண்மூடித்தனமாக தாக்கியுள்ளனர்.

எனினும் இளைஞன் தனது ஓட்டோவை அந்த இடத்திலேயே விட்டு விட்டு தனது வீடு நோக்கி தப்பி ஓடி வந்து விட்டார்.

ஓட்டோவை அங்கு நின்ற குழு சேதப்படுத்தியுள்ளதுடன் மீண்டும் 30 பேர் கொண்ட குழு சின்னக்கருசல் கிராமம் நோக்கி சென்றுள்ளது.

இதன் போது தகவல் அறிந்து சின்னக்கருசல் முகாம் ராணுவத்தினரும், பொலிஸாரும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

மோதல் குழுவினரைப் படையினர் இடைமறித்துத் திருப்பி அனுப்ப முயற்சித்த போது ராணுவம் மீதும், பொலிஸார் மீதும் கல்வீசி தாக்கியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து குழுவுக்கும் ராணுவத்திற்கும் இடையில் மோதல் ஏற்பட்டு பின்னர் நிலைமை கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டது.

இந்தச் சம்பவம் அறிந்த தோட்டவெளி பங்குத் தந்தை, சின்னக்கருசல் கிராமத்திற்கு வந்த போது பெரிய கருசல் கிராமத்தில் இருந்து வந்த குழுவினர் பங்குத் தந்தை மீதும் தாக்கி அவருடைய மோட்டார் சைக்கிளையும் சேதப்படுத்த முயற்சி செய்தனர் என்று பொலிஸார் கூறினர். பின்னர் அங்கு நின்ற பொலிஸாரும் ராணுவத்தினரும் நிலைமையைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர்.

நூற்றுக்கணக்கான ராணு வத்தினரும் பொலிஸாரும் சின்னக்கருசல் கிராமத்தில் குவிக்கப்பட்டு பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். சின்னக்கருசல் கிராமத்தில் வசிக்கும் தமிழ் மக்கள் இந்தச் சம்பவம் குறித்துக் கவலை தெரிவித்துள்ளனர். (எ)

# மாணவியைக் கடத்திய வழக்கு சிப்பாய்க்கு பிணை அனுமதி

## பொலிஸாரின் அக்கறையீனம் குறித்து நீதிமன்றில் பிரஸ்தாபம்

கிளிநொச்சி,மார்ச் 30

கிளிநொச்சி ஊற்றுப்புலம் பகுதியில் பாடசாலைச் சிறுமி ஒருவரைக் கடத்திச் சென்றதாகக் குற்றஞ்சாட் டப்பட்ட சிப்பாய் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான இரு ஆள் பிணையில் செல்வ தற்கு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்று உத்தர விட்டுள்ளது.

கிளிநொச்சி ஊற்றுப்புலம் பகுதியைச் சேர்ந்த 16 வயதான மாணவி கடந்த மாதம் 15 ஆம் திகதி அப்பகுதியில் பணியாற்றும் படைச் சிப்பாய் ஒருவரால் கடத்திச் செல்லப்பட்டதாகக் கூறப்பட்டு, மதவாச் சிப் பகுதியில் வைத்து பொலிஸாரால் மீட்கப்பட் டார்.

பின்னர் கிளிநொச்சி பொது மருத்துவ மனையில் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத் தப்பட்டார். இந்தச் சிறுமியைக் கடத்திச் சென்றதாகக் கூறப்படும் படைச் சிப்பாயைப் பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதில் நீண்ட நாள்கள் எடுத்துள்ளன.

குறித்த சிறுமியின் பெற்றோர் சிறுமி காணாமற் போனது தொடர்பாகக் கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர். சம்பவம் நிகழ்ந்து ஒரு மாதம் கடந்த நிலையில் பொலிஸார் கடந்த 20 ஆம் திகதி குறித்த குற்றச்சாட்டு தொடர்பான வழக்கினை கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்கு தொடர்பாக கிளிநொச்சி பொலிஸ் நிலையத் தலைமைப் பொறுப்பதிகாரி மன்றுக்கு அழைக்கப்பட்டு, அவரிடம் குறித்த குற்றச்சாட்டுத் தொடர்பாக விளக்கம் கோரப்பட்டது.

கிளிநொச் சிப் பொலிஸ் நிலையத்தில் பெண்கள், சிறுவர் பிரிவுக்குப் பொறுப்பாக இருக்கின்ற பெண் அதிகாரி ஒருவர் இந்த விடயத்தில் அக்கறை யின்றி நடந்து கொள்வதாக மன்றில் தெரிவிக்கப்பட் டது. அத்துடன் சந்தேக நப ரைக் கைதுசெய்து நீதிமன் றில் முன்னிலைப்படுத்துவதற்கு மறு தவணை ஒன்றினையும் பொலிஸார் கோரி யிருந்தனர்.

இந்த நிலையில் குறித்த குற்றச்சாட்டுடன் தொடர்புடையபடைச்சிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் கடந்த 27 ஆம் திகதி முன்னிலைப்படுத்தப்பட்டார்.

சந்தேக நபரை ஒரு லட்சம் ரூபா பெறு மதியான இரண்டு ஆள் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதி வழங்கியது. அத்துடன் அடுத்த தவணையின் போது மன்றில் சமுகமளிக்குமாறும் உத்தர விட்டது. (க-6)

# வெள்ளை வானில் இளைஞன் கடத்தல்

மட்டக்களப்பு,மார்ச் 30

மட்டக்களப்பு, வாகரையில் இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் புதன்கிழமை கடத்திச் செல்லப்பட்டுள்ளார் என்று அவரது பெற்றோர் வாகரை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

வாகரை, பால்சேனையைச் சேர்ந்த 22 வயதுடைய தணிகாசலம் ஆனந்த் கிஷோத் என்பவரே வெள்ளை வானில் வந்த இனந்தெரியாத துப் பாக்கிதாரிகளால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார் என்று பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீட்டுக்கு வந்த ஆயுததாரிகள் கடத்தப்பட்டவரின் தந்தையை விசாரித்துள்ளனர். தந்தை வீட்டில் இல்லாதபோது மகனை கடத்திச் சென்றதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் வாகரைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுவருகின்றனர். (ச)

# துன்னாலையில் குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

வடமராட்சி, மார்ச் 30

வடமராட்சி துன்னாலை வடக்கில் உள்ள வீடொன்றில் தனித்திருந்த கொட்டில் ஒன்றில் மூன்று பிள்ளைகளின் தந்தை ஒருவர் தூக்கில் தொங்கிக் கொண்டிருந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

இதே இடத்தைச் சேர்ந்த விநாசித்தம்பி மருசலீக் (வயது-54) என்பவரே இவ்வாறு மீட்கப்பட்டவர் ஆவார். இவரது சடலம் பிரேத பரிசோதனை, மரண விசாரணைக்காக பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

பிரேத பரிசோதனைக்குப் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி திருமதி. அன்ரலா தயான் உத்தரவிட்டார்.

# கழிவுகள் கொட்டப்படுவதால் போக்குவரத்தில் சிக்கல்

## ஆனைக்கோட்டை - அராலி வீதியின் நிலை

**வீதியோரமாக பயணிப்போர் சுவாசம் சம்பந்தமான நோய்களுக்கு ஆளாகின்றனர்**

யாழ்ப்பாணம், மார்ச் 30

காக்கைதீவில் இருந்து ஆனைக்கோட்டை - அராலி வரையான பிரதான வீதியால் மக்கள் போக்குவரத்து ஸ்தம்பிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

வீதியின் இரு பகுதிகளிலும் கொல்களக் கழிவுகள், இறந்த மிருகங்களின் கழிவுகள், திண்மக் கழிவுகள் என்பன வகைதொகையின்றிக் கொட்டப்பட்டுள்ளன.

யாழ். மாநகர சபை மற்றும் நல்லூர்ப் பிரதேச சபை என்பன இணைந்து இதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வலி. தென்மேற்குப் பிரதேச சபை உறுப்பினர்கள் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

கடற்கரையை அண்டிய பிரதேசமாக காக்கைதீவு - அராலி வீதி பாதை அமைந்துள்ளது.

தினமும் வீதியின் போக்குவரத்துப் பாதிக்கும் அளவுக்கு யாழ்.நகர் ஊடாக வரும் கழிவுகள் வகைதொகையின்றிக் கொட்டப்படுகின்றன.

இடையிடையே வீதியோரங்களில் மலக்கழிவுகளும் கொட்டப்படுகின்றன. இதனால் வீதியோரமாக பயணிப்போர் சுவாசம் சம்பந்தமான நோய்களுக்கு ஆளாவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம)

# பட்டதாரிகளை ஏமாற்றாதீர்

## மட்டக்களப்பு வேலையற்றோர் சங்கம் கவலை

எருவில், மார்ச் 30

''கட்சியில் சேர்ந்தால் வேலை பெற்றுத் தருவோம்'' என்று கூறி பட்டதாரிகள் எவரையும் ஏமாற்ற வேண்டாம். நாங்கள் பல அரசியல்வாதிகளிடம் பட்டதாரிகள் குறித்து கலந்துரையாடியுள்ளோம். ஆனால் எவரும் தங்கள் கட்சியில் இணையுங்கள் என்று இதற்கு முன்னர் கூறியதில்லை.- இப்படி மட்டக்களப்பு பட்டதாரிகள் சங்கம் சுதந்திரக் கட்சிக்குக் கண்டனம் தெரிவித்துள்ளது. சங்கம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது:-

மட்டக்களப்பு பட்டதாரிகள் சுதந்திரக் கட்சியில் இணைந் துள்ளார்கள். ஆனால் மட்டக் களப்பு மாவட்டத்துக்கு என பட்டதாரிகள் சங்கம் இயங்கி வருகிற நிலையில் இந்தச் சங்கம் எந்த ஒரு கட்சியிலும் இணையவில்லை.

சுதந்திரக் கட்சியில் இணைந்தால் தான் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்படும் என்று கூறுவது ஜன நாயகத்துக்கு முரணான விடயமாகும்.

இதுவரைகாலமும் இல்லாத இந்தக்கொள்கை தற்போது எதற்காகக் கொண்டு வரப்பட்டுள்ளது.

கட்சியை வைத்துக் கொண்டு பட்டதாரிகள் எவரையும் ஏமாற்றிவிடவேண்டாம். நாங்கள் பல அரசியல்வாதிகளி டம் பட்டதாரிகள் தொடர்பாக கலந்துரையாடியுள்ளோம்.

ஆனால் எவரும் தங்கள் கட்சியில் இணையுங்கள் என்று கூறவில்லை. ஆனால் தற்போது சுதந்திரக்கட்சியில் இணைந்தால் தான் நியமனம் எனக் கூறுவது பட்டதாரிகளை ஏமாற்றுகின்ற விடயமாக அமையக் கூடாது.

கிழக்கு மாகாணத்தில் அதிகமான பட்டதாரிகள் வேலையற்று உள்ளனர். இவர் கள் அனைவருக்கும் நியம னங்கள் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இவர்கள் 2005ஆம் ஆண்டு முதல் 2010ஆம் ஆண்டு வரை பட்டம் முடித்தவர்கள்.

இந்தப் பட்டதாரிகள் பட்டினிப் போர், ஆர்ப்பாட்டங்கள் பலவற்றை செய்தும் பலவழி களில் முயன்று கஷ்டப்பட் டும் ஏதுவித மான முடிவுக ளும் இன்றி உள ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-31)

## ஆசிய கனிஷ்ட மெய்வன்மைப்போட்டித் தெரிவு

# முதல் சுற்றில் வெற்றி



பவித்திரா

**இரண்டு தெரிவுப் போட்டிகளிலும் வெற்றிபெற்றால் ஆசிய கனிஷ்ட மெய் வன்மைப் போட்டிக்கு செல்லலாம். அடுத்த தெரிவிலும் வென்று அசத்துவார்களா?**

யாழ்ப்பாணம், மார்ச் 30

ஆசிய கனிஸ்ட மெய் வன்மைப் போட்டிக்கான அகில இலங்கை ரீதியிலான முதலாவது தெரிவுப் போட்டி கடந்த சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் பியகம மஹிந்த ராஜபக்ஷ மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் ஆண்கள் பிரிவில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் பாடசாலையைச் சேர்ந்த விமலேந்திரா, குண்டு போடுதல் போட்டியில் 12.07 மீற்றர் தூரத்தினை எறிந்து முதலாமிடத்தைப் பெற்றுள்ளார்.

பெண்களுக்கான தட்டு எறிதல் போட்டியில் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய மாணவி ஆர்.தர்சிகா 30.51 மீற்றர் தூரத்தினை எறிந்து இரண்டாமிடத்தினையும் பெற்றுள்ளார்.

பெண்களுக்கான கோல் ஊன்றிப் பாய்தல் போட்டியில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மாணவி பவித்திரா 2.80 மீற்றர் தூரத்தினை கடந்து இரண்டாவது இடத்தையும் பெற்றுள்ளார்.

அடுத்து நடைபெறவுள்ள இறுதித் தெரிவுப் போட்டியிலும் இதேபோன்ற சிறப்பான பெறுபேற்றைப் பெறுவதன்மூலம் இவர்கள் மூவரும் ஆசியக் கனிஷ்ட மெய்வன்மைப் போட்டியில் கலந்து கொள்ளும் வாய்ப்பு இந்த தமிழ் வீரருக்கும் வீராங்கனைகளுக்கும் கிடைக்கும். அதற்கான சந்தர்ப்பங்கள் அதிகமாக உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ங-23)



தர்சிகா

## பட்டினமும் சூழலும் வெற்றி

யாழ்ப்பாணம், மார்ச் 30

திருகோணமலை மாவட்டத்திலுள்ள 12 பிரதேச செயலகங்களுக்கு இடையிலான குழுநிலைப் போட்டிகளில் கடந்த ஞாயிற்றுக் கிழமை திருகோணமலை மக்கெய்சர் விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற ஆண், பெண் இருபாலருக்குமான வலைப்பந்தாட்ட போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் பட்டினமும் சூழலும் பிரதேச செயலக அணி வெற்றி பெற்றது.

பட்டினமும் சூழலும் பிரதேசசெயலகப் பிரிவுஅணியை எதிர்த்து கந்தளாய் பிரதேச செயலக பிரிவு அணி மோதியது. இதில் பட்டினமும் சூழலும் பிரதேசசெயலகப் பிரிவு அணி 15:08 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது. (ங-23)

## தென்மராட்சி வலய மட்ட குழு நிலைப் போட்டிகள்

### ஏப்ரல் 3ஆம் திகதி முதல் 16ஆம் திகதி வரை

தென்மராட்சி, மார்ச் 30

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான வலய மட்ட குழு நிலைப் போட்டிகள் ஏப்ரல் 3 ஆம் திகதி ஆரம்பமாகி ஏப்ரல் 16 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

தென்மராட்சி கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற கோட்டமட்ட விளையாட்டு நிகழ்வுகளில் வெற்றி பெற்ற மாணவர்கள் வலய மட்டப்போட்டிகளில் விளையாடவுள்ளனர். இந்த வலய மட்ட குழு நிலைப் போட்டிகளில் எல்லே, கபடி, கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம் போன்றபோட்டிகள்இடம்பெறும்.

✱ மட்டுவில் சந்திரபுரஸ்கந்தவரோதய ம.வி மைதானத்தில் ஏப்ரல் 3ஆம் திகதி 19வயது ஆண்,பெண்பிரிவுகளுக்கிடையிலான எல்லே போட்டிகளும், ஏப்ரல் 4ஆம் திகதி 15, 19 வயது ஆண்களுக்கான கபடிப் போட்டிகளும், 5ஆம் திகதி 15,19 வயதுப் பெண்களுக்கான கபடிப் போட்டிகளும்,

✱ சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மைதானத்தில் ஏப்ரல் 6ஆம், 7ஆம் திகதிகளில் 15, 17, 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான வலைபந்தாட்டப் போட்டிகளும்,

✱ மட்டுவில் சந்திரபுரஸ்கந்தவரோதய ம.வி. மைதானத்தில் ஏப்ரல் 10, 11 ஆகிய திகதிகளில் 15,17,19 வயது பிரிவு ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டிகளும், ஏப்ரல் 14,15 ஆகிய திகதிகளில் 15, 17,19 வயது பிரிவு பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டிகளும், ஏப்ரல் 16 ஆம் திகதி 19 வயது ஆண், பெண்பிரிவுகளுக்கிடையினை உடற்பயிற்சிப் போட்டிகளும் இடம்பெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (ங-9)

## வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி யாழ். பல்கலையில் ஞாயிறு



வலி.வடக்கு, மார்ச் 30

யாழ்ப்பாணம் பல் கலைக்கழக விளையாட்டு அவையும், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வலைப்பந்தாட்ட அணியும் இணைந்து நடத்தும் வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வலைப்பந்தாட்ட மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இந்தச் சுற்றுப் போட்டியில் யாழ். மாவட்டத்தில் உள்ள பதின்மூன்று முன்னணி வலைப்பந்தாட்ட அணிகள் கலந்துகொள்ளவுள்ளன.

இந்தச் சுற்றுப் போட்டியில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

மருதனார்மடம் இராமநாதன விளையாட்டுக்கழக பி அணி எதிர் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக நீல அணி.

அராலி சரஸ்வதி விளையாட்டுக் கழகம் எதிர் உடுவில் விளையாட்டுக் கழக நீல அணி

தெல்லிப்பழை யூனியன் விளையாட்டுக் கழக 'பி' அணி எதிர் சண்டிலிப்பாய் விளையாட்டுக் கழக 'ஏ' அணி.

உடுவில் விளையாட்டுக்கழக 'ஏ' அணி எதிர் யாழ்ப்பாணம் பட்டர்பிளை விளையாட்டுக் கழகம்.

சண்டிலிப்பாய் விளையாட்டுக் கழக 'பி' அணி எதிர் மருதனார்மடம் இராமநாதன் விளையாட்டுக்கழக 'ஏ' அணி.

இரண்டாம் சுற்றில் இருந்து யாழ்ப்பாணம் ஐக்கிய விளையாட்டுக்கழகம் யாழ்ப்பாணம் பல் கலைக்கழக மஞ்சள் அணி தெல்லிப்பழை யூனியன் விளையாட்டுக் கழக 'ஏ' அணி என்பன ஏனைய அணிகளுடன் மோதவுள்ளன.

இந்தச் சுற்றுப்போட்டியில் கலந்து கொள்ளும் அணிகள் யாவுமே சமநிலை வாய்ந்தவை என்பதால் போட்டிகளின் போது பரபரப்புக்கு பஞ்சமிருக்காது. (ங-86)

# கரப்பந்தாட்டச் சம்பியன்கள்

### ஆண்கள் பிரிவில் கந்தளாய், பெண்கள் பிரிவில் பட்டினமும் சூழலும்



**திருகோணமலையில் பிரதேச செயலகங்களுக்கு இடையே நடத்தப்பட்ட குழு நிலைப் போட்டிகளில் பட்டினமும் சூழலும் பிரதேச செயலகப் பிரிவு முன்னணி பெற்றது. கரப்பந்தாட்டத்திலும் பெண்கள் பிரிவில் அதற்கே வெற்றி**

யாழ்ப்பாணம், மார்ச் 30

திருகோணமலை மாவட்டத்திலுள்ள 12 பிரதேச செயலகங்களுக்கு இடையிலான குழுநிலைப் போட்டிகளில் கடந்த சனிக்கிழமை திருகோணமலை 'மக்கெய்சர்' விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற ஆண், பெண் இருபாலாருக்குமான கரப்பந்தாட்ட போட்டியில் ஆண்கள் பிரிவில் கந்தளாய் பிரதேச செயலகப் பிரிவு அணியும், பெண்களுக்கான பிரிவில் பட்டினமும் சூழலும் பிரதேசசெயலக அணியும் வெற்றி பெற்றுச் சம்பியனாகின.

முதலில் இடம்பெற்ற ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டத்தில் கந்தளாய் பிரதேச செயலகப் பிரிவு அணியை எதிர்த்து பட்டினமும் சூழலும் பிரதேசசெயலகப் பிரிவு அணி மோதிக் கொண்டது.

5 செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் கந்தளாய் பிரதேச செயலகப் பிரிவு அணி 3:2 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்திலும் பட்டினமும் சூழலும் பிரதேச செயலகப் பிரிவு அணியை எதிர்த்து கந்தளாய் பிரதேச செயலகப் பிரிவு அணியே களமிறங்கியது. 3 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் பட்டினமும் சூழலும் பிரதேச செயலகப் பிரிவு அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது. (ங-23)

## உதைபந்தாட்டத்தில் சாதித்த வீராங்கனைகள்





வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் 2ஆம் இடத்தைப் பெற்ற மானிப்பாய் மகளிர் கல்லூரி, 3ஆம் இடத்தைப் பெற்ற சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணிகளின் தலைவிகள் வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக்கொள்கின்றனர். (ங-86)

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 30

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் 11 பேர் பங்கு கொள்ளும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இதில் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறும் ஆட்டத்தில் பங்கு கொள்ளும் அணியின் விவரம் வருமாறு:-

மாலை 4 மணிக்கு திக்கம் யுத் விளையாட்டுக்கழகம் எதிர் டைமன்ஸ் விளையாட்டுக் கழகம். (ங-23)



# காலியில் இங்கிலாந்து காலி

காலியில் இடம்பெற்ற முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் இலங்கை அணி, டெஸ் தரவரிசையில் முதலிடத்திலுள்ள இங்கிலாந்து அணியை 75 ஓட்டங்களால் வெற்றி கொண்டது. இலங்கையின் சுழல் புயலில் சிக்கி இங்கிலாந்து அணி சின்னாபின்னமாகியது.

இரண்டு டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடரின் முதலாவது டெஸ்ட் ஆட்டம் காலியில் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி மஹேல ஜெயவர்த்தனவின் சிறப்பான 180 ஓட்டங்களுடன் 318 ஓட்டங்களைப் பெற்றது. முதல் இன்னிங் ஸில் பதிலளித்து ஆடிய இங்கிலாந்து அணி ஹேரத்தின் சுழலில் சிக்கி 193 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

மீண்டும் இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய இலங்கை அணி, இங்கிலாந்தின் சுழலில் தடுமாறத் தொடங்கியது. பிரசன்ன ஜெயவர்த்தன மட்டும் தனித்து நின்று போராடி இலங்கை அணியை 200 ஓட்டங்களைத் தாண்ட வைத்தார். இலங்கை அணி 214 ஓட்டங்களை இரண்டாவது இன்னிங்ஸில் பெற்றுக் கொள்ள இங்கிலாந்து அணிக்கு 340 ஓட்டங்கள் வெற்றியிலக்காக நிர்ணயமானது.

இதற்கு பதிலளித்து ஆடிய இங்கிலாந்து அணி நேற்று முன்தினம் ஆட்ட நேர நிறைவு வரையில் இரண்டு இலக்குகளை மாத்திரம் இழந்து 111 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. களத்தில் ரொட், பீற்றர்ஸன் ஜோடி பலமான நிலையில் இருந்தனர். இந்த நிலையில் நேற்றைய நான்காவது நாள் ஆட்டம் ஆரம்பமானது.

நேற்றைய ஆட்டத்தில் சுழல் புயல் வீசும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், இலங்கை அணி ஆரம்பத்திலேயே சுழற் பந்து வீச்சாளர்களைப் பயன்படுத்தியது. அதற்கு உடனடியாகவே பல னும் கிடைத்தது. பீற்றர்ஸன், ரந்தீவின் சுழலில் சிக்கி வெளியேற்றப்பட்டார். அதன் பின்னர் இணைந்த ரொட், இயன் பெல் ஜோடி நிதான ஆட்டத்தைத் தொடர்ந்தது. இவர்களது இணைப்பில் இங்கிலாந்து அணி 150 ஓட்டங்களைத் தாண்டியது.

56.5 ஆவது பந்தை ஹேரத் வீச ரொட் அடித்தாட முற்பட்டார். அதனை ஹேரத் பிடியெடுக்கும் வாய்ப்பிருந்தும் தவறவிட்டார். இருப்பினும் ஹேரத் அடுத்த பந்து பரிமாற்றத்தில் பெல்லின் இலக்கைப் பிடுங்கினார்.

நான்கு இலக்குகளை இங்கிலாந்து இழந்திருந்தாலும், ரொட்டின் சிறப்பான துடுப்பாட்டத்துடன் வெற்றியிலக்கை விரட்டியது. ரொட்டிற்கு, பிரையர் பூரண ஒத்துழைப்புக் கொடுக்க இங்கிலாந்து வெற்றி நடையைத் தொடர்ந்தது. 200 ஓட்டங்களை இங்கிலாந்து அணி தாண்ட இலங்கை அணி பெரும்பாலும் மண்கௌவும் என்றே எதிர்பார்க்கப்பட்டது.

ஆரம்பத்திலிருந்து சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய ரொட் 240 பந்துகளில் தனது 7 ஆவது சதத்தைக் கடந்தார். 81 ஓட்டங்கள் ஐந்தா வது இலக்குக்காக பகிரப்பட்ட நிலையில் பிரையர் ஆட்டமிழந்தார். ஹேரத்தின் பந்தை ஸ்குயார் லெக் திசையில் அடித்து நான்கு ஓட்டங்களுக்கு விரட்ட முனைந்த பிரையர் ஷோட் லெக் திசையில் களத்தடுப்பில் ஈடுபட்ட திரிமன்னேயால் அபாரமான பிடியெடுப்பின் மூலம் ஆட்டமிழக்கச் செய்யப்பட்டார்.

அதன் பின்னர் நுழைந்த பட்டேல் சிறிது நேரம் களத்தில் நிலைத்தாடினார். இருப்பினும் இலங்கையின் சுழல் புயல் வீசத் தொடங்கியதும் அவரும் வெளியேற்றப்பட்டார். ஹேரத்தின் பந்தில் கவர் திசையில் பந்தை அடிக்க களத்தடுப்பில் ஈடுபட்டிருந்த டில்ஷான் பிடியை முதலில் தவறவிட்டு பின்னர் பிடி எடுத்தார். பட்டேல் வெளியேற்றப்பட்ட அடுத்த பந்து பரிமாற்றத்திலேயே ரொட், ரந்தீவின் சுழ லில் சிக்கி னார். ரொட் அடித்த பந்தை லெக் ஸிலிப்பில் களத்தடுப்பில் நின்ற டில்ஷான் கைப்பற்ற இலங்கை யின் வெற்றி மீண்டும் கைகளுக்கு கிடைக்கும் வாய்ப்பு பிரகாசமானது.

தொடர்ந்து நுழைந்த வீரர்கள் ஒற்றை ஓட்டங்களுடன் பவிலியனுக்கு அனுப்பப்பட்டனர். இலங்கையின் சுழலின் தாக்கத்துக்கு ஈடு கொடுக்க முடியாத இங்கிலாந்து அணி 264 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இங்கிலாந்து அணியின் இறுதி 6 இலக்குகளும் 31 ஓட்டங்களுக் குள் சரிக்கப்பட்டன. இரண்டாவது இன்னிங்ஸில் இங்கிலாந்தின் பத்து இலக்குகளையும் சுழற்பந்து வீச் சாளர்களே வீழ்த்தினர். டெஸ்ட் தர வரிசையில் முதலிட அணியான இங்கிலாந்தை சுழலினால் திணற டித்த ஹேரத் ஆட்டநாயகனாக தெரிவானார். இந்த வெற்றியின் மூலம் இலங்கை அணி 2 ஆட்டங் கள் கொண்ட டெஸ்ட் தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலை யில் உள்ளது. (5)

“ 2010 ஓகஸ்ட் மாதம் காலியில் நடைபெற்ற இந்தியாவுடனான டெஸ்ட் ஆட்டத்தில் இலங்கை வெற்றிபெற்றது. அது முத்தையா முரளிதரனின் கடைசி டெஸ்ட் ஆட்டமாகவும் அமைந்தது. அதன்பின் சொந்த மண்ணில் இலங்கை அணி டெஸ்ட் ஆட்டமொன்றில் வென்றமை இதுவே முதல் தடவையாகும்.
தற்போதுடெஸ்ட் தரவரிசையில் உலகில் முதலிடத்தில் உள்ள இங்கிலாந்து அணி, தொடர்ச்சியாக 4 டெஸ்ட் போட்டியில் தோல்வியைத் தழுவியுள்ளமை குறிப்பிடத்தக்கது.
இதற்குமுன் பாகிஸ்தானுடனான 3 போட்டியில் அந்த அணி தோல்வியைத் தழுவியது.

## இலங்கை எதிர் இங்கிலாந்து

காலி மைதானம்

இலங்கை - 318 & 214 இங்கிலாந்து - 193& 264

இலங்கை 75 ஓட்டங்களால் வெற்றி

இலங்கை

| பெயர் | ஆட்டமிழப்பு | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| திரிமன்னே | b சுவான் | 06 | 23 | 0 | 0 |
| டில்ஷான் | b புறோட் | 00 | 02 | 0 | 0 |
| சங்ககார | c இயன்பெல் b சுவான் | 14 | 44 | 1 | 0 |
| மஹேல | c அன்டர்சன் b சுவான் | 05 | 07 | 1 | 0 |
| சமரவீர | st பிரையர்,b சுவான் | 36 | 74 | 5 | 0 |
| சந்திமால் | b சுவான் | 31 | 83 | 5 | 0 |
| ரந்தீவ் | lbw b சுவான் | 18 | 63 | 2 | 0 |
| பிரசன்ன ஜெயவர்த்தன | (ஆட்டமிழக்காமல்) | 61 | 123 | 3 | 3 |
| ஹேரத் | b சுவான் | 07 | 10 | 1 | 0 |
| வெலகெதர | c ஸ்ட்ரோஸ் b பனேஸர் | 13 | 53 | 2 | 0 |
| லக்மால் | ரன் அவுட் | 13 | 29 | 3 | 0 |

இலக்கு இழப்பு: 1-04, 2-08, 3-14, 4-41, 5-72, 6-114, 7-115, 8-127, 9-167, 10-214

உதிரிகள் 10

மொத்த ஓட்டங்கள் 214

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| அன்டர்சன் | 10.3 | 2 | 26 | 0 |
| புறோட் | 11 | 2 | 33 | 1 |
| பனேஸர் | 24 | 6 | 59 | 2 |
| சுவான் | 30 | 5 | 82 | 6 |
| பட்டேல் | 09 | 4 | 09 | 0 |

Sri Lanka Cricket

இங்கிலாந்து

| பெயர் | ஆட்டமிழப்பு | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| ஸ்ட்ரோஸ் | c டில்ஷான் b ஹேரத் | 27 | 60 | 2 | 0 |
| குக் | c பிர.ஜெயவர்த்தன b ஹேரத் | 14 | 25 | 3 | 0 |
| ரொட் | c டில்ஷான் b ரந்தீவ் | 112 | 266 | 10 | 0 |
| பீற்றர்சன் | c பிர.ஜெயவர்த்தன b ரந்தீவ் | 30 | 68 | 4 | 0 |
| பெல் | lbw ஹேரத் | 13 | 34 | 1 | 0 |
| பிரையர் | c திரிமன்னே b ஹேரத் | 41 | 88 | 3 | 0 |
| பட்டேல் | c டில்ஷான் b ஹேரத் | 9 | 25 | 0 | 0 |
| புறோட் | (ஆட்டமிழக்காமல்) | 5 | 12 | 0 | 0 |
| சுவான் | lbw ஹேரத் | 1 | 9 | 0 | 0 |
| அன்டர்சன் | c பிர.ஜெயவர்த்தன b ரந்தீவ் | 5 | 6 | 1 | 0 |
| பனேஸர் | c டில்ஷான் b ரந்தீவ் | 0 | 1 | 0 | 0 |


இலக்கு இழப்பு: 1-31, 2-48, 3-118, 4-152, 5-233, 6-252, 7-256, 8-259, 9-264, 10-264

உதிரிகள் 7

மொத்த ஓட்டங்கள் 264

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| வெலகெதர | 13 | 2 | 40 | 0 |
| லக்மல் | 10 | 5 | 22 | 0 |
| ஹேரத் | 38 | 9 | 97 | 6 |
| டில்ஷான் | 12 | 1 | 25 | 0 |
| ரந்தீவ் | 26 | 2 | 74 | 4 |

ENGLAND CRICKET





## ரூனே அதிரடி: மான்செஸ்டர் வெற்றி

பிரிமியர் லீக் சம்பியன் தொடர் கால்பந்து போட்டியில், ரூனேயின் அதிரடியால் மான்செஸ்டர் யுனைடெட் அணி வெற்றி பெற்றது.

இங்கிலாந்தில் நடைபெற்று வரும் பிரிமியர் லீக் சம்பியன் தொடர் கால்பந்து தொடரின் லீக் போட்டியில் மான்செஸ்டர் யுனைடெட் அணி, புல்ஹாம் அணியுடன் மோதியது.

மோசமான தொடக்கத்தை கொடுத்த புல்ஹாம் அணிக்கு, போட்டியின் 42 ஆவது நிமிடத்தில் மான்செஸ்டர் யுனைடெட் அணியின் வெய்ன் ரூனே ஒரு கோல் அடித்து அதிர்ச்சி அளித்தார்.

அதன் பின் கோல் அடிக்கத் திணறிய புல்ஹாம் அணி, 0-1 என்ற கணக்கில் மான்செஸ்டர் யுனைடெட் அணியிடம் தோல்வி அடைந்தது. (5)



## கோட்டக்கல்வி அலுவலகம் நிரந்தரக் கட்டடத்தில்

திரு இருதயக் கல்லூரியில் தற்காலிகமாக இயங்கி வந்த கரவெட்டி கோட்டக் கல்வி அலுவலகம் நேற்று முன்தினம் தொடக்கம் நாவலர் மடச்சந்தியில் உள்ள நிரந்தரக் கட்டடத்தில் இயங்குகின்றது என்று கோட்டக்கல்வி அதிகாரி எஸ்.நற்குணலிங்கம் அறிவித்துள்ளார். (வ-253)

## கிளார்க்கின் வருகையால் கங்குலிக்கு சிக்கல்

ஐந்தாவது ஐ.பி.எல் தொடரில் பங்கேற்கும் புனே வாரியர்ஸ் அணியில் ஆஸ்திரேலிய அணித் தலைவர் மைக்கேல் கிளார்க் விளையாடுகிறார். இதனால் இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் கங்குலிக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது.

கடந்த 4 ஆண்டுகளாக ஐ.பி.எல் தொடரில் விளையாடுவதை கிளார்க் தவிர்த்து வந்தார். இந்த ஆண்டில் முதல் முறையாக ஐ.பி.எல் தொடரில் அவர் விளையாட இருக்கிறார். புனே அணியில் கிளார்க் இணைந்துள்ளதால், அந்த அணியின் தலைவராக உள்ள கங்குலிக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது.

கங்குலிக்கு பதிலாக கிளார்க் அணித்தலைவராக அறிவிக்கப்படலாம் என்ற பேச்சும் எழுந்துள்ளது. அடுத்த சில மாதங்களில் கங்குலி 40 வயதை எட்ட இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.(5)


செங்கல் விற்பனைக்கு

அத்திவார கற்கள், 1 ½ அங்குல கருங்கல் சல்லி, 1 அங்குல கருங்கல் சல்லி, 3/4 அங்குல கருங்கல் சல்லி, ½ அங்குல கருங்கல் சல்லி,

சல்லி கற்கள்

நிலப்பதிப்புக் கற்கள்

பல வடிவங்களில் பல்வேறு அளவுகளில் நிலப்பதிப்புக் கற்கள் மற்றும் பூகற்கள் (Grill) விற்பனைக்கு உண்டு,

யாழ் மற்றும் வன்னி பிரதேசங்களுக்கு விநியோகம் செய்யப்படும்

பிரணவன் என்ரபிறைசஸ்

பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 077 3818799 (சங்கிலியன் சிலைக்கு முன்)

NEC மணிக்கூட்டு வீதி. யாழ்ப்பாணம். பெருமாள் கோவில் அருகில்

A/L 2014

கணித, விஞ்ஞான பிரிவு Batch 1- 8Am

ஆரம்பம்: 31-03-2012 சனிக்கிழமை Batch 2- 3Pm

| CHEMISTRY | PHYSICS |
|---|---|
| வாசு, வாகீசன், பத்மநாதன் | கருணாநிதி, எடிசன் |
| COM.MATHS | BIOLOGY |
| விமலநாதன். சயந்தன் | ஞானேந்திரன், சுதா |

ஆங்கிலத்தைப் படிக்காதீர்கள்! பழகுங்கள்!!

இரண்டு தொடக்கம் நான்கு வயதிற்குள் தமிழ் மொழியைப் பேசப் பழகிய உங்களால், 8 வயது தொடக்கம் இன்று வரை பாடசாலையிலும், தனியார் கல்வி நிறுவனங்களிலும் ஆங்கிலத்தை கற்றுவிட்டு ஏன் அதை பேச முடியாமல் இருக்கிறது?

தமிழ் பழகியதைப் போலன்றி ஆங்கிலத்தை வகுப்பறையில் புத்தகம், CD வாயிலாகவும், எழுதி மனனம் செய்தும் முயற்சித்தமையே காரணம் ஆகும்.

நீங்கள் தமிழ் பழகியதைப் போல அடிப்படையிலிருந்து ஆங்கில வசனம் உருவாக்கவும், ஒவ்வொரு வகுப்பிலும் 2 மணிநேர ஆங்கில உரையாடற் பயிற்சியில் ஈடுபடுத்துவதன் மூலமே நாம் 3 மாதங்களில் ஆங்கிலத்தை சாரளமாகப் பேசப் பயிற்றுவிக்கிறோம்.

புதிய பயிற்சிப் பட்டறை ஆரம்பம் - 31/03/2012

சனி, ஞாயிறு பிரிவுகள் (ஒரு பிரிவில் 20 பேர் மட்டும்)

பிரிவு I 08 - 10 பிரிவு III 01 - 03

பிரிவு II 10 - 12 பிரிவு IV 03 - 05

கட்டணம் ரூபா 3000.00

SAAMSON ENGLISH 279, ஆஸ்பத்திரி பின் புறம், யாழ்ப்பாணம். TEL : 077 621 4567

மணல் விற்பனைக்குண்டு

நாற்பது வருடங்களாக கட்டட வேலைகளுக்கும், பூச்சு வேலைகளுக்கும் சிறந்ததெனும் நாமத்தைப் பெற்ற உப்புத் தன்மையற்ற மணல் 26 வருடங்களின் பின் இப்போது யாழ்ப்பாணத்தில்

4 ரெக்டர் - 24,000/- அரிந்த கல்லும் விற்பனைக்குண்டு. (கல்லு 1 - 38/-)

தொடர்புகளுக்கு கண்ணா 0776766499

Deutsch, Dutch, French வகுப்புகள்

திருமணம் மற்றும் Sponsor மூலம் வெளிநாடு செல்ல விருப்பவர்களுக்கு தூதரக பரீட்சைகளுக்கான புதிய வகுப்புகள் ஆரம்பமாகின்றன.

German - Deutsch (டொச்)

31/03 01/04 Sat & Sun --- Batch - I Batch - II > 9 AM - 1PM

Netherland - Dutch (டச்)

31/03 01/04 Sat & Sun --- Batch - I Batch - II > 10 AM - 1PM

French, Italian புதிய வகுப்புகளும் இவ்வாரம் ஆரம்பமாகின்றன.

Vivekananda Academy

(Centre for International Launguage Studies)

அரசாங்க பதிவு இல. - W/A 76795

221/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே. 077 4842464, 021 3216928, 021 2220393

குறிப்பு: German AI exam சித்தியடையாதவர்கள், ஜேர்மன், பிரான்ஸ், சுவிஸ் Sponsor பிரச்சினை உள்ளவர்களுக்கு எமது சட்டத்தரணிகள் மூலம் இலவச ஆலோசனை வழங்கப்படும்.

SHAMROCK

ஈச்சமோட்டை/ யாழ்.

A/L 2014

கலை,வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவுகளுடன் Gen .Eng & GIT

O/L Repeat

O/L English (paper class)

Gr1 முதல் O/L வரை Eng.med 6 to 11

A/L - 2014

(கலை, வர்த்தகப் பிரிவுகள்)

ஆரம்பம் ஏப்ரல் 7 சனி - காலை 9 மணி

DMI Jaffna

எடிசன் கல்லூரி கிளிநொச்சி.

* A/L 2014 கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான புதிய பிரிவுகள் ஆரம்பம் 31.03.12 சனி 8.30AM

* O/L DAY CLASS ஆரம்பம் 02.04.2012 திங்கள் 8.30 AM

SUBRA (14) கல்வி நிறுவனம்

சித்தன்கேணி - கிளை - வட்டுக்கோட்டை

2014 A/L

கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவுகள் 01.04.2012இல் ஞாயிறு மாலை 3.30 மணி

O/L DAY CLASS

02.04.2012இல் திங்கள் காலை 7 மணி

பிரத்தியேக வகுப்புக்கள்

A\L - ICT 2014

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப அடிப்படைகள்.

ஆரம்பம்:- 01.04.2012 ஞாயிற்றுக்கிழமை காலை 7.00-8.00

தொடர்புகட்கு:- 0776109441

விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்

2014 கலை வர்த்தக

புதிய பிரிவு ஆரம்பம் 8மணி 31.03.2012

| | |
|---|---|
| Eco | Tam |
| M.C. சுதாகர் | N.குழந்தை |
| H.C | P.Sa |
| பத்மராஜா | ஸ்ரீரங்கநாத் |
| Geo | Log |
| P.S. தினேஸ் | வாகீசன் |
| Chi | Ram |
| அமலன் | கஜீதரன் |
| His - தாஸ் | |

வர்த்தக பிரிவு

| | |
|---|---|
| Ec | Ac |
| M.C. சுதாகர் | றொஜிந்தன் |
| B.St. | |
| S. முகுந்தன் | |

அனுமதிகள் இன்றுமுதல்

வேலைக்கு ஆள்கள் தேவை

யாழ்.நகரில் பிரபல புத்தகசாலை ஒன்றுக்கு கணக்காளர், உதவியாளர்கள் தேவை. (பெண்கள் விரும்பத்தக்கது)

தொடர்புகளுக்கு: 077 122 6568

(சி-226)

BEACON பட்டப்படிப்பு கல்லூரி

வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்

G.A.Q

மீள் பரீட்சாத்திகளுக்கானது ஆரம்பம் 31.03.2012 சனி காலை 8.00 மணி

B.A Part - I

யாழ். பல்கலைக்கழகம்

ஆரம்பம் : 31.03.2012 சனி காலை 9.00 மணி

தமிழ் சிவலிங்கராஜா

இளைப்பாறிய தமிழ் துறைப் பேராசிரியர்

புதியதோர் உலகம் செய்வோம்

DCM ம் குறுக்குத் தெரு,யாழ்நகர் (வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகாமையில்)

A/L 2014 பிரிவு 2 ஆரம்பம் : 31-3-12 சனி 8 மணி

| பொருளியல் | கணக்கீடு | வணிகக்கல்வி |
|---|---|---|
| S.வரதராஜன் B.A(Hons) | A.P.பகீரதன் B.B.A(FM.Spl) | V.முரளி B.B.A(FM.Spl) |

A/L 2014

கல்வியியலே தூவியம் படைப்போம்...

வர்த்தகப்பிரிவு

கணக்கீடு : K.பாலகஜன்

பொருளியல் : NB.கஜீதரன்

வணிகக்கல்வி : S.யசோதரன்

NEC

பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்

ஆரம்பம் : 31.03.2012 சனி காலை 8.00

ஆரம்ப அலகிலிருந்து கற்பிக்கப்படும்

கலைப்பிரிவு

| | | | |
|---|---|---|---|
| தமிழ் | : A.K கீர்த்திராஜன் | அளவையியல் | : P. கமல் |
| இந்து நாகரீகம் | : T.ஸ்ரீஸ் | பொருளியல் | : NB. கஜீதரன் |
| வரலாறு | : RR.ஆனந்தன் | அரசியல் | : A.K றொபின்சன் |
| புவியியல் | : S.R.பாலா | நாட.அரங்கியல் | : S.R. ரமேஸ் |
| இலகு கணிதம் | : S.சயந்தன் | இந்து சமயம் | : T. ஸ்ரீஸ் |
| விவசாயம் | : S.M.V.தேவா | ஊடகவியல் | : R. இராஜேஸ்வரன் |
| கிறிஸ்தவம் | : R.கஸ்ரோன் | சித்திரம் | : S.டொமினிக் |
| சங்கீதம் | : T.ராகினி | மனைப் பொருளியல் | : S.தர்சி |
| ICT | : R.இராஜேஸ்வரன் | English | : S.Jaisan |

ACA கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்

(சுன்னாகம் ப.நோ.கூ. சங்க எரிபொருள் நிரப்பு நிலையம் முன்பாக)

A/L 2014

கலை, வர்த்தக கணித உயிரியல் பிரிவுகள்

மாணவர்கள் விரும்பும் பிரபல ஆசிரியர்கள் இப்பொழுது எமது நிறுவனத்தில்...

ஆரம்பம் 31.03.2012 (சனி) மாலை - 3 மணி

கலை, வர்த்தக பிரிவுகள்

| கணக்கீடு | வணி. கல்வி | பொருளியல் | தமிழ் |
|---|---|---|---|
| D.SAM | B.S. பசில் | S.S. சிறி | இரா. அகிலன் |
| நா/அரங் | இ. நாகரிகம் | அளவையியல் | வரலாறு |
| மங்களேஸ் | ஜெயக்குமார் | E.S. பவன் | R.S. சந்திரன் |
| அரசியல் | புவியியல் | விவசாயம் | இ. சமயம் |
| பொன். சந்துரு | தினேஸ் | சசிகரன் | மனோஜ் |
| சித்திரம் | மனையியல் | கிறிஸ்தவம் | |
| மதீஸ் | ரஜித்தா | வசந்தன் | |

கணித, உயிரியல் பிரிவு

| இ. கணிதம் | உயிரியல் | இரசாயனவியல் | பௌதீகவியல் |
|---|---|---|---|
| ஐங்கரன் | குருபரன் | வாகீசன் | பார்த்திபன் |

ஞானோதய அக்கடமி

கண்டி வீதி,சாவகச்சேரி பருத்தித்துறை வீதி , கொடிகாமம்

(இரு இடங்களிலும் )

அனுபவமும் ,சிறப்பு தேர்ச்சியும் வாய்ந்த யாழ் ,வடமராட்சி மற்றும் தென்மராட்சி ஆசிரியர்களின் வழிகாட்டலில்

A/L 2014 கலை,வர்த்தகப் பிரிவுகள்

ஆரம்பம்:-31.03.2012 -சனிக்கிழமை

சாவகச்சேரியில் .At 9.00 am கொடிகாமத்தில் .At 11.00 am

கலைப் பிரிவு

தமிழ் -திரு.முகுந்தன்

புவியியல் - திரு.செந்தூரன்

வரலாறு- திரு. விஜயருபன் (விக்கி)

அரசியல் - திரு.சந்துரு

இந்துநாகரிகம்- திரு. ஜோதீஸ்வரன்:- திரு.செல்வா

நாடகமும் அரங்கியலும் -திரு. றஜித்குமார்

விவசாயம்-திரு.சசிக்குமார்

வர்த்தகப் பிரிவு

பொருளியல்-திரு .m.c.சுதாகரன்

கணக்கீடு- திரு.திவம்.

வணிகக்கல்வி- திரு. S.முகுந்தன் (கொழும்பு பிரபல ஆசிரியர்)

திரு.சிவராசா (யாழ் ,வடமராட்சி பிரபல ஆசிரியர் )

பொது ஆங்கிலம் -திரு. நிஷாந்தன்

விரும்பிய இடங்களில் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும் , நிர்வாகம்


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.03.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.